


# Others

IHQ WOMEN'S BIBLE STUDIES



# Others

IHQ WOMEN'S BIBLE STUDIES

# முன்னுரை

கிறிஸ்துவுக்குள் அன்பான நண்பர்களே,

*மற்றவர்கள்* என்ற தலைப்பில் அகில உலக தலைமை அலுவலகத்திலிருந்து பெண்கள் ஊழியங்களுக்கான வேதாகம பாடங்களுக்கு உங்களை சமர்ப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். நாம் உறுதியோடும், தைரியத்தோடும், நம்பிக்கையோடும், மற்றவர்களோடு நடக்க நம்மை தேவன் அழைத்திருக்கிறார் என்பதை நான் மிக ஆழமாக நம்புகின்றேன். நம்முடைய இருதயங்கள் தேவனோடு இணைந்திருக்கும் ஆனால் நம்முடைய கரங்களோ பெண்களுக்காகவும், பெண்பிள்ளைகளுக்காகவும், ஆண்களுக்காகவும், ஆண்பிள்ளைகளுக்காகவும் உலகத்தைச் சுற்றி நீட்டப்பட்டிருக்கும். நம்முடைய வாழ்வின் செயல்பாடுகள் மூலமாக மற்றவர்களை நேசிக்க தேவன் நமக்கு அழைப்பு விடுத்திருக்கிறார். ஆனால் மற்றவர்கள் என்று பேசுவது மட்டுமின்றி, ஆவியோடு மற்றவர்களோடு இணைந்து அவர்களின் பாடுகள் சந்தோஷங்களை ஒரு சமூகமாக கவனிக்க நாம் முற்பட வேண்டும். ஒருவேளை இது உங்களுக்கு அழிவின் காலங்களில் அநீதிகளுக்கு எதிராக நடைமுறை வாழ்க்கையோடும் ஜெபத்தோடும் அதனைக் குறித்து பேசுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதும் போல தோன்றலாம். ஒருவேளை, நீங்கள் மற்றவர்களோடு வாழும் உங்கள் சமூகத்தில் இது புதிய கலாச்சாரத்தையும் இதர புதிய காரியங்களையும் நடைமுறைப் படுத்துவதற்கு உங்களுக்கு தொடர்ந்து கிடைக்கும் ஒரு அரிய வாய்ப்பாகவும் இருக்கலாம்.

ஜெனரல் வில்லயம பூத் வயது முதிர்ந்த நாட்களில் அவரைக் குறித்தக் கதை ஒன்று உண்டு. அந்தக் கதை நம்முடைய இந்த ஊழியத்திற்கான குறிவாக்கியத்தின் முக்கியத்துவத்தை விளக்குவதாக அமைந்திருக்கிறது. ஸ்தாபகர் அவர்கள் ஒரு பெரிய கன்வென்ஷன் கூட்டத்தில் பேசும்படி அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவருடைய உடல் ஆரோக்கியம் இதற்கு இடமளிக்காதபடியால் அந்தக் கூட்டத்திற்கு போக முடியாமல் ஒரு தந்தி ஒன்றை அனுப்பினார். அந்த மகானுடையப் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். கூட்டத்தில் வந்திருப்போர் மிகுந்த ஆர்வத்தோடு எதிர்பார்த்திருந்த வேளையில் அந்த தந்தியினை ஒருவர் பிரித்தார். அதில் காணப்பட்ட ஒற்றை வார்த்தை 'மற்றவர்கள்' என்பதாகும்.

இரட்சணிய சேனையாருக்கு ஜெனரல் ப்ரையன் பெடில் - ன் ஊழியத்திற்கான அழைப்பு 'ஊழியத்தில் ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்' என்பதாகும், 'யுத்தம் ஆயத்தமாயிருக்கிறது', 'பொறுப்பெடுத்துக் கொள்ளுங்கள்.' மற்றவர்களை இந்த அன்பிற்குள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அந்த ஜெனரலின் அழைப்பைக் குறித்து எழுதும்போது 'யாதொரு பாரபட்சமின்றி கிறிஸ்துவின் நாமத்தில் மற்றவர்களுடைய தேவைகளை சந்திக்க வேண்டும் என்பதை நியாபகத்தில் கொண்டு நாம் குற்றம் சாட்டப் படாதவர்களாய் கடிந்து கொள்ளுதல் இல்லாமல் பிறரை நடத்தவும், கருணைகூரவும் வேண்டும், என்று கூறுகிறார். இதன் அடிப்படையில் இந்த வேதபாடங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. இந்த பாடங்கள் அனைத்தும், மற்றவர்களும் தேவனால்

நேசிக்கப்படுகிறவர்கள் என்பதைக் காட்ட நாம் எவ்வளவு விருப்பத்தோடும், உற்சாகத்தோடும். ஆர்வத்தோடும் இருக்க வேண்டும் என்பதை மையமாகக் கொண்டுள்ளதோடு அவர்களை இரட்சணிய சேனைக்குள் 1 கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் அன்பின் சட்டங்களின்படி நாம் வரவேற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றது. இந்த தொடர் பாடங்கள் 1 கொரிந்தியர் 13:5-ன்படி அன்பு அயோக்கியமாதை செய்யாது, பிறரை அவமதிக்காது - என்ற வசனத்தை பிரதிபலிக்கின்றது.

இயேசுவை பின்பற்றுகிறவர்களுக்கு மற்றவர்களை அன்புகூர வேண்டும் என்ற இந்த அழைப்பு யாதொரு சந்தேகத்தையும் தருவதில்லை. நாம் மற்றவர்களை நேசிக்கும் போது, இயேசு கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய அடையாளத்தை அது வெளிப்படுத்தும். நாம் அவரை நேசிக்கும் அன்பினால் நிரப்பப்பட இயேசு நம்மை அழைக்கின்றார். அந்த அன்பு நம்மை நாம் இன்னும் நெருக்கமாக அவரில் வளரவும் அவரைக் கிட்டிச் சேரவும் செய்யும். யோவான் 13:34-35 கூறுவது போல "உங்களுக்கு புதிய கட்டளையைக் நான் கொடுக்கிறேன் ………. இதனால் நீங்கள் என்னுடைய சீஷர்களாயிருப்பீர்கள் …."

இந்த வார்த்தைகளுக்குள் இணையும் ஒவ்வொருவரும் தேவனுடைய பிரசன்னத்தை தங்கள் இருதயத்திற்குள் கொண்டிருப்பார்கள் என்பதே உங்கள்களுக்காக நான் ஏறெடுக்கும் ஜெபமாகும். மற்றவர்கள் என்பது நம்முடைய ஊழியதின் பிரதான நோக்கமாயிருக்க பரிசுத்த ஆவியானவர் உங்கள் உள்ளங்களை நிரப்ப நான் ஜெபிக்கிறேன். தேவனைக் கனப்படுத்தும், மற்றவர்களை சேர்த்துக் கொள்ளும் இருதயம் கொண்டோர் அனைவருக்கும் இந்த பாடங்கள் ஒரு பெரும் வளமாக இருக்கவும் நான் ஜெபிக்கிறேன். இந்தப் பாடங்கள் அனைத்தும் பெண்களாகல் தயாரிக்கப்பட்டாயினும் இது பெண்களுக்கு மாத்திரமே உரியதல்ல. சகல வயதுடையோரும், எந்தக் கலாச்சாரத்தை கொண்டவரும், எந்த தேசத்தை சார்ந்தோரும், எந்த பாலினத்தவரும் இதை பயன்படுத்தவும் அதனால் நமது சிருஷ்டிக் கர்த்தரின் அழகிய பன்முகத்தை ரசித்து மகிமைப் படுத்தவும் நான் ஜெபிக்கிறேன்.

நாம் வலிமையான சத்தியத்திற்கும் பரிசுத்தாவியின் தைரியத்திற்கும் சாட்சிகளாயிருக்க விரும்புகிறோம். நம்பிக்கையும், சத்தியத்தையும், மாற்றத்தையும், சமாதானத்தையும் எதிர்பார்த்து காத்திருக்கும் இந்த உலகத்தில் நாம் அனைவரும் அவருடைய சத்தமாகவும், அவரது கரங்களாகவும், பாதங்களாகவும் இருக்க நம்மை அவர் சக்திபடுத்துவார் நாம் என்பதை நாம் அறிவோம்.

இதை வாசிக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக!

### "நாம் மற்றவர்களை நன்றாக நேசிக்கும்போது கிறிஸ்துவில் உள்ள நம்முடைய அடையாளம் வெளிப்படும்"

கமிஷனர் ரோசாலி பெடில்

அகில உலக பெண்கள் ஊழியங்களின் தலைவி

பாடம் - 1

**சமாரியா வழியாக நடப்போம்**

யோவான் 4: 3- 9

**மேஜர் ஏமிரியர்டன்**

இந்த வேத பகுதியை நாம் பார்க்கும்போது பிரபலமான இந்த அதிகாரத்தில் 3 முதல் 9 வரை உள்ள வசனங்கள் மிகவும் கருத்துச்செறிவுள்ளவைகளாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவோம். இயேசுவுக்கும் சமாரியா பெண்ணுக்கும் இடையிலான உரையாடலின் முழுமையும் இந்தக் மேற்குறிப்பிட்ட பகுதியில் இடம்பெறாவிடினும், உண்மையாகவே இதற்கு முன்பே குறிப்பிடத்தக்க ஒன்று இந்த பகுதியில் நடந்துள்ளதை புரிந்து கொள்ள முடிகின்றது. இந்த வேத பகுதியானது,பண்டைய பாலஸ்தீன சமூகக்கட்டமைப்பின் அடிமட்டத்தில் வாழ்ந்துவந்த மனிதனையும், குறிப்பாக அவமானமாகக் கருதப்பட்ட பெண்களை,இயேசு எவ்வளவாய் உயர்த்தி மதிப்பிடுகின்றார் என்பதை விளக்குவதாக அமைந்திருக்கிறது. இந்த வேத பகுதியின் தொடக்கமானது இயேசு கிறிஸ்து, இனம் மற்றும் கலாச்சார பாகுபாட்டை புறக்கணித்தார் என்பதை காட்டுகிறது.

கிமு 722-ல் வலிமைமிக்க நாடாகிய அசீரியா, இஸ்ரவேலின் வடக்கு ராஜ்ஜியத்தை தன்னோடு இணைத்திருந்தது. ஆசிரிய மன்னர் தன் நாட்டு அங்கு குடியமர்தியிருந்தார். அந்த நாட்டில் இருந்த இஸ்ரவேலர்களும் குடியமர்த்தப்பட்ட ஆசிரியர்களும் தங்களுக்குள்ளாக திருமணம் செய்துகொள்ளத் தொடங்கினர். இயேசுவின் காலத்தில் இத்தகைய மக்கள் வாழ்ந்துவந்த பகுதி சமாரியா என அழைக்கப்பட்டது. முதல் நூற்றாண்டு யூதர்கள் சமாரியர்களை இழிவாகக் கருதினர். ஏனெனில் அவர்களின் முன்னோர்கள் இத்தகைய திருமணங்களினாலும், மார்க்க வழக்கங்களினாலும் ஒன்றோடொன்று கலந்து எபிரேய இரத்தபந்தங்களையும் அவர்களின் விசுவாசத்தையும் கரைபடுத்தி மதிப்பிழக்கச் செய்தார்கள். அவர்கள் அனைவரும் கலப்பின ஜாதியினராகவும் அசுத்த சந்ததியாராயும் வாழ்ந்து வந்தனர்.

**நாம் எல்லா இனத்தாருடனும் கலாச்சாரத்துடனும் திறந்த இருதயத்துடன் ஜனங்களை ஆச்சரியத்துக்குள்ளாக்கும் ரீதியில் இயேசுவை பின்பற்றுகிறவர்களாயிருக்கிறோம்.**

யோவான் 4:3-4 கூறுகிறது, இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு செல்ல சமாரியா வழியாய் யாத்திரை சென்றார். இது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. ஏனென்றால் இயேசு சமாரியா வழியாக செல்வதற்கு எந்த காரணமும் இல்லை. யூதர்கள் யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு எப்போது பிரயாணம் செய்தாலும், அவர்கள் சமாரியா வழியாக செல்ல மாட்டார்கள். சமாரியாவைச்சுற்றி வருவதால் ஏற்படும் கூடுதலான பயண தூரத்தையும் இதனால் உண்டாகும் இன்னல்களையும் பொருட்படுத்தாமல் சமாரியாவுக்குள் பிரவேசிக்காமல் சமாரியாவைச் சுற்றிதான் செல்வார்கள்.

பிரெண்டா சால்டர் மெக்னீல் என்பவர் தனது*"நம்பகமான சாட்சி (Credible Witness)"* என்ற புத்தகத்தில் இயேசு சமாரியாவின் வழியாய் செல்ல வேண்டி இருந்தது என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் அவர் தகப்பனாகிய தேவனின் இருதயத்தால் நிரப்பப்பட்டிருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார் (பக்கம் 42). சமாரியா வழியாக நடப்பது பெரும்பாலான யூதர்களுக்கு நினைத்துப் பார்க்கவே முடியாததெனினும்,இயேசுவுக்கு அது மிக முக்கியமான நிகழ்வாக இருந்தது, எல்லா மனிதர்களையும் அவர் சமமாக எண்ணினார் என்பதை நிரூபிப்பதற்காக அவர் அவ்வாறு பிரயாணத்தை மேற்கொண்டார்.

இந்த வசனங்களில் இருந்து இயேசுவின் மூன்று காரியங்களை நாம் பிரதிபலிக்கலாம்.

### 1. இயேசு அந்நியதேசத்திற்குள் செல்ல துணிந்தார்

பல்வேறு கலாச்சார,இனங்கள் ஒன்றாக சேர்ந்து வாழும் தற்கால சூழலில் அனைத்து மக்களுக்காகவும் நமது தேவாலயங்கள் மற்றும் நமது வீடுகளின் கதவுகள் திறந்திருக்க வேண்டும். அதையும்தாண்டி சொந்த இடங்களைவிட்டு நாம் அயலகத்தாரின் எல்லைகளுக்குள் செல்லும்போது அவர்களிளோடு திறந்த இருதயத்துடன் அவர்களை நேசிக்கவும் அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். ஏனென்றால்,நம்மால் முடிந்தவரை நமது விசுவாசத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள இதுவே ஒரு காரணமாக அமையும். நம்மிலிருந்து வேறுபட்டவர்கள் என்பதால் அவர்களிடமிருந்து நாம் விலகியிருக்க நாம் அழைக்கப்படவில்லை. "*நீங்கள் இந்த உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்*"(மார்க்கு 16: 15), இதற்காகவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

நாமும் கிறிஸ்துவுக்குள் இருக்கும் மற்ற சகோதர சகோதரிகளை நன்றாய் புரிந்து கொள்வதற்காகதான் பற்பல தேசங்களுக்கு செல்கிறோம். அமெரிக்காவில் வாஷிங்டன் டி.சி-க்கு அருகில் நாங்கள் ஆராதனைக்கு சென்ற ஒரு படைஸ்தலத்தில் சிலி நாட்டைச் சார்ந்த அங்கத்தினர்கள் எங்களில் சிலர் வட அமெரிக்கர்களானபடியால் அவர்களின் சொந்த உணவுகளை வழங்கும் உணவகத்திற்கு அழைத்து சென்றது எனக்கு நினைவிருக்கிறது. 20 பேர் கொண்ட குழுவில் இரண்டு பேர் மாத்திரம் ஸ்பானிஷ் மற்றும் ஆங்கிலம் பேசினார்கள். மற்றவர்கள் எல்லோரும் வேறு மொழியை பேசக்கூடியவர்கள். ஆனால் அந்த கூட்டாய்மையில் இயேசுவின் அன்பையும் சந்தோஷத்தையும் அனைவராலும் உணர முடிந்தது.

### 2. இயேசு இரண்டு கலாச்சாரங்களும் சங்கமிக்கும் இடத்தை தேர்ந்தெடுத்தார்

யோவான் 4ல் நடைபெற்ற இந்த சந்திப்பு யாக்கோபின் கிணற்றின் அருகில் நடந்தது. சமாரியர்களும் பாரம்பரிய யூதர்களும் தங்கள் பிதாவாகியயாக்கோபின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். அதன் அடையாளமாகதான் இந்த கிணறும் காணப்பட்டது. மனிதர்களாகிய நமக்குள்ளும் ஏராளம் ஒற்றுமைகள் காணப்படுகிறது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்வதுதான் புத்திசாலித்தனம். நாம் அனைவரும் நமது குடும்பத்தை நேசிக்கிறோம், நன்றாக சிரித்து மகிழ்ந்து நமது வாழ்க்கையை அர்த்தமுள்ள வாழ்க்கையாக

வாழ விரும்புகிறோம். நாம் சந்தோஷமான உரையாடல்களை செய்யும்போது அந்த ஒற்றுமையை விட சிறந்தது எதுவுமில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

நானும் எனது கணவரும் வாஷிங்டனில் உள்ள *சியாட்டில், வாஷிங்டன்* படைஸ்தல உத்தியோகஸ்தர்களாக பணியாற்றினோம். எங்கள் படைஸ்தலத்தில் காங்கோ ஜனநாயக குடியரசு நாட்டைச் சார்ந்த சில வீரர்கள் இருந்தார்கள். எங்கள் நாட்டில் நாங்கள் காணிக்கை சேகரிக்கும் போது காணிக்கை தாம்பாளம் ஜனங்கள் மத்தியில் கடந்து வருவது போன்ற வழக்கம் அவர்களது நாட்டில் காணப்படவில்லை.அவர்களோ காணிக்கை தருணத்தில் நடனமாடிக் கொண்டே முன்னால் சென்று காணிக்கை படைக்கின்றனர். இது அங்கு இருந்த மற்ற ஜனங்களுக்கு இடையூறாக இருந்ததால் அதை நாங்கள் மாற்ற முயற்சி செய்ததோடு, அதற்குரிய புதிய வழிமுறைகளைக் கைக் கொண்டோம்.

**3. இயேசு உண்மையான ஐக்கியத்தை வெளிப்படுத்தினார்.**

யோவான் 4-ம் அதிகாரத்தில் இயேசு அவளிடம் குடிக்க தண்ணீர் கேட்டது தான் மிக ஆச்சரியமான காரியமாகும். டோனி இவான்ஸ் என்பவர் எழுதும்போது,இயேசு தனது யூத உதடுகளை ஒரு சமாரியக் கோப்பையில் வைப்பது ஒரு நெருக்கமான ஐக்கியம் மற்றும் அனலான ஏற்றுக்கொள்ளுதலின் வெளிப்பாடாகும் *(Oneness Embrced, p.61).*

நானும் எனது கணவரும் கைக்குழந்தை அல்லாத இரண்டு குழந்தைகளை தத்து எடுத்தோம். முதல்முறையாக அவர்களுடன் எனது தேநீர் கோப்பையை பகிர்ந்து கொண்ட போது ஒரு கணம் திகைத்து நின்றோம். நான் பெற்றெடுத்த குழந்தைகளுடன் இருந்த நெருக்கத்தைப்போன்ற நெருக்கத்தை அந்த குழந்தைகளுடன் உருவாக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்தேன். சமாரியா பெண்ணை யூதர்கள் இழிவானவர்கள் என்று நினைக்கும் போது அவள் அடைந்த அதிர்ச்சியை என்னால் கற்பனை செய்து பார்க்க முடிந்தது. ஆனால் இயேசு அவள் இழிவானவள் என்று பார்க்காமல் அவளிடம் இருந்த கோப்பையில் இருந்த தண்ணீரைக் கேட்டார். நாம் ஒருவேளை நமது கோப்பைகளை பகிர்ந்து கொள்ளாமல் இதுவரைக்கும் இருந்திருக்கலாம். ஆனால் இயேசு நமக்கான எத்தகைய மாதிரியை காட்சிப்படுத்தியிருக்கிறார்! அனைத்தின மக்களுக்காக திறந்த இருதயத்தோடு இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுவதினால் ஜனங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தவும் கூடும். இதுபோன்ற ஒரு சமாரியா வழி யாத்திரைக்கும் நம்மையும் நாம்ஆயத்தப்படுத்துவோம்.

**ஜெபம்**

இயேசுவே நீர் உருவாக்கின அனைத்து ஜனங்களையும் மதிப்பதற்கும் மரியாதை செய்வதற்கும் எங்களுக்கு கற்றுத் தாரும். நீர் எங்கள் அனைவரையும் சமமாகநேசிக்கிறீர். நாங்களும் அவ்வண்ணமே செய்ய உதவியருளும் ஆமென்.

**மேஜர் ஏமி ரியர்டன்,அமெரிக்க மேற்கு மாகாணம்**

மேஜர் ஏமி ரியர்டன் கலிபோர்னியா பயிற்சி கல்லூரி துணை முதல்வர் ஆவார். ஐந்து குழந்தைகளுக்குத் தாயான இவர் சமீபத்தில் பாட்டியாகியுள்ளார்.

**விவாதிக்க**

1.மற்றொரு கலாச்சாரத்தை ஆராய நீங்கள் என்ன முயற்சி செய்வீர்கள்?

2. வேறொரு இனம் அல்லது கலாச்சாரத்தின் மீது உங்களுக்கு ஏதேனும் மோசமான உணர்வுகள் உள்ளதா? இதை மாற்றும் இதயத்தை தேவனிடம் கேட்க தயாராக உள்ளீர்களா?

---

பாடம் - 2

## ஓவ்வொரு சூழ்நிலையிலும் கடவுளை நம்புங்கள்

**எரேமியா 29:11**

**கேப்டன் ஆஸ்ட்ரிட் சிஸ்டென்சன்**

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

வேதத்திலே எரேமியா மிகப்பெரிய தீர்க்கதரிசி. தீர்க்கதரிசியி,ருப்பதற்கு விருப்பம் இல்லாதவராயும் மிகுந்த மன அழுத்தத்துடன் காணப்பட்ட மனுஷன் தான் இந்த எரேமியா.

தீர்க்கதரிசியிருப்பதற்கு விருப்பமில்லாத ஒரு மனுஷனாக இருந்தாலும், அவரின் அழைப்பில் அவர் உண்மையுள்ளவராக இருந்தார். அவர் ஜனங்களுக்கு தீர்க்கதரிசனம் சொல்வதற்காக தேவனால் அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பு என்னவென்றால், ஜனங்கள் பாவத்தில் வாழ்கிறார்கள் என்பதை சொல்லி, அவர்கள் மனம் திரும்பாத பட்சத்தில் நாடு கடத்தப்படுவார்கள் என்பதையும் தெளிவாக அவர்களுக்கு அறிவிப்பதுதான் அவரது பணியாகும். ஜனங்கள் மனம் திரும்பவில்லை. எரேமியா உரைத்த தீர்க்கதரிசனத்தின்படியே ஜனங்கள் நாடு கடத்தப்பட்டார்கள்.

ஜனங்கள் அனைவரும் தங்களின் சொந்த தேசத்திலிருந்து பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். ஆனால் அவர்களுக்கு பாபிலோனில் வாழ விருப்பமில்லை. சொந்த பரிசுத்த சீயோனாகிய எருசலேமை அவர்கள் தவற விட்டார்கள்.

தேவன் எரேமியாவிடம் சொன்னது என்னவென்றால், ஜனங்கள் தங்களுடைய வீடுகளை கட்டி, தோட்டங்களை நட்டு, அதிலிருந்து வரும் பழங்களை உண்ண வேண்டும் ,என்று சொல்லச் சொன்னார். அவர்கள் திருமணம் செய்து கொண்டு மகன்களையும் மகள்களையும் பெறுவார்கள். அவர்களின் மகன்கள் மற்றும் மகள்கள் திருமணம் செய்து கொள்வார்கள். அதனால் அவர்கள் குழந்தைகளை பெறுவார்கள். அவர்கள் எண்ணிக்கையில் பெருகுவார்கள், குறைய மாட்டார்கள். அவர்கள் எங்கே அமர்த்தபட்டர்களோ அங்கே மகிழ்ச்சியையும் செழிப்பையும் தேடுவார்கள். அவர்கள் நிமித்தம் அந்த தேசம் செழிப்பாகும். அவர்களும் செழித்தோங்குவார்கள்.

எரேமியாவின் மூலமாக 70 ஆண்டுகள் கடந்த பிறகு தேவனின் வாக்குறுதியினால் ஜனங்கள் தங்கள் சொந்த தேசத்தில் நிரப்பப்படுவார்கள்.

தேவனுக்கு முன்பாக சரியான காரியத்தை செய்வதற்கு நாம் மிகவும் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும். தேவன் நமது இதயத்திலும் மனதிலும் வைக்கும் அனைத்தையும் அவருக்குள்ளாக கட்டி எழுப்ப வேண்டும்.

தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் திட்டங்களை நன்கு அறிவார். அவைகள் உங்களுக்கு செழிப்பை கொண்டு வரும், உங்களுக்குத் தீங்கை விளைவிக்காது, உங்களுக்கு நம்பிக்கையும் எதிர்காலத்தையும் அளிக்கும்.

இது மிகவும் நன்கு அறியப்பட்ட வசனம். ஆனால் பெரும்பாலும் இது நமது சூழலுக்கு வெளியே பயன்படுத்தப்படுகிறது.

நாம் இந்த வசனத்தை வாசிக்கும் போது தேவன் உடனடியாக மகிழ்ச்சியை தருவது போலிருக்கும். அதே தேவன் இப்பொழுது நமது வாழ்க்கையில் இருக்கிறார். மேலும் நமது மகிழ்ச்சிக்கான தேவையை இப்போது இங்கே அவர் முழுமையாக நிரப்புவதற்கும் ஆயத்தம் உள்ளவராக இருக்கிறார்.

ஆனால் அந்த வசனம் இதைக் கூறவில்லை. நாம் இந்த வசனத்தை மிகவும் கூர்ந்து கவனித்தால் அதை நம்மால் தெளிவாக உணர முடியும். இந்த வார்த்தை பெரும் மன அழுத்தத்தின் கீழிருக்கும் ஜனங்களுக்காக கூறப்பட்டது. அவர்கள் இருக்கும் தேசம் அடிமைத்தன தேசம். அவர்கள் அடிமைத்தனத்தின் கீழ் இருக்கிறார்கள். ஆனால் அந்த அடிமைத்தனத்தின் கீழாக அவர்கள் இருக்க விரும்பவில்லை. அவர்கள் இன்னொரு தேசத்தில் அடிமையாக இருக்கிறார்கள். தேவன் அவர்களிடம் கூறுகிறார் உங்கள் வாக்குத்தத்தம் நிறைவேற நீங்கள் அந்த தேசத்தில் 70 ஆண்டுகள் இருக்க வேண்டும்.

உலகில் நாம் எங்கு வாழ்கிறோம் என்பதை பொறுத்து, உறுதியற்ற தன்மை, மனசோர்வு, விவாகரத்து, கவலை, வறுமை, துன்புறுத்தப்படுதல், நோய், அல்லது விரக்தி ஆகியவற்றால் நம்முடைய வாழ்க்கை பாதிக்கப்படும். பாபிலோனில் நாடு கடத்தப்பட்ட யூதர்களைப் போல இன்றைய நாட்களிலும் அநேகம் பேர் நாம் அடிமைத்தனத்தின் கீழும், அடிமைத்தனத்தின் கீழ் வாழ விரும்பாத ஜனங்களாகவும் நாம் உள்ளோம்.

மேலும் நாம் இந்த உலகில் எங்கிருந்தாலும் இஸ்ரவேலர்கள் எவ்வாறு அடிமைத்தனத்தின் பாடுகளை அனுபவித்தார்கள் என்பதை அறிந்தால் இந்த நாட்களிலும் அதே சூழ்நிலை காணப்படும் ஜனங்களின் வலியை நாம் அறிந்துகொண்டு அவர்களை விடுதலையாக்க நம்மால் முடிந்த காரியங்களை நம்மால் செய்ய முடியும்.

பிலிப்பியர் 3:20

*"நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் ,ருக்கிறது. அங்கே இருந்து கர்த்தராகயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் ,ரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்."*

நாம் எல்லோரும் தேவனுக்குள்ளாக ஒன்றாக வாழ்வதற்காக படைக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் நாம் இந்த உலகத்தில் வாழ்வதினாலே தேவனால் பிரிக்கப்பட்டு பற்பல நாடுகளில் நாம் நாடு கடத்தப்பட்டதை போல பிரிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நமது வாழ்க்கையில் சில இடங்களில் சில சமயங்களில் வாழ முடியாத நிலையில் நாம் இருக்கலாம். பல்வேறு விதமான சூழ்நிலையில் அடிமைத்தனத்தின் அழுத்தத்திற்கு உள்ளாக நாம் இருக்கலாம். அவை எல்லாம் நமது வாழ்க்கையில் காணப்படும் நம்பிக்கையை அளிப்பது போன்றிருக்கும். இன்றைக்கும் இதே போன்ற மன அழுத்தம், நமது ஊழியத்திலும், திருமண வாழ்க்கையிலும், நமது குடும்ப வாழ்க்கையிலும், நமது வேலையிலும், நமது படிப்பிலும் இருக்கலாம். சில சமயத்தில் நமது சொந்த சமுதாயம் கூட நம்மை மன அழுத்தத்தில் நடத்தலாம்.

எரேமியா நாடு கடத்தப்பட்டிருக்கிற தமது ஜனத்தொடு தேவனின் வார்த்தையை பேசுகிறார். நீங்கள் உங்களுக்கு வாழ பிடிக்காத இந்த ,டத்திலும் வாழ பழகி கொள்ளுங்கள். நீங்கள் எந்த பட்டணத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அந்த அந்தப் பட்டணத்தை உங்களுக்காக விரிவாக்கிக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு புதிய வாழ்க்கை தன்மையை உருவாக்கி, உங்கள் வாழ்க்கையை வாழுங்கள். இப்படி நீங்கள் வேரூன்றி வளரும் போது ஒரு நாளில் நீங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உங்கள் பட்டணத்திற்கு செல்ல முடியும்.

தேவனுக்கு முன்பாக எது சரியானது என்பதிலே முழு கவனத்தையும் செலுத்தி, நமது இருதயத்திலும் எண்ணத்திலும் தேவன் எதை விதைத்திருக்கிறாரோ, அதை நாம் கட்டி எழுப்புவோம். இதே காரியத்தை தான் இந்த வேத பகுதியானது நம்மோடு கூட பேசுகிறது. நாம் எங்கேயிருந்தாலும் சரி, நாம் எப்படிப்பட்ட சூழலில் இருந்தாலும் சரி, இந்த வார்த்தை இன்று நமக்கு சரியாக பொருந்துகிறது .

நாம் இப்போது உள்ள சமூகத்தில் வாழ்கிறோம். மற்ற மக்களோடு ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் அந்த வாழ்க்கையை சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும். அப்பொழுதுதான் நாம் அதனால் ஆசிர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியும். நமது கண்களை நமது வீட்டின் மீதும் நமது தேசத்தின் மீதும் பதிய வைப்போம். ஆண்டவராகிய தேவனே நமது வீடும் நமது தேசமுமாவார்.

இந்த வாக்குத்தத்தம் யூதா ஜனங்களுக்கு கொடுக்கப்பட்டது. நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்கு கொடுக்கும்படி நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல சமாதானத்துக்கு ஏதுவான நினைவுகளே. இது நம்முடைய வாழ்க்கையிலும் இன்றைக்கு நிறைவேற போகிறது.

தேவன் நமது தகப்பனாயிருக்கிறார். அவர் வாக்குறுதியை காப்பாற்றுகிறார். இந்த அற்புதமான வாக்குத்தத்தம் நமது வாழ்க்கையில் எந்த சூழ்நிலையிலிருந்தாலும் தேவன் நமக்காக உயர்வான திட்டங்களை நமது வாழ்க்கையில் வைத்துள்ளார் என்பதே நிச்சயமான உண்மை. நம்பிக்கையும் செழிப்பையும் கொண்டு வாழ்வதுதான் நமது வாழ்க்கை. இந்த வாக்குறுதியில் நாம் நிலைநிற்கும்போது ஆசீர்வாதத்தை நாம் பெற்றுக் கொள்வதோடு அதே நம்பிக்கையில் நாம் மற்ற மக்களையும் அணுக முடியும்.

இதுதான் ஆண்டவராகிய தேவன் தொடக்கத்திலிருந்து நமக்காக வைத்திருக்கிற திட்டம்.

ஜெபம்:

தேவனாகிய தகப்பனே, என்னைக் குறித்து நீர் வைத்திருக்கிற நம்பிக்கைக்காகவும், எதிர்கால திட்டங்களுக்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன். என்னைச் சுற்றிலும் எந்த காரியம் நடந்தாலும் சரி, நான் என்ன நினைத்தாலும் சரி, நீர் என்னை உமது விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, எனக்கு வாக்குரைத்ததை எனக்குத் தர வல்லவர் என்பதை நான் விசுவாசிக்கிறேன். ஆமென்.

**கேப்டன் ஆஸ்ட்ரிஸ் கிறிஸ்டியன்**

டென்மார்க் மற்றும் கிரின்ஸ்லாந்து

நான் தற்போது மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களாயிருக்கிற டெண்டர் டென்மார்க்கில் பணியாற்றுகிறேன். நான் ஒரு கேப்டனை திருமணம் செய்துள்ளேன். எங்களுக்கு ஐந்து குழந்தைகள் உள்ளனர். அவர்களின் வயது 19, 17, 15 மற்றும் 9 வயது உள்ள ரெட்டையர்கள். நான் தேவனின் அழைப்பை ஏற்று, இரட்சண்ய சேனையில் 11 வருடங்களாக ஊழியத்தை செய்து வருகிறேன்.

கலந்துரையாடல்:

1. நான் தற்போது வாழும் இடத்திலிருந்து எரேமியா 29 அதிகாரத்தின் மூலமாக என்ன கற்றுள்ளோம்?

2. உங்கள் வாழ்க்கையில் உங்களை பாதுகாப்பு அற்றதாக மாற்றும் பகுதிகள் உள்ளதா? மேலும் உங்கள் வாழ்க்கை முழுமையாக வாழாமலிருப்பதற்கான காரணம் என்ன?

3. நம்பிக்கை மற்றும் எதிர்காலம் பற்றிய கடவுளின் வாக்குறுதியை நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்களா?

---

பாடம் 3

**தலைமுறை பன்முகத்தன்மை**

**கொலோசேயர் 1: 16 -17**

**கேப்டன் டாரதி கிறிஸ்டோபர் மேக்வான்**

ஆண்டவராகிய தேவன் எப்போதும் எல்லா மனிதர்களை மதிக்கவும், நேசிக்கவும், கற்றுக் கொடுக்கிறார். இதை நாம் மறந்தாலோ அல்லது புறக்கணித்தாலோ, கடுமையான விளைவுகளை நாம் சந்திக்க நேரிடும்.

அப்படிப்பட்ட விளைவுகளில் ஒன்று தான் தலைமுறை இடைவெளி. தலைமுறை இடைவெளி என்பது தலைமுறையினருக்கு இடையே உள்ள அணுகுமுறைகளில் காணப்படும் வேறுபாடு. இது பல்வேறு தலைமுறையினருக்கிடையே புரிதல் குறைபாடுகளுக்கு வழி வகுக்கிறது. நாம் பணி செய்யும் இடத்திலும், குடும்பங்களுக்குள்ளும், சமூகம், மற்றும் நமது ஊழியத்திலும், இதை நாம் காணலாம். ஒருவரின் வயதின் காரணமாக ஒருவரின் மதிப்பை இழக்க இது நம்மை வழி நடத்தும்.

எப்படியிருப்பினும் தலைமுறை பன்முகத்தன்மை என்பது கடவுளின் வடிவமைப்பு ஆகும். வேதாகமம் முழுவதும் தலைமுறை பன்முகத்தன்மையைக் குறித்தும், தேவன் தமது வேலையை செய்ய எல்லா வயதினரையும் எவ்வாறு அழைக்கிறார் என்பதைக் குறித்தும் தெளிவுபடுத்துகிறது. தேவன் மோசையை குழந்தையாய் இருக்கும்போது பாதுகாத்தார். பின்னர் இஸ்ரவேலின் தலைவராய் மாற்றினார். தேவன் சிறு பையனாக இருந்த சாமுவேலை ஏலி குடும்பத்திற்கு தீர்க்கதரிசனம் சொல்ல உபயோகித்தார். முதியவராாக இருந்த மோசேயைக் கொண்டு அடிமைத்தனத்தில் காணப்பட்ட இஸ்ரவேலரை தேவன் இரட்சித்தார்.

யாத்திராகமம் புத்தகம் தலைமுறை பன்முகத்தன்மைக்கான மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. மோசே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களை விடுவித்து வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் சென்றார். அப்போது யோசுவா காலேப் போன்ற இளைஞர்களை அரவணைத்து சென்றார். அவர்களை தன்னுடைய மரணத்திற்கு பின் இஸ்ரவேர்களை வழிநடத்தும் தலைமைத்துவத்திற்கும் அவர்களை ஆயத்தப்படுத்தினார்.

இந்த உலகத்தில் காணப்படும் அனைத்து தலைமுறையினரும் தேவனுக்கு முக்கியமானவர்கள். வெவ்வேறு தலைமுறைகளை சார்ந்த ஜனங்களை சேர்த்து, அவர்களை வரவேற்று, ஏற்றுக் கொள்வதால் வெவ்வேறு தலைமுறையைச் சார்ந்த அனைவருக்கும் அது நம்பிக்கையையும், தங்களின் சுயமதிப்பையும் அறியவும் உதவுகிறது.

1கொரிந்தியர் 12: 12- 14

*"எப்படியெனில் சரீரம் ஒன்று அதற்கு அவயங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயங்கள் எல்லாம் அநேகமாய் இருந்தும் சரீரம் ஒன்றாகவே இருக்கிறது. இந்த பிரகாரம் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுவாதீனராயினும், எல்லோரும் ஒரே ஆவினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்தானம் பண்ணப்பட்டு எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம் தீர்க்கப்பட்டோம்."* சரீரம் ஒரே அவயமாய் இராமல் அநேக அவைங்களா இருக்கிறது.

**'வேதாகமம் முழுவதும் தலைமுறை பன்முகத்தன்மையை குறித்தும், தேவன் தமது வேலையை செய்ய எல்லா வயதினரையும் எவ்வாறு அழைக்கிறார் என்பதையும் தெளிவுபடுத்துகிறது.'**

மனிதனுடைய உடல் பல்வேறு பாகங்களை கொண்டது. அவையெல்லாம் மனித சரீரத்தை ஆரோக்கியமாகவும் ஒன்றாகவும் செயல்பட வைக்கிறது. அதேபோலத்தான் நாம் தேவனின் ஆலயம், தேவனின் குடும்ப உறுப்பினர்களுமாவோம். பல்வேறு வயது உடையவர்களும், பல்வகையான தாலந்து உள்ளவர்களும் ஒன்றாயிருந்து ஒருவரை ஒருவர் மதித்து அன்பு செலுத்தி மற்றவர்களின் மீது அக்கறை காட்டி வாழ்வதுதான் கிறிஸ்துவின் சரீரமாய் காணப்படுகிறது. நாம் ஒருவரையொருவர் சார்ந்திருப்பது நமது பலவீனம் அல்ல. அது ஒவ்வொருவரின் மீதும் உள்ள அன்பையும் மரியாதையும் காட்டுகிறது. தேவன் நமக்காக கொண்ட நோக்கத்தை பூர்த்தி செய்யவும் இது உதவுகிறது.

**1கொரிந்தியர் 12: 4- 6**

*'வரங்களில் வித்தியாசம் உண்டு, ஆவியானவர் ஒருவரே.*
*ஊழியங்களில் வித்தியாசம் உண்டு கர்த்தர் ஒருவரே.*
*கிரியைகளிலும் வித்தியாசங்கள் உண்டு எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிருக்கிற தேவன் ஒருவரே.'*

தேவ ஊழியத்தை நிறைவேற்றும் விதமாக வயது வித்தியாசம் இல்லாமல் நாம் அனைவரும் வித்தியாசம் வித்தியாசமான வரங்களை பெற்றுள்ளோம். நம் தேவன் ஒருவரே. அவர் மூலமாக இந்த நோக்கங்களுக்காக நாம் அனைவரும் இணைக்கப்பட்டுள்ளோம். நாம் அனைவருக்கும் சொந்த திறன், வரங்கள், புரிந்து கொள்ளுதல், மதிப்புகள், யோசனைகள், பலம், மற்றும் பலவீனம் உள்ளது. ஆனால் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்தால் நம் தெய்வீகத்தில் செழித்து ஆண்டவரும் இரட்சகரான நம்முடைய சர்வ வல்லமை உள்ள பரலோக தகப்பனாகிய தேவனை அவரின் குமாரனாகிய இயேசுவை மகிமைப்படுத்தலாம்.

**ஜெபம்:**

பரலோக பிதாவே, எங்களையும் உமது குடும்பத்தில் ஒருவராக சேர்த்துக்கொண்டபடியினாலே உமக்கு நன்றி. நாங்கள் வெவ்வேறான நபர்கள். பாலினம் மற்றும் வயது மற்றும் வரங்களில் வேறுபட்டிருந்தாலும், நீங்கள் எங்களை உமது நோக்கத்தினால் ஒன்றாக கூட்டி உமது

விருப்பத்தையும் அழகையும் நாங்கள் அனைவரும் காண உதவுகிறீர். எங்கள் வீடுகளிலும், எங்கள் திருச்சபைகளிலும், எங்கள் சமுதாயத்திலும் எங்களுடைய பணியிடத்திலும, ஒருவரையொருவர் மதித்து நேசித்து வேற்றுமையில் ஒற்றுமையை கொண்டாட நாங்கள் விரும்புகிறோம். ஆமென்.

**கேப்டன் பாரதி கிறிஸ்டோபர் மெக்வான்**
**இந்திய மேற்கு மாகாணம்**

நான் கேப்டன் டாரதி கிறிஸ்டோபர் மக்குவான். நான் தற்போது மும்பையில் பெண்களின் ஊழியங்களின் தலைவிக்கு உதவியாளராக பணியாற்றுகிறேன். எனது கணவர் கேப்டன் கிறிஸ்டோபர் ஏ மெக்குவான், மாகாண இளைஞர்ச் செயலாளராக குஜராத்தில் பணியாற்றுகிறார். தேவன் எங்களுக்கு இரட்சண்ய சேனையின் மூலமாக இந்த நியமங்களில் பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததால் மிக்க மகிழ்ச்சியாக உள்ளோம். கடவுள் நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக ஆமென்.

*இதை எழுதும் பொழுது கேப்டன் டாரதி அகில உலக இரட்சணிய சேனை, தெற்காசியாவின் உதவி துணை செயலாளராக புதிய நியமனத்தை ஏற்றுக் கொண்டுள்ளார். .*

**விவாதிக்க:**

1.நீங்கள் எவ்வாறு உங்கள் குடும்பம் சமூகம் மற்றும் தேவாலயத்தில் உள்ள பல்வேறு வகையான வயதினரை மதிக்கிறீர்கள்?

2. உங்கள் குடும்பம் மற்றும் தேவாலயத்தில் உள்ள தலைமுறை பன்முகத்தன்மையின் நிலை என்ன?

---

பாடம் 4

## எல்லாவற்றிற்கும் உயிர் கொடுப்பது தண்ணீர்

யோவான் 4

மேஜர் கிறிஸ்டியன் டி மைன்

ஒரு சமாரிய பெண்மணி தண்ணீர் எடுக்க வந்தபோது, இயேசு அவளிடம் நீ எனக்கு குடிக்க தருவாயா? என்றார். ( அவரின் சீடர்கள் தங்களுக்குரிய உணவை வாங்க பட்டணத்திற்குள் சென்றிருந்தனர்) சமாரிய பெண் இயேசுவிடம் நீர் ஒரு யூதன். நான் ஒரு சமாரிய பெண். நீர் எப்படி என்னிடம் தண்ணீர் கேட்க முடியும்? (ஏனென்றால் யூதர்கள் சமாரியார்களுடன் எந்த தொடர்பும் வைத்துக் கொள்வதில்லை). இயேசு அவளுக்கு பிரதியுத்தரமாக கடவுளின் வார்த்தையையும் உன்னிடம் குடிக்க கேட்பவர் யார் என்பதையும் நீ அறிந்திருந்தால், நீ அவரிடம் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீர் கொடுத்திருப்பார்.

நீங்கள் எப்போதாவது சுத்தமான நீரை குழாயிலிருந்து குடிக்காமல், கிணற்றிலிருந்து குடித்து உள்ளீர்களா? எனக்கு அந்த அனுபவம் உண்டு. அந்த தண்ணீர் சுவையாகவும், மிகவும் இனிமையாகவும், இருக்கும். யாக்கோபுடைய கிணற்றின் தண்ணீர் எப்படி இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடியுமா? யோவான் 4 ல் சொல்லப்பட்டுள்ள யாக்கோபின் கிணறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அதை ஆதியாகமம் 33 ல் காணலாம். யாக்கோபு அந்த நிலத்தை வாங்கி தனது கூடாரத்தை அமைத்தான். அந்த நேரத்தில் யாக்கோபின் மகள் தீனாள் மற்றும் மகன்கள் நிலத்தின் உரிமையாளர்களால் அத்துமீறி தாக்கப்பட்டார்கள். அது யாக்கோபுக்கும் அவரின் மகன்களுக்கும் கோபத்தை உண்டாக்கியது. இது அனைவருக்கும் வருத்தம் உண்டாக்கிய ஒரு சூழ்நிலையாக இருந்தது. கடைசியாக தீனாளுக்கு என்ன நடந்தது என்று வேதாகமம் நமக்கு தெளிவாக கூறவில்லை. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு பிற்பாடும் இந்த கிணறு இன்னும் பலரை தாங்கி வருவது நாம் அனைவருக்கும் தெரிந்தது. யோவான் 4ன் மூலமாக இயேசுவுக்கும் அந்த ஸ்திரிக்கும் இடையே நடந்த சந்திப்பை இது தெளிவாக விவரித்து கூறுகிறது.

இயேசு கிணற்றின் அருகாமையில் வந்த போது தமது சீடர்களை பட்டணத்திற்குள் சென்று பொருள்கள் வாங்க அனுப்புகிறார். அவர் தனியாக இருக்கிறார். ஒருவேளை சோர்வாகவும், தாகமாகவும், கொஞ்சம் தண்ணீர் தேவையாகவும், உணர்ந்திருக்கலாம். நாம் அனைவரும் அறிந்தபடியே அது அந்த நாளின் மதியான வேளை. அந்த சமாரிய பெண் தனக்கும் தனது வீட்டிற்கும் தேவையான தண்ணீர் எடுத்துக் கொள்ளும்படியாக அந்த கிணற்றின் அருகாமையில் அவள் வந்தாள். இந்தச் சூழ்நிலையில் இயேசுவுக்கும் அந்த பெண்ணுக்கும் எந்த சம்பந்தமும் இருந்திருக்க வாய்ப்பு கிடையாது. அவர்களின் பாலினம், கலாச்சாரம், இனம் மற்றும் சமூக அந்தஸ்தின் காரணமாக அவர்கள் சமமாக கருதப்படவில்லை. மேலும் அவள் மக்களின்

கூட்டத்தை தவிர்ப்பதற்காகவே அந்த மதிய வேளையில் கிணற்றில் நீர் எடுப்பதற்காக வந்திருக்கலாம் என்று நான் நம்புகிறேன்.

இயேசு இந்தப் பெண்ணை ஒரு முழு நபராக பார்த்தார் அவளுக்கு மீட்பு மற்றும் மறு சீரமைப்பை வழங்கினார்.

இருப்பினும் இந்த உரையாடல் நடந்த நேரத்தில், இயேசு சரியான இடத்தில், சரியான தருணத்தில், சரியான நாளில், இருந்தார் என்று தான் நான் உணர்கிறேன். நமக்குத் தெரியும் இயேசு அவரிடத்தில் பேசினதும் அவள் மிகவும் ஆச்சரியப்பட்டாள். எப்படியெனில் உடனடியாக அவளால் அறிய முடிந்தது. அவரிடத்தில் வித்தியாசமான நம்பிக்கை ஒன்று இருக்கிறது என்று. அவர் யூத ரபி அவர் தன்னுடன் பேசுகிறார். மற்றும் குடிப்பதற்காக கிணற்றிலிருந்து தண்ணீர் கேட்கிறார் என்பதை அவள் அறிந்திருந்தாள். இருப்பினும் இயேசு அவளுடைய நம்பிக்கை மற்றும் பாலினத்தின் காரணமாக அவளை தகுதியற்றவளாக பார்க்கவில்லை. அவளுடைய கடந்த காலத்தைக் கொண்டு அவளை நியாயம் தீர்க்கவில்லை. கடந்த காலத்தில் அவளுக்கு பல கணவர்கள் இருந்தார்கள். ஆணாதிக்கமிக்க இந்த சமூகத்தில் இந்த பெண்ணுக்கு குறைவான சமூக அந்தஸ்து மாத்திரமே கிடைத்திருக்கும். ஆகவே உடைந்து போன நிலையில் உள்ள இந்தப் பெண்ணின் ஆழ்ந்த ஆன்மீக பசியை தன்னால் மாத்திரமே திருப்தியாக்கக் கூடும் என்று இயேசு அறிந்து அவளுக்கு எல்லாவிதமான கிருபை ஈவுகளையும் கொடுத்தார்.

அனைவரும் நிலைத்து நிற்க தண்ணீர் தேவை. எல்லாவற்றிற்கும் உயிர் கொடுப்பது தண்ணீர். இயேசு அந்த சமாரிய பெண்ணியிடம் குடிக்க தண்ணீர் கேட்கிறார். மேலும் அவர் அவளிடம் ஜீவத்தண்ணீரை குறித்து பேசுகிறார். இயேசு அவளிடம் என்ன சொல்கிறார் என்று அவளுக்கு விளங்கவில்லை. ஆனால் இயேசு அவளின் வாழ்க்கையைப் பற்றி தெரிந்த காரியங்களை தான் வழிப்படுத்த தொடங்குகிறார் என்பதை அவள் தெளிவாக உணர்ந்தாள்.

தண்ணீர் நம் அனைவருக்கும் உள்ள விலைமதிப்பற்ற வளமாகும். மற்றும் இந்த நீர் நம்மை நிலத்துடனும் ஒரு உறவாய் இணைகிறது. நியூசிலாந்தில் நாம் எந்த நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டாலும் முதலாவது ***பேபிகா*** – என்னும் கலாச்சார வாழ்த்தோடு அறிமுகப்படுத்தப்படுகிறோம். நியூஸிலாந்தில் இது ஒரு மிகச்சிறந்த வாழ்த்தாகும். குறிப்பிடத்தக்க நதி, மலை, சிறப்பு வாய்ந்த இடங்களினால் கொடுக்கப்படும் வாழ்த்து. இதை நாம் ஏன் செய்கிறோம் என்றால் இந்த ஒரு இடம் நகராது எப்போதும் நிலையானது. இதேபோன்றுதான் யாக்கோபின் கிணறும். அது மிகவும் ஆழமானது. அந்த கிணறு எப்படிப்பட்ட தண்ணீரை தீனாளுக்குக் கொடுத்ததோ அதே போன்றுதான் இந்த பெண்மணிக்கும் கொடுத்தது. இந்த கிணறுதான் இயேசுவை அவளோடு சேர்த்தது. மற்றும் இயேசுவினிடத்திலிருந்து ஆவிக்குரிய தண்ணீரை பருகலாம் என்பதை சொல்லவும் வாய்ப்பை அமைத்துக் கொடுத்தது. அவளின் இனம் முழுவதும் தேவனை பற்றி அறிய முடியாத காரியங்களை காண்பித்தது. ஆனால் தேவன் அவளுக்காகவும் இன்னும் அநேகர் இயேசுவிடம் இருந்து புறப்படும் ஜீவத் தண்ணீரை குடிக்கவும் ஆவலோடு கூட அவர் இருக்கிறார். 1கொரிந்தியர் 13: 5 கூறுகிறது,

*“அன்பு அயோக்கியமானதை செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது தீங்கு நினையாது.”*

இயேசு அந்தப் பெண்ணை முழு நபராக பார்த்தார். அவளுக்கு மீட்பு மற்றும் மறு சீரமைப்பை வழங்கினார். இது கடந்த காலத்தை பிரதிபலிக்கக்கூடிய நிகழ்வாக உள்ளது. அநேக வருடங்களுக்கு முன்பு தீனாளுக்கு இந்த கிணற்றில் என்ன நடந்தது என்ற காரியத்தை வெளிக்கொணர்ந்தது. இதே நேரத்தில் இயேசு தன்னை மேசியா என்று வெளிப்படுத்தும் போது அந்த பெண் உயிர் பெறுகிறாள். அந்தப் பெண் பட்டணத்திற்குள் சென்று சொல்லுகிறாள் இங்கே வந்து பாருங்கள். அந்த மனிதன் எனக்குரிய எல்லாவற்றையும் கூறுகிறார். இவர் தான் மேசியாவோ என்று அவரைப் பற்றி ஆச்சரியமாக கேட்கிறாள்.

தீனாளைப்போன்றோ அவளது குடும்பத்தை போன்றோ அல்லாமல், இந்த சந்திப்பு மரணத்தின் பிடியில் இருந்தவளுக்கு புதிய ஜீவனைக் கொடுக்கிறது. தேவன் மீண்டும் மீண்டும் எவ்வாறு செயல்படுகிறார் என்பதை காண்பிக்கிறது. தேவனுடைய வார்த்தைகளையும் சரித்திரம் முழுவதும் உள்ள மக்களின் வாழ்க்கையும் வேதாகமத்தில் நாம் படிக்கிறோம். யோவான் 4ல் அந்தப் பெண் அநேக விசுவாசிகளுக்கு இயேசுவை காண்பித்துக் கொடுப்பாள். இப்பொழுது அவள் தனது ஊரில் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருந்து மீட்கப்பட்டு குணமடைந்து நம்பப்பட்டு தன் சமூகத்தை இயேசு கொடுத்த ஜீவத்தண்ணீருக்கு வழி நடத்துகிறாள். கடந்த காலத்தில் நடத்தப்பட்ட அநீதியின் செயல்பாடுகளுக்கு இப்பொழுது நீதியாகவும் முழு மறுசீரமைப்பாகவும் அவளால் ஒரு இரட்சிப்புக் கொடுக்கப்படுகிறது இது தேவனால் மட்டுமே தமது குமாரனான இயேசுவின் மூலமாக கொண்டு வருகிற செயல்பாடு ஆகும்.

இது ஒரு அழகான மீட்பின் கதை. சமாரியப் பெண் இயேசு கொடுத்த ஜீவத் தண்ணீர் மூலமாக உயிர்ப்பிக்கப்படுகிறாள். இந்த சுத்திகரிப்பு அவளை மீட்டு அவளைக் குணப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தீனாளின் வாழ்வில் செய்யப்பட்ட பழங்கால காயங்களையும் மாற்றுகிற ஒன்றாக உள்ளது. இது இயேசு கிறிஸ்து ஒடுக்கப்பட்டவர்களை குணப்படுத்துவதிலும் அநீதியை சரி செய்வதிலும் இயேசு எப்பொழுதும் அக்கறை கொண்டிருந்தார் என்பதைக் காண்பிக்கிறது. நாம் செய்யும் பாவ மரணங்களுக்காக இயேசு ஜீவத்தண்ணீரால் நம்மை சுத்தப்படுத்துகிறார். அது நமக்காக மட்டுமல்ல பிறருக்கும் பகிர்ந்து கொள்ளவும் வேண்டியிருக்கிறது. இயேசுவின் ஜீவ கிணறு ஒரு நாளும் வற்றி போவதில்லை.

**ஜெபம்:**

தேவனே, உம்மைப்போல மற்றவர்களையும் நேசிக்கவும் ஏற்றுக்கொள்ளவும் எங்களுக்கு உதவி அருளும். உமக்கு தேவையான உண்மை அறியாத ஜனத்திற்கு ஜீவத்தண்ணீரை வழங்கவும் எங்களுக்கு உதவியருளும் ஆமென்.

***மேஜர் கிறிஸ்டியன் டி மைன்***
***நியூசிலாந்து பிஜி டொங்கோ மற்றும் சாமு***

அனைவருக்கும் வாழ்த்துக்கள்! நான் கிறிஸ்டியன் நியூசிலாந்தை சார்ந்தவள். நான் திருமணம் முடித்து இரண்டு பையன்களோடு 17 வருடங்களாக இரட்சண்ய சேனையில் பணியாற்றுகிறேன். நான் எனது கலாச்சாரத்தை பற்றி அறிந்து கொள்வதும், நமது மொழியை பேசுவதும் எனக்கு மிகவும் பிடித்த ஒரு காரியம்.

---

**பாடம்-5**

**முடியாதவர்களுக்காக குரல் கொடுங்கள்**

நீதிமொழிகள் 31: 8- 9

***'ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களுடைய நியாயத்திற்காகவும் உன் வாயைத் திற. உன் வாயைத் திறந்து நீதியாய் நியாயம் சேர்த்து சிறுமையும் எளியமையுமானவனுக்கு நியாயம் செய்.'***

வில்லியம் பூத் நோய் வாய்ப்பட்டு இயலாதிருந்த போது அனைத்து இரட்சணிய சேனை வீரர்களுக்கும் ***'மற்றவர்கள்'*** என்ற ஒற்றை வார்த்தையில் தந்தி ஒன்றை அனுப்பினார். அது மற்றவர்களைக் கருத்தில் கொள்ளுங்கள் என்பதாகும். நூறு ஆண்டுகளுக்கு மேலாகியும், நாம் அதில் சீரிய கவனம் செலுத்தியிருந்தால், அவருடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்கு இந்த உலகமே மிகச் சிறந்த இடம் என்பதை நிச்சயமாக ஒத்துக் கொள்வோம். நீதிமொழிகள் 31 ல் உள்ள இந்த வார்த்தைகள் மற்றவர்களின் சார்பாக அவர்களுக்காக பேசுவது, நியாயமாக செயல்படுவது, மற்றும் மற்றவர்களின் உரிமைகளை பாதுகாப்பது போன்றவைகளை செயல்பட வைக்கிறது. உண்மையான ஞானம் என்பது நமது அறிவு மற்றும் நடத்தை இரண்டையும் குறிக்கிறது. அதாவது நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்று படித்து அறிந்து கொண்டால் மட்டும் போதாது, அதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதை நமக்கு தெளிவாக கற்றுக் கொடுத்து அதில் ஊக்கப்படுத்துவது இந்த நீதிமொழிகளின் புத்தகம் ஆகும்.

இந்த பகுதியில் சொல்லப்பட்டுள்ள வழிமுறைகள் எல்லாம் ஒரு தாயிடம் இருந்து தனிப்பட்ட முறையில் மகனுக்கு சொல்லப்பட்ட காரியங்கள் ஆகும். ராஜாவாகிய மகன் எல்லாவிதமான அதிகாரத்தையும் பொறுப்பையும் கொண்டிருக்கிறான். அவனுடைய தாய் அவனது அதிகாரத்தை பயன்படுத்தி மற்றவர்களுக்காக பேசும் படி அவனை அறிவுறுத்துகிறார். ராஜா என்று சொல்லக்கூடிய அடையாளம் நிச்சயமற்ற ஒரு அடையாளம். இங்கே ராஜாவாக லெமுவேல் அறியப்படுகிறார். ஆனால் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள் இது ராஜாவாகிய சாலோமனையும் அவரது தாயாகிய பத்சேபாளையம் குறிப்பிடுகிறதா? அல்லது இஸ்ரவேலின் வழி தோன்றலான லேமுவேலைக் குறிக்கிறதா என்ற ஒரு முரண்பாடான கருத்தையும் நமக்கு முன் வைக்கிறார்கள். ஆனால் அவையெல்லாம் எப்படி இருந்தாலும் சரி இன்று நாம் நம்மை ராஜாவின் தாயாகவும் அல்லது ராணியாகவோ நினைத்துக் கொள்ள வேண்டாம். இந்தக் கட்டுரை என்ன கூறுகிறதென்றால் காலம் மற்றும் பண்டைய கலாச்சார அமைப்பை நமக்கு தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுகிறது.

பேசுவது என்பது எப்போதும் ஒரு நேரடியான செயல்முறை அல்ல. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது எனது மருத்துவர் எனது மகனின் உடல் பரிசோதனையை முடித்த பின்னர், எனது மகனுடைய கதையை சொல்வதற்காக நாங்கள் காத்திருக்க வேண்டும் என்று கூறினார். இருப்பினும் எனது மகனின் இயலாத காரணத்தினாலோ, அல்லது உண்மையிலேயே அவனுக்கு

என்ன ஆனது என்பதை அந்த மருத்துவர் தெளிவாக அறிந்து கொள்ளும்படியாகவோ இந்த காரியத்தை அவர் கேட்டிருக்கலாம். சிக்கலான குறைபாடுகளுடன் அவன் தனது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு வருவதால் அவனின் கஷ்டங்களை அறிந்து கொள்வதற்காக அவனுடைய நுட்பமான அனைத்து செயல்பாடுகளையும் அறிவது அந்த மருத்துவரின் பொறுப்பாக காணப்படுகிறது. நாமும் அதேபோலத்தான் மற்றவர்களின் பேச்சை கவனமாக கவனித்து இயலாதவர்களுக்கு அதிலிருந்து என்ன காரியங்களை நாம் செய்ய வேண்டும் என்ற காரியத்தைக் கற்றுக்கொண்டு, அதன்படி செய்வதற்கு நம்மை தகுதி படுத்த வேண்டும், அதனால் தான் நான் இந்த ***நுட்பமாக*** என்ற வார்த்தையை உபயோகிக்கிறேன்.

இயலாமையில் (ஊனமுற்ற நிலையில்) காணப்படும் ஒருவருக்காக '***நுட்பமாக பரிந்து பேசுவது'*** என்பது, நாம் அந்நபருக்கென்றே அல்லது அந்நபரை மிஞ்சியோ பேசுதலாக இல்லை என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் இத்தகைய பரிந்து பேசுதலின் அவசியம் ஆகும். இல்லையென்றால், அந்நபரை இழிவுபடுத்துவது போலாகிவிடும். ஆங்கிலத்தில் '*destitute* (*திக்கற்ற*)' என்ற வார்த்தை 'vanishing (சிந்தையினின்று ஒதுக்கப்படுதல்)' திக்கற்றவர்கள் நமது மனதிலிருந்து, நமது போடும் திட்டங்களிலிருந்தோ அல்லது நமது சபையிலிருந்தோ ஒதுக்கப்பட்டோரைக் குறித்துதான் அந்த வார்த்தை அர்த்தம் கொள்ளுகிறது. நாம் அவர்களை நமது சமூக எல்லைகளுக்கு வெளியே புறந்தள்ளிவிட்டோம் என்தே அதன் அர்த்தமாகும். நாம் இதைக் குறித்து ஜாக்கிரதையாக இல்லையென்றால் நம்முடைய பரிசுந்து பேசுதல் இயலாத நிலையில் உள்ள மக்களை (ஊனமுற்றோர்கள்) இன்னும் அதிக தூரத்துக்கு ஒதுக்கி தள்ளிவிடும். ஒவ்வொருவரையும் சமமாக நடத்துதல் என்பது சமத்துவத்தை கடைபிடித்தல் என்பதாகாது. வெவ்வேறு சூழ்நிலைகள், அனுபவங்கள், கலாச்சார பழக்கவழக்கங்கள் போன்ற அனைத்தும் பிறருக்காக பரிந்து பேசுதலின் கலையாகக் கருதப்படுகிறது. இதனைச் செய்வதற்கு அதற்கு போதிய சமயம், மற்றவர்கள் கூறுவதைக் கவனித்து கேட்டல், நண்பர்களை சம்பாதித்துக் கொள்ளல், புதியனவற்றை கற்றுக் கொள்ளும் திறந்த மனப்பாங்கு, மற்றும் ஒருவரோடொருவர் கலந்து சம்பாஷித்தல் போன்ற அனைத்தும் அவசிய தேவைகளாகும்.

ராஜா லேமுவேல் போன்றல்லாது நீங்களும் ஒரு ராஜ அரசவையில் அமர்ந்து கொண்டு தேசம் சார்ந்த சட்டங்களுக்கும் நியாயங்களுக்கும் தீர்ப்புகளை வழங்குவதற்குரிய நபராக இல்லாமல் இருக்கலாம். எப்படியாயினும், அறியாமைக்குள் இருக்கும் போதிய நடத்தைவிதிகளறியா மாற்றுதிறனாளிகளைக் உண்மையை அறியாமல் அனுமானங்களோட செயல்படக்கூடிய காரியங்கள் மிகவும் தவறானவைகள் ஆகும். நமக்கு முன்பாக இருப்பவர்களின் முகத்தில் கடவுளின் உருவத்தை பிரதிபலிப்பதை நாம் பார்க்க முடியாத அளவிற்கு இந்த செயல்பாடுகள் நம்மை சிதைக்கிறது. பொதுவாகவே ஊனமுற்றவர்கள் எப்பொழுதும் சாதாரண வாழ்க்கையை விட்டு வெளியேறவே விரும்புகிறார்கள். அவர்கள் யார் என்பதை இந்த சமூகம் அறிந்து கொள்ளவே அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையை கொண்டாட விரும்புகிறார்கள். அவர்கள் அனைவரும் மற்றவர்களுடன் சந்தோஷமாக வாழவும், மற்றவர்களைப் போல தேவ ஆராதனையில் பங்கேற்கவும் விரும்புகிறார்கள்.

இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ள ராஜா ஏழைகளின் உரிமைகளை பாதுகாப்பதாக குற்றம் சாட்டப்பட்டார். இன்றைக்கு உலக மக்கள் தொகையில் 15 சதவீதம் பேர் ஊனமுற்றவர்களாக காணப்படுகிறார்கள். உலகம் எங்கிலும் இப்படிப்பட்ட ஜனங்கள் தொடர்ந்து அநீதி, அடக்குமுறை, பாகுபாடு, மற்றும் கலகத்தை, எதிர்கொள்கிறார்கள். புள்ளி விவர அடிப்படையில் அவர்கள் பொருளாதார ரீதியில் ஓரம் கட்டப்பட்டு அதிகப்படியான வேலைவாய்ப்பின்மையால் அதிக அளவிலான சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அப்படிப்பட்ட ஜனங்களின் உரிமை மற்றும் அவர்களின் ஆளுமைத் தன்மைக்காக மரித்து உயிர்த்தெழுந்த இயேசுவினாலே இரட்சண்ய சேனையின் மூலமாய் பாடுபடுவது நமது மிக முக்கியமான தலையாய கடமையாய் காணப்படுகிறது.

வில்லியம் பூத் மற்றும் கேதரின் பூத் தங்கள் வாழ்நாளில் உடல் ஊனமுற்றவர்களின் உலகம் என்றால் என்ன என்பதைக் குறித்த விழிப்புணர்வுகளை இருவரும் தனிப்பட்ட முறையில் ஏராளம் கடந்து வந்தார்கள். அவர்களின் மகளான மரியன் சிறு குழந்தையாக இருக்கும் பொழுது மிகவும் உடல் சரியில்லாமல் இருந்தார். நாளடைவில் அவள் முழு வளர்ச்சி அடையாத வளர்ச்சி குன்றிய உடல் ஊனமுற்ற மகளைப் போல மாறிவிட்டாள். மரியனின் சூழ்நிலையை கேதரின் பார்த்து போது அவர்கள் வெளிப்படையாக தனது துக்கத்தை பகிர்ந்து கொண்டார்கள். மரியனின் நிலையை அவர்கள் மறக்க விரும்பவில்லை. இந்த வயதில் உள்ள அநேக உடல் நலம் குன்றிய பிள்ளைகளைத் தொண்டு நிறுவனங்களின் மூலம் பராமரிக்கவும் அதன் மூலம் அநேக படியான உடல் ஊனமுற்ற ஜனங்களை பராமரிப்பதற்கு இது ஒரு வடிகாலாகவும் அமைந்தது. இவ்வாறு உடல் ஊனமுற்ற ஜனங்களுக்கு தன்னால் தன்னுடைய சுய வேலையை செய்ய முடியாத ஜனங்களுக்காக உதவி செய்வதுதான் நாம் அவர்களுக்காக பேசுதல் ஆகும். மரியனின் பலவீனமான தோற்றம் இரட்சண்ய சேனையில் உள்ள அனைத்து வீரர்களுக்கும் நன்கு தெரியும். வில்லியம் பூத் மற்றும் கேதரின் பூத் அவர்களுக்கு மரியனின் வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை கொடுப்பதற்கான ஒரு அடித்தளமாக விளங்கியது.

இறையியலாளர் குளின் குண்டன் எழுதினார், இது ஒரு துரதிஷ்டமான விபத்து அல்ல. ஆனால் நம்மில் மற்றவர் என்பது நமது பெருமை. அவை அனைத்தும் ஒவ்வொன்றும் தனித்துவமானது மற்றும் வேறுபட்டது. நாம் மற்றவர்களுக்கு வித்தியாசமாக இருப்பது கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. ஆனால் நாம் ஒருபோதும் நமக்குள் மற்றவர்கள் மறைந்து போக விடக்கூடாது. நாம் அவர்களின் சரீரமாக மாறி அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். வேற்றுமை மற்றும் பன்முகத்தன்மை இறைவனின் படைப்பின் ஒரு பகுதி. மற்றவர்களுக்காக பேசுவது, அவர்களின் உரிமைகளை பாதுகாப்பது, நியாயமாக தீர்ப்பளிப்பது, கடவுளின் அழைப்பை ஏற்று அதை நிறைவேற்றுவது, தனித்துவமான அடையாளங்களை மதிப்பது அதோடு வில்லியம் பூத்தின் அழைப்பான மற்றவர்களை நினைத்துக் கொள் என்ற வாசகத்தின் படி மற்றவர்களுக்காக வாழ அர்ப்பணிப்பது இவை எல்லாம்தான் நாம் இயலாதவர்களுக்காக கொடுக்கக்கூடிய உண்மையான சத்தமாகும். இப்படிப்பட்ட ஒரு சத்தத்தை, இப்படிப்பட்ட ஒரு

குரலை ஆண்டவராகிய தேவன் ஒவ்வொரு இரட்சிணை சேனை வீரர்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறார்.

**ஜெபம்**

பரலோக தகப்பனே, அங்கக்குறைபாடுள்ளோர் மத்தியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கிருபைகளுக்கு நான் திறந்த மனதுடன் வாழும் ஒரு பெண்ணாக என்னை வடிவமைத்தருளும்.

**கோரலி படில்**

நியூசிலாந்து, விஜி, போங்கே மற்றும் சமோயா

கோரலி இயேசு கிறிஸ்துவின் சீடர் ஆவார். அவர் ஆக்கலாந்து சிட்டி படைத்தளத்தின் வாழ்நாள் இரட்சணிய சேனை வீரர் ஆவார். அவரது கணவர் பெயர் கெவின். மூன்று பிள்ளைகள் மற்றும் இரண்டு பேரக் குழந்தைகள் உள்ளனர். இவர் நியூசிலாந்தில் உள்ள தார்மீக மற்றும் சமூகப் பிரச்சனை கவுன்சில் மற்றும் இறையியல் கவுன்சிலில் பணியாற்றுகிறார். கோரலி தற்பொழுது இரட்சணிய சேனையின் மூலமாக ஊனமுற்ற நபர்களுக்கு எவ்வாறு உதவலாம் என்று ஆராய்ச்சி பட்டப் படிப்பையும் அவர் படித்துக் கொண்டிருக்கிறார்.

விவாதிக்க

1. மற்றவர்களின் சார்பாக நான் பேசும் மற்றும் செயல்படும் நுணுக்கமான ஆதரவுகள் எதனால் பாதிக்கப்படும்?

2. சுவிசேஷ பகுதியில் உண்மைகளுடன் ஒத்துப் போகும் வகையில் ஊனமுற்றவர்களுக்குள் சமூக அணுகுமுறைகள் எந்த வகையில் பாதிக்கப்படலாம்?

3. எனது தற்போதைய நியமனத்தில் யார் அந்த மற்றவர்கள்? யார், என்னுடைய சத்தத்தையும் ஊக்கப்படுத்தலையும் விரும்புகிறார்கள்?

பாடம் - 6

**பனிப்பாறையின் விளிம்பில்**

**எண்ணாகமம் 12:1-16**

**கேப்டன் எஸ்தலா சானிசாகா**

நீங்கள் ஒரு பனிப்பாறையைப் பார்த்திருக்கலாம். இந்தபனிக்கட்டிகள் மக்கள் கூட்டங்கள் குறித்து நினைப்பூட்டுவது என்னவென்றால், நீங்கள் மேற்பரப்பில் காணப்படுகிறீர்கள். உங்களுடைய உண்மையான அளவை ஒப்பிடமுடியாது. ஏனெனில் பெரும்பாலானவை நீரில் மூழ்கியுள்ளன.

எண்ணாகமம் 12-ல் மோசே மற்றும் அவனுடைய உடன் பிறப்பாகிய ஆரோன் மற்றும் மீரியாமின் கதையை காண்கிறோம். மோசே தன்னுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலைரை வழி நடத்த தேவனால் நியமிக்கப்பட்டத் தலைவன் என்பதை நாம் அறிவோம். ஆரோன் பிரதான ஆசாரியன், மீரியாம் மூத்தவள் மற்றும் முன்னனி தீர்க்கதரிசியாகவும் இருந்தார். மோசே குழந்தையாக இருக்கும் போதே மீரியாம் அவருடைய வாழ்வில் முக்கியமானவராக இருந்தார். (யாத்திராகமம் 2) தேவனுடைய வல்லமையான செயலைக் கண்டு விசுவாசம், நன்றியுணர்வுள்ள ஒரு வெற்றியின் பாடலை வழிநடத்தினார் என்பதை யாத் 15:20-21-ல் வாசிக்கிறோம். இருப்பினும் சில காலத்திற்கு பிறகு ஆரோனுடன் சேர்ந்து மோசேயின் மனைவி கூஷ் என்னும் குலத்தைச் சார்ந்தவள் என்பதற்க்காக மோசேக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததைப் பார்க்கிறோம்.

கூஷ் என்பது தெற்கு எகிப்தில் உள்ள ஒரு பகுதி. கருப்புநிறத்தவரின் பகுதியாகவும் அறியப்படுகிறது. ஆகவே மோசேயின் மனைவி கருப்புநிறத்தவள் என்று அறிஞர்கள் நம்புகிறார்கள்.

மீரியாமின் முணுமுணுப்பு மோசேயின் கலப்பு திருமணம் பற்றியதாக தோன்றுகிறது. ஆனால் இது பனிப்பாறையின் நுனிப்பகுதியாகதான் தோன்றுகிறது. ஆனால் அதற்கு அடியில் மோசேயின் மனைவியை ஏற்காதது, பெருமை மற்றும் பொறாமை ஆழமாக அதற்கு பின்னால் மறைந்துள்ளது. மற்றவர்களின் நிராகரிப்பு மற்றும் விமர்சனம் அவருடைய இதயத்தில் ஆழமாக பதிந்திருந்தது.

மோசே மூலமாகதான் கர்த்தர் பேசினாரா? என்றுகேட்டார். அவர் நம் மூலம் பேசவில்லையா?

**“மனந்திரும்புதலுக்கும் ஒருவர் மேல் ஒருவர் நேர்மையான அன்பு காட்டுதலுக்கும் நம்மை அழைப்பதன் மூலம் தேவன் தனது நன்மைகளை தொடர்ந்து காண்பித்துக் கொண்டிருக்கிறார்.”**

இந்தவசனம், எதனால் அலட்சியம் மற்றும் புறங்கூறுதலில் ஈடுபட்டார் என்பதை தெளிவாகக் காண்பிக்கிறது. மீரியம் மற்றும் ஆரோன் ஆண்டவருக்கும் அவருடைய ஜனத்திற்கும் சேவை செய்யவும் சேவை செய்வதற்கென வெவ்வேறு வரங்களையும் பெற்றிருந்தனர் ஆனால் இது போதாது என்று தெரிகிறது.

மோசேக்கு சரிநிகராக அல்லது அவரைவிட மேலான திறமைகள் அவர்களுக்கு உண்டென்று உணர்ந்தனர். பெருமையுள்ள இதயத்திற்கு ஒன்றும் போதுமானதாக அமையாது.

இந்தவசனம் தொடர்கிறது. அவர்கள் சொன்னதைதேவன் கேட்டார். யாரும் அவரிடம் சொல்லவில்லை. மிரியாமும் ஆரோனும் சொன்னதை அவர் கேட்டார். அவர்கள் உச்சரித்த ஒவ்வொரு வார்த்தையையும் அவர் கேட்டார் மற்றும் அவர்களுடைய இதயத்தின் நோக்கத்தினையும் அறிந்திருந்தார்.

4-முதல் 16-ம் வசனங்கள் அவர்களுடைய செயல்களின் விளைவை நமக்குச் சொல்கிறது. பெருமையை, தேவன் நிராகரிக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மீரியாமின் வாழ்வில் அவள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டாள். இயேசு என்ன சொன்னார் என்பதை நாம் நினைவு கூறுவோம்.

லூக்கா 14:11 – 13 வசனங்களில் மோசே தன் சகோதரிக்காக தேவனிடத்தில் பரிந்துபேசுகிறார். ஆண்டவர் மீரியாமையும் ஆரோனையும் மன்னித்தார். மனந்திரும்புவதற்கும் நேர்மையான அன்புகாட்டுவதற்கும் நம்மை அழைப்பதன் மூலம் தேவன் தனது நன்மைகளை தொடர்ந்து காண்பித்துக் கொண்டிருக்கிறார்.

பிதாவே, எங்கள் பாவங்களிலிருந்தும் பெருமையிலிருந்தும் நீர் எங்களை சுத்தம் செய்வீராக! நீர் அவைகளை வெறுக்கின்றீர், ஒருவர் மேல் ஒருவர் கொள்ளும் அன்பில் நீர் எங்களை வளர உதவி செய்வீராக. நீர் அன்பு கூர்ந்தது போல அன்பு கூர எங்களுக்கு போதித்தருளும்.

---

**பாடம் - 7**

**மீட்கும் அன்பு**

**ஓசியா 3**

**லெப்டினன்ட் கர்ணல் எ.வா டன்சோ**

ஓசியா 3 என்பது இஸ்ரவேலர்களின் நாடுகடத்துதல் மற்றும் திரும்புதல் ஆகியவற்றைக் குறிக்கும் மிச்சிறிய அதிகாரமாகும். இஸ்ரவேலர்கள் அந்நியதேசத்தில் சுத்திகரிப்பின் நாட்களை அனுபவித்தனர் இருப்பினும் தேவன் தன்னுடைய பிள்ளைகளை அதிகமாக நேசித்தார் மற்றும் அவர்களை மீண்டும் ஏற்றுக் கொண்டார். தேவன் அதே அன்பையும் மன்னிக்கும் ஆவியையும் அவருடைய மனைவி யாககோமரிடத்தில் காண்பிக்கக் கட்டளையிட்டார். ஓசியா கோமாரை விவாகரத்துச் செய்ய சரியான காரணங்கள் இருந்தபோதிலும் மனந்திரும்பாதமற்றும் வேசித்தனத்திலிருக்கிற அவருடைய மனைவியை மீண்டும் ஏற்றுக் கொள்ள பணிக்கப்பட்டார். அன்பு என்னும் வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படும் வார்த்தை. என்னுடைய சாக்கலேட்டை விரும்புகிறேன். நான் அந்த விளையாட்டு அணியை விரும்புகிறேன். நான் என் வெற்றியாளர்களை விரும்புகிறேன். பொருட்களை எவ்வளவு ஒழுங்காக நேசிக்கிறோம்.

நம்முடைய தேவன் எப்போதும் மன்னிக்கிறவறாகவே இருக்கிறார். இஸ்ரவேலர்கள் தேவனைவிட்டு வழி விலகினார்கள். ஆனால் அவர்கள் தேவனிடம் திரும்பியபோது தேவன் மன்னிக்கிறவராக இருந்தார். நாம் தோற்றுப் போனபோதிலும் நம்மை நேசித்துக் கொண்டே இருந்தார். நம்முடைய தவறுகளையும் தாண்டி நிபந்தனையின்றி நம்மை நேசிக்கிறார். (1 யோ 4:9-12)

நம்முடைய அன்றாட வாழ்வில் மற்றவர்களுடனான உறவில் நாம் இப்படித்தான் இருக்கவேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார் (1 தெசலோ 3:11-13) இந்த அன்பை பிரதிபலிக்கும்போது பரிசுத்தத்தில் வளர்ந்து கிறிஸ்துவைப் போல் மாறுகிறோம். நம்முடைய வீடுகளில் நமது துணையை நாம் எப்படி நேசிக்கிறோம்? அந்தமுதல் அன்பு எங்கே? குடைசியாக எப்போது உங்கள் மனைவி எதிர்பாரா தருணத்தில் பரிசு கொடுத்தீர்கள் அல்லது அருமையான குறுஞ்செய்தியை அனுப்பினீர்கள்? எத்தனை முறை ஒருவருக்கொருவர் மன்னிக்கிறீர்கள்? உங்கள் துணைக்காக எத்தனை முறை ஜெபிக்கிறீர்கள்?

ஓசியா 3-ல் நமது துணையை நேசிப்பதை நாம் வெளிக் காண்பிக்க வேண்டும் என்றும் அவர்களுடைய தவறுகளை மட்டுமே கவனத்தில் வைத்திருக்க கூடாது என்றும் கூறுகிறார். மாறாக, நாம் மன்னிக்க வேண்டும் என்றும் நமது துணைக்காக ஜெபிக்க வேண்டும் என்றும் தேவன் அதில் இடைபட அவரிடம் கேட்கவேண்டும். யோவா 15:12-ல் நாம் வாசிக்கிறோம். நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்க வேண்டும் என்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. அன்பு எல்லா கிறிஸ்தவர்களுக்கும் அடிப்படையானது, நம்மைநாம் நேசிப்பது போல நம்முடைய அயலகத்தாரையும் நேசிக்கவே அழைக்கப்பட்டிருக்கிறோம். கெட்டகுமாரனைப் போல நாம் மனம்

வருந்தி தகப்பனிடத்தில் திரும்புவோம். அவர் நம்மை திரும்ப ஏற்றுக்கொண்டு மீட்டெடுக்கத் தயாராக இருக்கிறார்.

அன்பின் அழகான விளக்கத்தை 1கொரி. 13:1-8ல் காணலாம். அன்புஎன்றால் என்ன? என்பதைக் குறித்த முழு விளக்கத்தையும் இது கொடுக்கிறது.

- பொறுமையானது, அன்பு இரக்கம்கொண்டது, அது பொறாமை கொள்ளாது. பெருமை கொள்ளாது.
- அன்பு மற்றவர்களை இழிவு படுத்தாது, சுயநலம் தேடாது எளிதில் கோபப்படாது. எந்தத் தவறையும் குறிப்பிட்டுக் காட்டாது.
- அன்பு தீமையில் மகிழ்ச்சியடையாது. ஆனால் சத்தியத்தில் மகிழ்ச்சியடைகிறது.
- அன்பு எப்போதும் பாதுகாக்கிறது. எப்போதும் நம்புகிறது. எப்போதும் நம்பிக்கையுடன் இருக்கும், எப்போதும் விடாமுயற்சியுடன் இருக்கும்.
- அன்பு ஒருபோதும் தோற்காது, தீர்க்கதரிசனங்கள் கூட ஓய்ந்து போகலாம், அன்னியபாஷையானாலும் ஓய்ந்துபோகலாம். ஆனால் அன்புநிலைத்திருக்கும், அறிவு ஓங்கும் போது அன்பு ஒழிந்து போகும்.

ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவது நமது செயல்களில் பிரதிபலிக்கவேண்டும். சிலசமயங்கள் நாம் நேசிக்கிறவர்கள் நாம் எதிர்பார்கிறவண்ணம் நம்மை நேசிப்பதில்லை. ஆனால் ரோமர் 5:8ஐ எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பைவிளங்கப் பண்ணுகிறார்.

நாம் கிறிஸ்தவைவிட்டு புறம்பே அலைந்து கொண்டிருக்கும் போதே அவர் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணினார். யோவான் 9:16 நமக்கு கூறுகிறது. தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைதந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

தேவன் அன்பாக இருக்கிறார், அவருடைய பிள்ளைகள் அந்த அன்பை ஒருவொருக்கொருவர் காண்பிக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம், ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவரால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார். தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும் படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்தில் அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. (யோவான் 4:7-9)

பிரியமான சகோதரிகளே, நம்முடைய தினசரி செயல்கள் மூலம் கிறிஸ்துவின் அன்பு நம்மிலிருந்து பிரதிபலிப்பதை மற்றவர்கள் காணட்டும். அன்பு ஒவ்வொரு துக்கத்தையும்

மாற்றுகிறது. எல்லா கவனிப்பையும் இலகுவாக்குகிறது. அன்பு தோல்வியற்ற நிலையை தருகிறது மற்றும் பெரும் வெற்றியையும் தரும்.

**ஜெபம்:**

அன்பு ஆண்டவரே, எங்களை நாங்கள் நேசிப்பது போல மற்றவர்களையும் நேசிக்கிற இதயத்தைத் தாரும். நாங்கள் நேசிக்க வேண்டியவர்களை பின்வாங்காமல் உறுதியாக நேசித்து அதன் மூலம் உம்மோடுள்ள உறவை மகிமைப்படுத்த உதவும். இயேசுவின் மூலமாக நன்றியோடு வேண்டுகிறேன் ஆமென்.

**விவாதத்திற்கு**

1. உண்மையான அன்பிற்கு குடும்பத்திலும் திருச்சபையிலும் எவைகள் இடையூறாக உள்ளன?
2. நம்முடைய அன்புக்கு தகுதியற்றவர்களையும் அப்படிப்பட்ட அன்பை நிராகரிப்பவர்களையும் எப்பொழுது தொடர்ந்து நேசிக்க முடியும்?
3. ஒருவருக்கொருவர் நேசிப்பதை விட்டுவிட வேண்டுமா?

**லெப்டினன்ட் கர்னல் ஈவா டான்சோ**

**நைஜீரியா**

லெப்டினன்ட் கர்னல் ஈவா டான்சோ 1991 ல் இரட்சணிய சேனை உத்தியோஸ்தராக அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு அர்ப்பணிக்கப்பட்ட உத்தியோஸ்தராவார். அவர் ஐசக் என்பருடன் திருமணம் செய்து கொண்டு 5 குழந்தைகளோடும் 10 பேரக் குழந்தைகளோடும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார். அவர் கானா நாட்டிலும் அகில உலக தலைமை அலுவலகத்திலும் பணி செய்துள்ளார். தற்போது அவர் கானா நாட்டில் மாகாண பெண்கள் ஊழியங்களின் செயலாளராக பணியாற்றி வருகிறார்.

பாடம் - 8

## தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பெண் தீர்க்கதரிசி

**2 ராஜாக்கள் 22:14-20 2 நாளாகமம் 34:22-33**

**மேஜர் ஈவாமா ஷைஜீ ராஜ்**

தேவன் மனிதனை சிருஷ்டித்த போது, அவரைப் போலவே அவர்களை உருவாக்கினார். அவர்களை ஆணும் பெண்ணும் சிருஷ்டித்து ஆசீர்வதித்தார் (ஆதி.5:1-2).

- சிருஷ்டிப்பிலும், மீட்பிலும் ஆணும் பெண்ணும் சமம் என்ற ஆதாரங்களை பரிசுத்த வேதாகமம் தருகிறது. ஆணும் பெண்ணும் தேவனுடைய சாயலில் சமமான கூட்டாய்மையோடு சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்று வேதாகமம் போதிக்கிறது. (ஆதி. 1:26-28, 2:23, 1 கொரிந்தியர் 11:11-12? கலாத்தியர் 3:28).
- வேதம் சொல்கிறது. இயேசு பெண்ணையும் ஆணையும் மீக்கவே வந்தார் என்று விசுவாசத்தால் நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம் மற்றும் அவருடைய இரட்சிப்பின் ஆசீர்வாதத்திற்கும் சொந்தமாக மாறுகிறோம். (ரோமர் 8:14-17,யோவான் 1:12-13)
- பரிசுத்த ஆவியானவர் எந்தவிதமான பாகுபாடும் இன்றி ஆண் மற்றும் பெண் இருபாலர் மீதும் பெந்தேகோஸ்தே நாளில் இறங்கினார் என்றும் அவர்களுக்குள் வசித்து வரங்களை பாலினபாகுபாடின்றி பகிர்ந்தளிக்கிறார் என்பதை காண்பிக்கிறது.
- ஆண்களும் பெண்களும் கிருபையான வாழ்வின் வாரிசுகள் என்றும், அவர்கள் பரஸ்பரம் மற்றும் பொறுப்புணர்வின் உறவில் பிணைக்கப்பட்டுள்ளனர் என்று வேதம் காண்பிக்கிறது. (எபேசியர் 5:21, 1 பேதுரு 3:1-17)

புதியமற்றும் பழைய ஏற்பாட்டில் பெண்களும் ஆண்களும் தீர்க்கதரிசனம், ஆசாரியப்பணி மற்றும் அரச பணிகளையும் செய்துள்ளனர். ஆண் மற்றும் பெண் தீர்க்கதரிசிகளும் இரண்டு ஏற்பாடுகளிலும் பட்டியலிடப்பட்டுள்ளனர். பொதுவாக ஆண் தீர்க்கதரிசிக்கு எபிரேயத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தை *'நபி'* ன்றும் பெண் தீர்க்கதரிசிக்கு *'நபியா'* என்றும் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆண் தீர்க்கதரிசியோ பெண் தீர்க்கதரிசியோ அவர்கள் தேவனுடைய வாய் என்று வர்ணிக்கப்படுகின்றனர். அவர்கள் பரிந்து பேசுகிறவர்களாகவும் இடை நிற்பவர்களாகவும் செயல்படுகின்றனர். நபிகளுடைய பாரம்பரியத்தில், 48 எபிரேயதீர்க்கதரிசிகளும், 7 புறஜாதிகளுடைய தீர்க்கதரிசிகளும் ஏழு பெண் தீர்க்கதரிசிகளும் இருந்தனர்: மிரியாம், தெபோரா, உல்தாள், சாரா, அன்னாள், அபிகாயில், எஸ்தர், உல்தாள் ஆகியோர். உல்தாள், யோசியா மன்னரின் காலத்தில் இருந்த மரியாதைக்குரிய நன்கு அறியப்பட்ட பெண்தீர்க்கதரிசி இவள் சலூமின் மனைவி - எரோமியாதீர்க்கதரிசி இவருடைய மாமா மற்றும் எருசலேமில் வசித்துவந்தார். உல்தாள் என்றபெயர் "லாமா" "இணைந்திருத்தல்" தொடர்ந்திருத்தல் என்ற அர்த்தத்தைக் கொண்ட எபிரேய வார்த்தையிலிருந்து வெளிக் கொணரப்பட்டது. இதன் மற்றொருபொருள் "வீசல்" இவளுடையபெயர் 2 ராஜாக்கள் 22:14-20ம் 2 நாளாகமம் 34:22-28ம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது மிகசிறிய வேதபகுதியாயினும் மிகவும்

மதிப்பிடத்தக்க பகுதியாகும். தேவனுடையச் செய்தியை ராஜாவுக்காக உரைத்தார். வில்லியம் நு. பிலிப்பு என்ற மதம் மற்றும் தத்துவவியல் பேராசியரியரின் கூற்றுப்படி, இப்படிப்பட்ட வார்த்தைகளை உரைத்ததாக பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்படும் முதல் நபர் உல்தாள். ரபிமார்களால் மிகப் பெரிய மரியாதைக் கொடுக்கப்பட்டது. மேற்கு சுவரும், ஆசாரியர்களின் கதவும் உல்தாளின் கதவும் ஒருபோதும் அழியாது என்று உரைத்தவர். தாவீது ராஜா, மற்றும் உல்தாளுடைய கல்லறைகள் மட்டுமே எருசலேம் நகருக்குள் அனுமதிக்கப்பட்டுள்ளது. பெண்கள் என்ற பாகுபாடு பார்க்கப்பட்ட அந்தகாலக் கட்டத்திலும் தேவன் உல்தாளையும் வேறுபெண் தீர்க்கதரிசிகளையும் தெரிவு செய்ததை தேவனுடைய வார்த்தையை உரைக்கும்படி பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் பார்க்கலாம். யோசியா ராஜாவை தேவாலயத்தை ஒழுங்கு செய்யவும் எழுப்புதலைக் கொண்டுவரவும் தேவன் தெரிவு செய்தார். இந்த புதுப்பித்தல் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, கில்கா என்கிற ஆசாரியன் ஒன்றை கண்டுபிடித்தான். மோசேயின் மூலமாய் தேவன் கொடுத்த வார்த்தைகள் அடங்கிய புத்தகம். (2 நாளா.34:14). அவர் அந்த புத்தகத்தை வேதபாரகனாகிய சாப்பானிடத்தில் கொடுத்தான். சாப்பான் அதை ராஜாவிடத்தில் வாசித்தான் ராஜா அதைக் கேட்டபொழுது தன் வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டு இதற்கான அதிகாரத்தை இலக்கியாவிடம் கொடுத்தான். போய் தேவனிடத்தில் எனக்காகவும் ஜனங்களுக்காகவும், யூதாதேசம் முழுவதற்கும் வேதத்தில் என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதை கேளும் என்று அனுப்பினான். தேவனுடைய கோபம் பயங்கரமானது, அது நம்முடைய ஜனங்கள் இந்த புத்தகத்தின் வார்த்தைகளுக்குக் கீழ்படியாமல் போனதினிமித்தம் பற்றி எரிகிறது. (2 ராஜா13)

பிரதான ஆசாரியனும் அவனுடைய உடன் பணியாளரும் தேவனிடத்தில் எப்படி விசாரிக்கவேண்டும்? அவரது மனதை எப்படிச் சிறப்பாக வியாக்யானம் செய்வது? இலக்கியா-வை தவிர வேறே ஆசாரியன் இல்லை. சாப்பான் வேதபாரகருடைய தலைமையின் சார்பாக நின்றான். ஆனால் இலக்கியாவும் சாப்பானும் தேவனைக் குறித்து தங்களைவிட அதிக ஞானம் படைத்தஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்டனர். ஒருபெண் தீர்க்கதரிசி, இது உண்மையான கர்த்தருடைய புத்தகம்தானா என்று கேட்டனர். உல்தாள் இது தேவனுடைய வார்த்தைதான் என்று உறுதியாக கூறினாள். ஜனங்கள் அதனை ஏற்றுக்கொண்டனர். இது இரட்சிப்பையும் நியாயத்தீர்ப்பையும் குறித்த அறிவிப்பு. ராஜாவும் ஜனங்களும் தங்கள் விசுவாசத்தை புதுப்பித்துக் கொண்டனர். அதன் விளைவாக தங்களுடைய முன்னோர்கள் பின்பற்றியதுபோல தேசத்தின் உடன்படிக்கையை உண்மையாய் பின்பற்றுவோம் என்றனர்.

உல்தாளுடைய தலைமைத்துவத்தின் சிறப்பியல்புகள்:

- சத்தியத்தை நேர்மையுடன் பேச உல்தாள் பயப்படவில்லை.
- அவளுடைய முன்மாதிரியான நல்வாழ்வின் நிமித்தம் ஜனங்கள் அவளிடத்தில் சென்றனர்.
- சாதாரணமக்களாலும், அரச குடும்பத்தாராலும் பெரிதும் மதிக்கப்பட்டார்.
- தேவனோடு தொடர்ச்சியான உறவு வைத்திருந்தார்.

- அவள் ஒரு நெருக்கடியில் அழைக்கப்பட்டாள் - அவள் ஒரு தலைவராகப் பார்க்கப்படுகிறாள்.
- எரேமியா, செப்பனியா வாழ்ந்தகாலத்தில் இவள் வாழ்ந்தாள். ஆனால் இவருடைய ஆலோசனையைத் தான் தேடினார்கள்.
- அவருடைய தனிப்பட்ட அதிகாரத்தோடு அவன் பேசவில்லை, தேவனுடையச் செய்தியாளராக மாத்திரம் வெளிப்பட்டார்.

**ஆண்களும் பெண்களும் தேவனுடைய சாயலில் சமமாக கூட்டாய்மையோடு சிருஷ்டிக்கப்பட்டார்கள்.**

உல்தாள் தன்னுடைய ஊழியத்தை நிறைவேற்றினாள், தேவனுடைய சித்தத்தின்படி பயன்படுத்தப்படுவது என்பது ஒரு பாக்கியமும், ஆசீர்வாதமுமாய் இருக்கிறது. இந்த சந்ததியிலும் தேவன் தன்னுடைய ஜனங்களை மறுமலர்ச்சி அடையச் செய்யவும் பரிசுத்தமடையச் செய்யவும் அநேக உல்தாள்களை எழுப்புவாராக.

**ஜெபம்:**

அன்பு ஆண்டவரே, உம்முடைய பிள்ளையாக உம்முடையசமூகத்தில் வந்து உம்மோடு தொடர்பிலிருக்கும் வாய்ப்புகளை எங்களுக்கு தாரும், அதன் மூலம் உம்மை உறுதியாய் பறைசாற்றவும் என் ஜனங்களை மறுபிறப்பிற்குள் நடத்தவும் முடியும். இயேசுவின் மூலம் கேட்கிறோம். ஆமென்.

**விவாதத்திற்கு:**

- உல்தாளுடைய குணாதியசயமாக எவைகளை நீங்கள் பார்க்கிறீர்கள்?
- உல்தாளைப் போல தலைமைத்துவத்திற்கு வரவும் சமூகத்தை மறுபிறப்பிற்கும் மறுமலர்ச்சிக்கும் கொண்டுவர ஆயத்தப்படுகிறீரா?
- தேவனோடு உங்களுடைய தொடர்பு எப்படி இருக்கிறது? தேவனுடைய பெண்மணியாய் தேவனுடைய செய்தியை அவருடைய ஜனங்களிடத்தில் தெரிவிக்கிறீரா?

நான் இந்தியாவில் கொல்கத்தாவில் ஒரு தேசிய எடிட்டராக பணி செய்கிறேன். எனது கணவர் மேஜர் ஷைஜு ராஜ் முதன்மை பண அலுவலராக பணி செய்கிறார். நாங்கள் இருவரும் கர்த்தருடைய பணியில் 22 ஆண்டுகளாக இருக்கிறோம். எங்களுக்கு 21 வயது நிரம்பிய ஷில்ஜோ என்ற மகளும் 18 வயது ஆன ரியா என்ற மகனும் இருக்கிறார்கள்

---

**பாடம் -9**

**கிறிஸ்துவை நமது உறவுகளில் கனப்படுத்துதல்**

**1 பேதுரு 3:8-9**

**லெப் கர்னல் ஜெனட் ஆஸ்கிராப்ட்**

நல்ல மன ஆரோக்கியத்திற்கு மற்றவர்களுடன் தொடர்பு தேவை. வேதாகமத்தில் உள்ள முதல் வெளிப்பாடுகளில் ஒன்று, தேவன் நம்மை மற்றவர்களுக்கு தேவைப்படும்படி வடிவமைத்துள்ளார்; மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல' (ஆதி.2:18). இரண்டு அடிப்படையான தேவைகள் ஒரு சமுகத்திற்குள் நேசிக்கப்படுவதும் ஏற்றுக் கொள்ளப்படுவதும் ஆகும். இவைகள் செழிப்பான தேவன் விரும்பிய வாழ்வுக்கு நேராக நம்மை வழி நடத்தம். பரிசுத்த வேதத்தில் அநேக அறிவுறுத்தல்களை நாம் காண்கிறோம், அவைகளை பயிற்சியில் கொண்டுவரும் பொழுது நம் வாழ்வு மனரீதியாகவும், சரீரரீதியாகவும் ஆவிக்குரிய ரீதியிலும் செழிக்கும். ஆண்டவருடைய வசனம், அவைகள் செம்மையும் இருதயத்தை சந்தோஷப்பிக்கிறதுமாயிருக்கிறது. சங்.19:7-8 புதிய ஏற்பாட்டில் உறவுகளை மேம்படுத்துகிற பிரதான இடங்களையும் மற்றவர்களை நடத்த வேண்டிய விதத்தையும் நாம் காணலாம். 1பேதுரு 3:8-9-ல் ஒரு நபரின் மன ஆரோக்கியத்திற்கும் செழிப்பான வாழ்வுக்கு தேவ விருப்பத்திற்குரிய ஆலோசனைகளையும் காணலாம்.

புறஜாதிகளாக இருந்து, இயேசுவின் மீது கொண்ட விசுவாசத்திற்காக துன்புறுத்தப்பட்டதால் தங்கள் வீடுகளை விட்டு ஓடிப்போன ஒரு குழுவினரைப் பற்றி பேதுரு 1வது நிருபம் கூறுகிறது. இது ஊக்குவிக்கவும், முகவுரையாக எப்படி வாழ வேண்டும் என்பதையும் கிறிஸ்துவோடு எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது.

1பேதுரு 3.8-ல் எப்படி நாம் மற்றவர்களோடு உறவில் இருக்க வேண்டும் என்பதை பற்றி கூறுகிறார்.

8 வது வசனத்தில் தான் முன்பு கூறிய அனைத்தையும் சுருக்கமாகக் கூறுகிறார். மற்றவர்களுடன் நமது எல்லா உறவும்; குணநலன்களும் தெளிவாக இருக்க வேண்டும். எல்லா குணமும் நாம் நல்ல மனநிலையில் இருக்க உதவும்.

இந்த வேத பகுதியில் உள்ள அனைத்தம் சாதாரண வலியுறுத்தல் அல்ல; அவை வலிமையான அறிவுறுத்தல்கள்.

கிறிஸ்துவை நமது உறவுகளில் கனப்படுத்த என்ன செய்ய வேண்டும்.

**1. Be like minded – ஒரு மனம் வேண்டும்.**

இது விசுவாசிகளுக்குள் கிறிஸ்தவ விசுவாச கோட்பாட்டின் ஒற்றுமையை குறிக்கிறது. இந்த விசுவாச பிரமாணத்தின் முக்கிய அம்சத்தை அப்போஸ்தலரின் விசுவாசத்தின் மூலம் (Apostles reed) வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நாம் தேவனுக்குள்ளாக ஒருலமனப்பாடு உள்ளவர்களாய் இருக்க வேண்டும். கருத்து வேறுபாடுகள் உறவில் விரிசல் ஏற்படாமல் இருக்க, ஆண்டவரைத் தேட வேண்டும்.

நாம் இந்த ஒருமனப்பாட்டை அப்போஸ்தலர் 2:1-ல் பாக்கிறோம். பெந்தோகொஸ்தே என்னும் நாள் வந்த போது அவர்களெல்லாரும் ஒரு மனப்பாடு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். ரோமர் 12:16-ல் “ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்”.

## 2. Be Sympathetic - இரக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

அங்கிலாத்தியில் “Sympathy” (இரக்கம்) என்ற வார்த்தை; Greek வார்த்தையில் இரண்டு அர்த்தத்தை கூறுகிறது. ஒன்று “பாதிக்கப்படுதல்” என்று பொருள் மற்றொன்று உணர்தல்” என்று பொருள்.

அதாவது நம்முடைய சுகம் துக்கங்களை மற்றவரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். ரோமர் 12:15-ல் பார்கிறோம். “சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள்.” ஒருவருடன் இரக்கமுள்ளவர்களாய்’ இருக்கும் போது அவர்கள் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள் மேலும் கொடுக்கல், வாங்கல் உறிவலும் இருக்க பழகுங்கள்.

## 3. Love one another சகோதார் சிநேகமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

சொந்த சகோதர சகோதரிகளாக ஒருவரையொருவர் நேசியுங்கள், அன்பு உள்ளவர்களாக இருங்கள்.

இந்த வகையான அன்பு I பேதுரு 1:22 ஆம் வசனத்தியில் நாம் பார்க்கும் போது ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிற படியால், சுத்த இருதயத்தோடு ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்.”

A West word studies in New Testment என்ற புஸ்தகத்தில் அன்பு என்றால் விருப்பம் என்ற அர்த்தத்தை கொண்டது. இந்த அன்பை தான் இயேசு கிறிஸ்து யோவான் 13:25-ல் சொல்கிறார்” இதிலிருந்து நாம் அனைவரும் இயேசுவின் சீஷர்கள் என்று புரிந்து கொள்ள முடியும். இயேசு கூறுகிறார், மன்னியுங்கள் நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள். பேதுரு கூறுகிறார் ஆசீர்வதியுங்கள் நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள் என்று.

இவ்வழிகளில் மற்றவர்களை நடத்துவது, ஆரோக்கியமான வாழ்க்கைக்கு வழிவகுக்கிறது.

**ஜெபம்**

நாங்கள் செழிக்க எப்படி வாழ வேண்டும் என்பதை எங்களுக்கு காட்டியதற்கு நன்றி

**லெட் - கர்னல் ஜேனட் கிரா.:.ப்ட்**

**அமெரிக்கா கிழக்கு**

மூன்று பேரக் குழந்தைகளுடன் கூடவே இருப்பது தான் ஜெனட்டின் விருப்பமான பொழுது போக்கு. பேர குழந்தைகளுடன் இல்லாத சமயம் நடைபயிற்சி, வாசிப்பு, மற்றும் விளையாடுவதை விரும்புகிறாள் ஜெனட் M.A. கவுன்சிலிங்கில் படித்துள்ளார்.

விவாதிக்க:

1 பேதுரு 3-8:9 ஆகிய வசனங்களில் இருந்து நடைமுறைக்கு கொண்டு வர கடினமாக இருப்பது எது.?

2. பரிசுத்த ஆவியின் உதவியின்றி இந்த வழியில் முழுமையாக வாழ முழயுமா?

---

பாடம் - 10

## ஒரு ஆணின் உலகம்

**ஆதி 2: 18-25**

**கேப்டன் ஜெசிகா வெல்ச் - துர்சி**

ஜேம்ஸ் பிரவுனின் இது ஒருஆணின் உலகம் என்ற பாடலை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? இது 1966-ஆம் ஆண்டு வெளியானது. ஆனால் அதன் வார்த்தைகள் இன்னும் எதிரொலிக்கின்றன. இந்த பாடலைக் கேட்டதிலிருந்தே என் மனதில் அதன் வரிகள் ஒட்டிக்கொண்டிருந்தன. அதன் வரிகள் என்னை உணர்வடையச் செய்தது. நான் நடத்தப்பட்ட விதத்தில் நான் அவற்றை அனுபவித்திருக்கிறேன். சுவாரஸ்யமாக அதன் வரிகள் இவ்வாறு தொடர்கின்றன். ஆனால் அது ஒன்றும் இருக்காது ஒரு பெண் அல்லது பெண் இல்லாமல் ஒன்றுமில்லை. என்னால் அந்த வரிகளின் உணர்வை பாராட்ட முடியும். ஆனால் அது சரியா என்று தெரியவில்லை. ஆண்களின் உலகத்தில் வளர்வதும் வாழ்வதும் பெண்களுடைய பார்வையிலும் அடையாளத்திலும் அதிகமாகத் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
ஆண்களும் பெண்களும் ஒன்றாக தங்களை சிருஷ்டித்தவருக்காக வாழவும் சேவை செய்யவும் அழைக்கப்படுகிறார்கள்.

தேவன் மனிதர்களை தமது சாயலாக உண்டாக்கினார். (ஆதியாகமம் 1:26 திரியேக தேவனின் பார்வையிலிருந்து நாம் மறைக்கப்படுவதில்லை. அவருடைய கைகளினால் நாம் வனையப்படுகிறோம். நம்முடைய முதல் சுவாசம் ஆண்டவரிடமிருந்து வெளிப்படுகிறது. எங்களுடைய முதல் இதயதுடிப்பு ஆண்டவரை பிரதிப்பலிக்க வேண்டும். இதை சங்கீதக்காரன் தாவீது உறுதி படுத்துகிறான். இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும் (சங் 139:6). ஆணும் பெண்ணும் அவருடைய சாயலாக படைக்கப்பட்டார்கள். இங்குதான் நாம் நமது அடையாளத்தைக் காண்கிறோம்.

பின்பு தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். ஆதியாகமம் (2:18) *"துணை"* என்பதின் கிரேக்கவார்த்தை "ezer" (எஸர்) தேவன் பெண்களை வெறும் உதவியாக அல்லது அடிபணிந்தவர் என்றோ அல்லது தேவைக்கு மட்டும் உபயோக்கும் பொருளாகவோ படைத்தாரா? இதுதான் நமது அடையாளமா?

'*எஸர்*' என்ற வார்த்தை பழைய ஏற்பாடு புஸ்தகத்தில் 21 முறைவருகிறது. இந்த 21 முறையில் 2 தடவை ஏவாளைப் பற்றியது. 3 தடவை இஸ்ரவேலரே முற்றுகையிடப்பட்ட போது உதவி செய்யும் படி அழைத்த சக்திவாய்ந்த நாடுகளைப் பற்றியது. மீதமுள்ள 161 தடவை "ezer" (ஏஸர்) என்ற வார்த்தை தேவனே நமக்கு உதவி என்பதைப் பற்றியது. அவரே உதவியற்றவர்களுக்கு அடைக்கலமானவர். என யாத் 18:4 உபா 33:26 சங் 33:20-ல் நாம் பார்க்கிறோம். இது தான் எஸர் என்பதின் பொருள்.

தேவன் தாம் படைத்த படைப்புகளுக்கு அடி பணியவில்லை என்றால் ஒரு ஈசரின் உதவி மற்றவரைவிட தாழ்ந்தவா் என்ற அா்த்தம் தவறானது. புழைய ஏற்பாட்டில் உதவிசெய்பவரைஅடிமைஎன்றுபரிந்துரைக்கவில்லைமாறாககா்த்தரேநமக்குதுணை (சங் 33:20) இரட்சகா் நம்மை பாதுகாப்பவராக பரிந்துரைக்கிறாா்.

இது ஒரு ஆணின் உலகம் அல்ல. இது தேவனின் உலகம் கா்த்தா் சமமாக (equal) அவா்களை இந்த உலகத்தில் படைத்துள்ளாா். பெண் இல்லை என்றால் ஆண் பாதிமட்டுமே. அதேபோல் ஆண் இல்லை என்றால் பெண்ணும் பாதிதான்.

நமது சொந்த அடையாளத்தை உணா்ந்து கொள்வது என்பது ஊஞ்சல் ஆடும் போது எதிரெதிர் திசையில் வருவது போலன்று. 1 கொரி 13:5-ல் அன்பு அயோக்கியமானதை செய்யாது, தற்பொழிவை, நாடாது, சினமடையாது, தீங்கு, நினையாது.

என்னுடைய ஜெபம் என்வென்றால் நான் கிறிஸ்துவுக்குள் யாராக இருக்கிறேன். நான் மற்றவா்களை அவமதிக்கக் கூடாது. நான் யாா் என்பதைக் கௌரவிப்பது மற்றவா்களை கௌரவிக்க என்னை தூண்டவேண்டும். நான் சுய நலவாதியாக இருக்க விரும்பவில்லை. நான் தேவனைத் தேட விரும்புகிறேன். நான் இந்த உலகத்தின் நிலையை கண்டு கோபப்பட விரும்பவில்லை. அதைகண்டு நெகிழ்ந்து பெண்களுக்கு அதிகாரம் அளிக்க முயல்கிறேன்.

நாம் சமமாக இருந்தாலும் வேறுபட்டவராக இருக்கிறோம் என்பதை உணா்ந்து எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஒருவரையொருவா் நேசிக்கக் கற்றுக் கொண்டால் மாத்திரம் நமது அடையாளத்தை முழுமையாக இயேசுகிறிஸ்துவை போல் தியாகமாக வாழ்ந்துகாட்ட முடியும்.

ஆணும் பெண்ணும் கா்த்தருக்காக வாழவும் சேவை செய்யவும் அழைக்கப்படுகிறோம். ஆரம்பத்திலிருந்தே பெண்களை ஒதுக்கி வைப்பதும் ஆண்களின் திறமைகள் மேல் பெருமை கொள்வதும் வழக்கமாயிற்று.

நாம் சமமாகவாழ்ந்தால் அவருடையமகிமைக்காகவும் அவருடைய ராஜ்யத்தின் முன்னேற்றத்திற்காகவும் வாழமுடியும் என்பதை கற்பனை செய்து பாா்ப்பீா்களா? நாம் என்னசெய்யபோகிறோம்? நாம் அனைவரம் இணைந்து நமது தேவனுடைய சாயலின்படி அவருடைய நோக்கத்திற்கெனவும் மகிமைக்கெனவும் தனித்தனியேயும் இணைந்தும் வாழு கட்டாயம் தீா்மானம் செய்ய வேண்டும்.

**ஜெபம்:**

அன்புள்ள தகப்பனே, நீா்தான் எங்கள் எல்லாம், நீா் அல்பாவும் ஒமேகாவுமாய் இருக்கீறீா். நீரே என் ஆரம்பமும் என நோக்கமாய் இருக்கீறீா். என்னை சிந்திக்கவும் அன்புகூறவும் வைத்தபடியால் நன்றி. என்னை உமது இராஜ்யத்தில் சமமாக வைத்தபடியால் நன்றி. என் அடையாளத்தை தழுவி வாழ எனக்கு உதவி செய்யும் என் இதயத்தின் காயங்களை ஆற்றி

புதிய நம்பிக்கையை விதைத்தருளும். நான் யாராக இருக்கவேண்டும் என்பதை பார்க்க என்னை அனுமதிப்பீராக. ஆமென்.

**விவாதிக்க:**

1. இது ஒரு ஆணின் உலகம் என்ற எண்ணத்தால் நான் எந்த வழிகளில் தாக்கத்தை உணர்ந்தேன்? அதன் காரணமாக நான் ஏதேனும் மனக்கசப்பு அல்லது காயங்களை சுமக்கிறேனா? எல்லாவற்றையும் தேவனிடம் ஒப்படைக்க நேரம் ஒதுக்குங்கள்.
2. தேவன் கொடுத்த ஈசரின் அடையாளத்தை நான் தழுவினால் எப்படி இருக்கும்? நான் என்னைப் பார்க்கும் விதத்தை அது எப்படி மாற்றும்?.
3. மற்ற பெண்களை கடவுளின் பார்வையில் சமமானவர்கள் என்ற அடையாளத்தை ஏற்றுக்கொள்ள நான் எப்படி அவர்களுக்கு அதிகாரம் அளிப்பது, அது எப்படி நம்முடைய படைஸ்தலத்தையும் சமூகத்தையும் பட்டணத்தையும் மாற்றமுடியும்.

**கேப்டன் ஜெசிகாவெல்ச் - துர்சி**

**இத்தாலிமற்றும் கீரிஸ்**

கேப்டன் ஜேசிகா தனது கணவர் கிறிஸ்டோபருடன் இத்தாலியில் வசித்துவருகிறார். அவர்களுக்கு லியாம் மற்றும் ர.ஃபேல் என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

ஜெசிகாவுற்கு இயேசுவைப் பற்றிசொல்வதிலும் இல்லாதவர்களுக்கு உணவு அளிப்பதிலும் ஆர்வம்.

---

**பாடம் 11**

**இயேசு கையை நீட்டி தொட்டார்...**

**மத்தேயு 8:1-4**

**கர்னல் ஜீலி போரெஸ்ட்**

ஒரு அவசரமான அழைப்புக்கு உதாரணம்மத்தேயு 8 ல் தேடும்போது காணப்படுகிறது: 'இயேசு கையை நீட்டி அந்த மனிதனைத் தொட்டார்.'

தொழுநோய் ஒரு அசுத்தமான நோயாக பார்க்கப்பட்டது. உங்களுக்கு தொழுநோய் இருந்தால், நீங்கள் உங்கள் குடும்பம் மற்றும் நகரம் அல்லது கிராமத்தை விட்டு வெளியேறி புறநகர் பகுதிகளுக்குச் சென்று வாழ வேண்டும் - வீடற்றவர்கள். தொழுநோயாளிகள் உணவு மற்றும் தண்ணீருக்குகுடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களை உயிர்வாழ வழங்குவார்களென்று நம்பியிருக்கின்றனா. தொழுநோய் உள்ளவர்களாய் இருப்பது மிகவும் கடினமானது. மக்கள் தொழுநோயாளியிடமிருந்து சிறந்த எதையும் பெற விரும்பமாட்டார்கள்: அசுத்தம் என்ற பயத்தில் அவர்கள் நேசிப்பவர்களை அவர்களால் தொட முடியவில்லை. யாரேனும் அவர்களை நெருங்கினால்,'அசுத்தம், அசுத்தம்' என்று மணி அடித்து, சாகும் வரை தனிமையில் வாழ்வார்கள்.

இயேசு கிறிஸ்துவின் நாட்களில் தொழுநோயாளியாக இருப்பது எப்படி இருந்தது என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க முடியுமா? நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடமிருந்து தனிமைப்படுதல், நோய், வீடற்றவர்கள், உணவுக்காக மற்றவர்களை நம்பியிருப்பது, உங்கள் சொந்த ஊரிலிருந்து நிராகரிக்கப்படுவது, வேலையை இழத்தல்இன்னும் ஏராளம். இந்த சூழ்நிலையில் என்னை நான் கற்பனை செய்து கொண்டால், இந்த பட்டியலில் நான் உடல் ரீதியான தொடரபிழப்பை சேர்க்க வேண்டும் - இது நம்பமுடியாத அளவிற்கு கடினமாக இருக்கும் - மற்றொரு நபரால் கட்டிப்பிடிக்கப்படவோ அல்லது தொடவோ முடியாது.

அவசரமான அழைப்பை நாம் எவ்வாறு பார்க்கிறோம்? தனிப்பட்ட முறையில், தொழுநோயாளிக்கு இயேசு எவ்வாறு அவசரமான அழைப்பைக் காட்டுகிறார் என்பதை நான் பார்க்க விரும்புகிறேன்! இங்கு நடக்கும் நிகழ்வுகளின் வரிசை மிகவும் முக்கியமானது. தொழுநோயாளியின் அறிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக,'உமக்கு சித்தமானால்,என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும்' என்று, இயேசு தம் கையை நீட்டி, அந்த மனிதனைத் தொட்டு,'சுத்தமாயிரு' என்றார். ரிச்சர்ட் பெக் அவருடைய 'அசுத்தம்' என்னும் புத்தகத்தில் 'இயேசுவின் முதல் நகர்வு அசுத்தமானசடங்கில் உள்ளது, தொழுநோயாளியைத் தொடுவதன் மூலம், இயேசு வேண்டுமென்றே வேண்டுமென்றே அசுத்தத்தைத் தேடுகிறார், அசுத்தமானவர்களுடன் ஒற்றுமையாக நிற்கிறார் என்கிறார்.

இயேசு தொழுநோயாளியைக் குணப்படுத்தியதன் தாக்கம் என்ன? இது சமூகத்தை எவ்வாறு பாதிக்கிறது? (4வது வசனத்தைப் பார்க்கவும்.)

இன்று நாம் தொழுநோயைப் பற்றி அதிகம் அறிந்திருக்கிறோம், மேலும் தொழுநோயாளிகள் இனி அனுப்பப்படுவதில்லை, நிராகரிக்கப்படுவதில்லை மற்றும் தனியாக இருக்க மாட்டார்கள். மக்கள் இன்னும் ஒதுக்கப்பட்டதாக உணரும்போது, இயேசு இங்கே என்ன செய்தார் என்பதை இன்றும் உலகம் பேசுகிறது. இயேசு மிகவும் ஒதுக்கப்பட்ட மற்றும் மிகவும் ஓரம்கட்டப்பட்டவர்களுக்காக வந்தார் என்று நாம் கொண்டாடலாம்.

இந்த ஆய்வு தீவிரமான சேர்க்கை/பாலியல் நோக்குநிலையைக் கருத்தில் கொள்ளுமாறு கூறுகிறது. பாலியல் நோக்குநிலை என்பது பாலியல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் நாம் ஈர்க்கப்படுகிறோம். பல பாலியல் நோக்குநிலைகள் உள்ளன, மிகவும் நன்கு அறியப்பட்டவை வேற்றுபாலினம், இருபாலினம், ஓரினச்சேர்க்கை போன்றவையாகும். இயேசுவின் முன்மாதிரியிலிருந்து, பாலினத்தவர்களல்லாதவர்களிடம் நாம் எவ்வாறு தீவிரமான சேர்க்கையைக் காட்டமுடியும்?

சாமுவேல் வெல்ஸ்,*பிறகு எப்படி வாழ்வோம்?*என்பதில் எழுதியிருக்கிறார், சமகால பிரச்சினைகளுடன் கிறிஸ்தவ ஈடுபாடு: இன்றும் இதே நிலை LGBT (ஓரினச்சேர்க்கை,இருபாலினச் சேர்க்கை,திருநங்கை) மக்களை மிகவும் புறந்தள்ளி,பலிகடா ஆக்கி, தேவாலயத்தில் குறைத்துவிட்ட ஒரு திகிலூட்டும், கொலைகாரமற்றும் துன்புறுத்தப்பட்ட வரலாறு,LGBTமக்களை வியக்க வைக்கிறது. இயேசுவின் இருதயம், இயேசுவினுடனான தோழமை மற்றும் இயேசுவின் ஊழியம் ஆகியவற்றிற்கு மிக நெருக்கமானவர்களை அடையாளம் காண தனித்தனியாக தகுதியுடையவர்கள்.

இயேசு அடிக்கடி சமுதாயத்தில் நிராகரிக்கப்பட்வர்கள், விபச்சாரிகள், வரி வசூலிப்பவர்கள், தொழுநோயாளிகள் ஆகியோரோடு நட்புப் பாராட்டி அவர்களைப் பற்றி கற்பித்தார், மேலும் இந்த நட்பை நாமும் பிறரோடு சேர்ந்து வாழ்தலைப் பற்றி கற்பிக்க பயன்படுத்தினார்.

மத்தேயு 21:31-ல், இயேசு சொன்னார் ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் - இயேசு ஏன் இதைச் சொன்னார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

மிகப் பெரிய கட்டளையைப் பற்றிக் கேட்டபோது, அவர் நல்ல சமாரியன் உவமையைப் பயன்படுத்தினார்: '*உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூருவாயாக... உன்னிடத்தில் அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புக்கூருவாயாக*' (லூக்கா 10:25-37).

உங்கள் அயலகத்தார் யார்?

நாம் சுவிசேஷத்தில் பிரசங்கிக்கிறோம் 'யாரென்றாலும்' யோவான் 3:16: *'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'.*

ஏன் நாம் பாலியல் நோக்குநிலை தொடர்பான தீவிரமாக சேர்ந்திருத்தல் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்? உலகெங்கிலும் இருக்கிற திரளான மக்களில் நிராகரிக்கப்படுகிறவர்கள், வெறுக்கப்படுகிறவர்கள், வேறுபிரிக்கப்பட்டவர்கள்,கொடுமைக்குள்ளானவர்கள் மற்றும் வன்முறைக்குள்ளானவர்கள் தேவாலயத்திற்குள் கூட அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்ற பயத்தில் தங்களின் உண்மையாக இயல்பாக வாழ முடியாது என்று நினைக்கிறார்கள். ஓரினச்சேர்க்கைக் கருத்துக்கள் மற்றும் நடத்தைகள் காயப்படுத்துகின்றன மற்றும் சேதப்படுத்துகின்றன, மேலும் மக்கள் சுய-தீங்கு மற்றும் தற்கொலையில் ஈடுபடவோ அல்லது உட்படுத்தப்படவோ செய்யலாம். இயேசுவிரைவாக இதை கடந்து செல்வாரா அல்லது தமது கையை நீட்டி அவர்களைத் தொடுவாரா? அவர் அவர்களுக்கு தேவனின் நிபந்தனையற்ற அன்பை வழங்குவாரா?, அவருடைய துன்பம் மற்றும் மரணத்தின் மூலம் அவர் முழு உலகத்திற்கும் ஒரு பரிகாரம் செய்தார் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துவாரா? அவர்களும் அழிய வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் நித்திய ஜீவனைப் பெற முடியும், அவர்களும் கூட போதுமானவர்கள், அவர்களும் கூட தேவனின் பிள்ளைகள்?

**தொழுநோயாளியைத் தொடுவதன் மூலம்,**
**இயேசு வேண்டுமென்றே மற்றும் விருப்பத்தோடே**
**அசுத்தமானதைத் தேடுகிறார்,**
**அசுத்தமானவர்களுடன் ஒற்றுமையாக நிற்கிறார்.**

நாம் மக்களை எப்படி நடத்த வேண்டும்? கொலோசெயர் 3:12-14-ல் உள்ள பதிலை நான் காண்கிறேன்: "*ஆகையால்,நீங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு: ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்'.*

தேவனுடையப் பரிசுத்த ஆவியானவர் நாம் ஒவ்வொருவரும் தீவிரமான சேர்த்துக்கொள்ளுதலை நாக்கி சிறிய படிகளை கூட எடுத்து வைக்கும்படி சவால் விடுவாராக.

நான் சந்திக்கும் அனைத்து மக்களிடமும் உமது அன்பையும் இரக்கத்தையும் பிரதிபலிக்க எனக்கு உதவிசெய்யும். நான் விரைவான உள்ளடக்கத்துடன் வாழ்க்கையோடு கூடத் தொடுவேன். ஆமென்

**விவாதிக்க:**

• உங்கள் உண்மையான பாலியல் அடையாளத்தை மறைக்க வேண்டும் என்று எப்படி உணர்கிறீர்கள் என்பதைப் பற்றி விவாதிக்கவும். நிராகரித்தல், துன்புறுத்தல், பாகுபாடு மற்றும் ஏளனம் ஆகியவற்றின் பயத்துடன் வாழ்வது உங்கள் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கும்?

• உங்கள் சூழலில் அனைத்து பாலியல் நோக்குநிலைகளிலும் தீவிரமான சேர்த்துக்கொள்ளுதலை காண்பிப்பதற்கான சவால்கள் என்ன?

•நாம் சிறப்பாக என்ன செய்ய முடியும்?

**கர்னல் ஜீலிபாரஸ்ட்**
**சர்வதேசதலைமையகம்**

கர்னல் ஜீலிபாரஸ்ட் சர்வதேசதலைமையகத்தில் பாலியல் தொடர்பான உரையாடல்களுக்கான சர்வதேச தொடர்பு உத்தியோகஸ்தராக உள்ளார். ஜீலி 35 ஆண்டுகளுக்குமுன்பாக பீற்றரைதிருமணம் செய்துகொண்டார் மேலும் அவர்களுக்கு இரண்டுமகனும் இரண்டுபேரக் குழந்தையும் இருக்கிறார்கள். இவர் சமுகநீதியின்பாலும் மக்கள்பாலும் அதிக விருப்பம் உள்ளவர்.

---

**பாடம் 12**

**தலைமுறை தாண்டிச் செல்லும் அன்பு**

**ரூத் 1: 1-22**

**மேஜர் லேன்னி பிரவுஸ்கி**

'ரூத் மற்றும் நகோமிக்கு இடையேயான உறவு, இரு வெவ்வேறு தலைமுறைகள் மற்றும் இரண்டு வெவ்வேறு கலாச்சாரங்களை உள்ளடக்கிய ஒரு அழகான, பரஸ்பர, நன்மையான, இன்னும் ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை சித்தரிக்கிறது.

"மாமியார்" என்ற வார்த்தைகளை நீங்கள் குறிப்பிட்டால்,குறிப்பாக மாமியார் உறவில் அனுபவம் உள்ள பெண்களிடமிருந்து,நீங்கள் பெரும்பாலும் மாறுபட்ட பதிலைப் பெறுவீர்கள். சிலர் சிரிக்கலாம், தங்கள் மாமியாரிடமிருந்து பெற்ற அன்பு, அறிவுரை மற்றும் ஏற்றுக்கொள்ளலுக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கலாம்,பெரு மூச்சோடு, தங்கள் அன்பான கணவரின் தாயுடனான உறவை சகித்துக்கொள்வது பற்றி விரிவாகப் பேசுங்கள். ரூத்தின் அனுபவம் நிறைந்த தருணத்தில் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களினான  உறவு போன்று நகோமியுடனான உறவு எனக்கு ஆச்சரியமளிக்கிறது?

பெத்லகேமை (அதன் அர்த்தம் 'அப்பத்தின் வீடு) எப்போது பஞ்சம் தாக்கியதோ, எலிமெலேக் தன் மனைவி நகோமியையும் அவர்களுடைய இரண்டு மகன்களான மக்லோன்,கிலியோனையும் ஆகியோரை மோவாபுக்கு அழைத்துச் சென்றதைக் காண்கிறோம், அங்கு நிலம் வளமானதாகவும், உணவு அதிகமாகவும் இருந்தது. இஸ்ரேலுக்கும் மோவாபியர்களுக்கும் இடையிலான வரலாற்றைக் கருத்தில் கொண்டு, இந்த நகர்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட உணர்வு ரீதியான முன்னேற்றம் என்றும் கூறலாம் (எண்ணாகமம் 25 ஐ பார்க்கவும்). மோவாபில் வசிக்கும் போது, மக்லோனும் கிலியோனும் அதே பகுதியைச் சார்ந்த ஓர்பா மற்றும் ரூத் என்ற இருவரை மணந்தனர். அந்நிய தேசத்தில் அந்நியர்களான எலிமெலெக் மற்றும் அவரது குடும்பத்தினர் நல்ல நாட்கள் வரக்கூடும் என்ற நம்பிக்கையில் தங்களுக்கான வாழ்க்கையை உருவாக்கத் தொடங்கினர். துரதிர்ஷ்டவசமாக, எலிமெலெக்கும் அதனைத் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்குப் பிறகு மக்லோன் மற்றும் கிலியோன் இருவரும் மரித்துப்போகின்றார்கள். நகோமி இப்போது ஒரு விதவையாக அந்நியதேசத்தில் வசிக்கிறாள், அவளுடைய இரண்டு பிள்ளைகளும் இறந்துவிட்டனர். விதவையாக இருப்பது ஒரு கஷ்டமாகப் பார்க்கப்பட்டது, ஆனால் குழந்தை இல்லாத விதவையாக இருப்பது ஒரு சாபமாகப் பார்க்கப்பட்டது, மேலும் மூன்று பெண்களுக்கும் ஒரு காலத்தில் இருந்த பிரகாசமான எதிர்காலம் திடீரென்று அதிகமாக இருண்டுபோனதாகத் தெரிகிறது.

பெத்லகேமில் உணவுக்கான செழிப்பான சூழ்நிலை உயர்ந்து வருவதாக அவள் கேள்விப்பட்டாள்,அதோடு மோவாபில் இருக்க எந்த காரணமும் இல்லை, நகோமி தன் சொந்த தேசத்திற்கு திரும்ப முடிவுசெய்தாள்.ஓர்பா மற்றும் ரூத் இருவரும் நகோமியுடன் திரும்பி வரத் தயாராக உள்ளனர், ஆனால் அவர்கள் பெத்லகேமுக்கு வராமல் இங்கே தங்குவது நல்லது

என்று அவள் வலியுறுத்துகிறாள். ஓர்பா தயக்கத்துடன் தங்க முடிவு செய்கிறாள்,ரூத் உறுதியாக செல்ல முடிவு செய்கிறாள். ஓர்பாவோ அல்லது ரூத் அவர்களின் தெரிந்தெடுத்தலில் நகோமியை அவமதிக்கவில்லை, ஆனால் ரூத் ஓர்பாவை விட ஒரு படி மேலே செல்கிறாள். ரூத் கூடுதலாக நகோமியை நேசிக்கிறாள் மற்றும் கௌரவிக்க முற்படுகிறாள், ஏனெனில் அவள் தனது மாமியாரின் நலனை முன்னிறுத்துகிறார். *'[அன்பு]அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,* (1 கொரிந்தியர் 13:5). ரூத் தனக்குத் தெரிந்த இடத்தில், அவளுடைய நாட்டிற்குள், அவளுடைய கலாச்சாரத்தில், அவளுடைய உறவினர்கள் இருந்த இடத்தில், அவளுடைய தெய்வங்களை வணங்கி, மீண்டும் ஒருமுறை திருமணம் செய்துகொள்ளும் சாத்தியத்துடன் இருந்திருக்க முடியும். உண்மையில், அது 'புத்திசாலித்தனமான' காரியமாக இருக்கும்! ஆனால் ரூத் அப்படி செய்வதில்லை. நகோமியிடம் ரூத் நம்பமுடியாத அன்பைக் காட்டுகிறாள்.

எபிரேய வார்த்தையில் இந்த வகையான தியாக அன்பை '*Hesed*' என்று அழைக்கிறது. '*Hased*' ஆழ்ந்த தியானத்தில் வேரூன்றுதல், பிறருக்கு உண்மையான அக்கறையை வெளிப்படுத்துகிறார் மற்றும் தன் செயலின் மூலம் அதை நிரூபிக்கிறாள். மோவாபிலே தங்கும்படி தன் மாமியார் திரும்பத் திரும்ப வற்புறுத்தியதற்கு ரூத்தின் பதில், நகோமியிடம் அவளுடைய இதயப்பூர்வமான பக்தியையும் தியாகப் பற்றுறுதியையும் காட்டுகிறது: '*நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மை விட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேசவேண்டாம்: நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்: நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்: உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்: உம்முடைய தேவன் என்னுடைய தேவன்'* (ரூத் 1:16).

ரூத் மற்றும் நகோமிக்கு இடையேயான உறவு இரண்டு வெவ்வேறு தலைமுறைகள் மற்றும் இரண்டு வெவ்வேறு கலாச்சாரங்களில் பரவியிருக்கும் ஒரு அழகான, பரஸ்பர,ஒன்றுக்கொன்று சார்ந்திருப்பதை சித்தரிக்கிறது. ரூத்தின் விசுவாசம், அர்ப்பணிப்பு மற்றும் நகோமியுடனான தொடர்பு ஆகியவை அவளுடைய துக்கத்தில் இருக்கும் மாமியாருக்கு எப்படி ஒரு புதிய உலகத்தைத் திறக்கிறது என்பதைப் பார்க்கிறோம். தன்னை "*மாராள்*" (ரூத் 1:20) மற்றும் "*வெறுமை*" (ரூத் 1:21) என்று வர்ணிக்கும் நகோமி, அவளது உடைந்த நிலை மற்றும் இழந்த இழப்புகளிலிருந்து இந்த அவநம்பிக்கை நிறைந்த உலகத்தை எதிர்நோக்கி பார்க்கிறாள்,புதிய நம்பிக்கை அவளுக்குள் வருகிறது,ஒரு புதிய குடும்பம் மற்றும் ஒரு புதிய எதிர்காலம் அவளை நோக்கியிருக்கிறது.நகோமி தான் யார் என்றுணர்ந்து ரூத்திற்கு வழங்க எதுவும் இல்லை,அந்நியஒரு பெண் தனக்கு எதிரான அமைப்பை எவ்வாறு வழிநடத்துவது என்று ரூத்துக்கு அவள் அதிகமான ஆலோசனைகளை கொடுத்தாள் (ரூத்3:1-4). இந்த வழிகாட்டுதல் ரூத்துக்கு ஒரு புதிய கணவர், ஒரு புதிய வாழ்வு, ஒரு ஆண்குழந்தை மற்றும் இயேசு கிறிஸ்துவின் வம்சழியில் ஒரு இடம் ஆகியவற்றை அளிக்கிறது. ஒரு குழந்தையற்ற விதவை, அந்நிய தேசத்தில் குடியேறிய ஒரு பெண்,ஏழு மகன்களைப் பெற்ற பாக்கியத்தை விடரூத் காட்டிய அன்பு பெரியது என்று நகோமியிடம் இஸ்ரவேல் பெண்கள் அறிவிக்கும்போது மரியாதை, அங்கீகாரம் மற்றும் புதிய அந்தஸ்து வருகின்றது (ரூத் 4:14 -15). பிள்ளைகளின் பாதுகாப்பு, ஏற்பாடு, பாதுகாப்பு மற்றும் கடவுளின் ஆசீர்வாதத்தின் மூலமாகக் கருதப்பட்ட வரலாற்றிலிருந்து உயர்ந்த உண்மையான பாராட்டு.

நகோமி தனக்குத் தெரியாத விஷயங்களை ரூத்துக்குக் கற்பிக்கத் தயாராக இருக்கிறாள் (ரூத் 2:22- 3:1-4). நம் தலைமுறைக்கு முன்பிருந்த ஒவ்வொரு தலைமுறைக்கும் நாம் செல்லும் பயணத்தில் செல்ல உதவும் ஞானம், அனுபவம் மற்றும் திறன் உள்ளது. நகோமியின் வாழ்க்கை, கலாச்சாரம் மற்றும் குடும்ப அரசியல் பற்றிய புரிந்துக்கொள்ளுதல் அறிமுகமில்லாத பாதையில் செல்வதற்கு உதவியது. ரூத் தனது மாமியாரிடமிருந்து கற்றுக்கொள்வதற்கும் கற்றுக்கொடுப்பதற்கும் தயாராக இருந்தாள் (ரூத் 3:5), இது போவாஸின் கவனத்தையும் இறுதியில் இதயத்தையும் ஈர்க்க வழிவகுத்தது (ரூத் 4:9-10).

ரூத் புத்தகத்தின் தொடக்க அத்தியாயத்தில் நகோமியின் தாங்கமுடியாத வலியைக் குறித்தது மற்றும், ரூத்தின் கதையுடன் இக்கதை முடிவடையும்போது போவாஸ் மற்றும் ஓபேத் மூலம் நகோமி ஒரு மரபையும் எதிர்காலத்தையும் பெறுவதைப் பார்க்கிறோம். உபாகமம் 25:5-6 இந்த விலைமதிப்பற்ற ஆண் குழந்தை எலிமெலேக்கின் குடும்பத்தின் பெயரைத் தொடரும் என்று நமக்குக் காட்டுகிறது. நகோமி மூலம்,ரூத் எப்படி ஏற்றுக்கொள்ளப்படுகிறாள், மற்றவர்களின் மரியாதையைப் பெறுகிறாள், ஒரு கணவன் மற்றும் குடும்பப் பெயரில் ஒரு இடத்தைப் பெறுகிறாள்,என்பது கால ஓட்டத்தின் அரங்குகளில் தொடர்ந்து எதிரொலிக்கிறது. இரண்டு தலைமுறைகள், ஒன்றாக நேசிப்பதும் கற்றுக்கொள்வதும், ஒருவருக்கொருவர் சாய்வதும், பறிப்பதும், ஆழமான நீரில் நடக்கும்போது இருவருக்கும் மற்றொன்று தேவை. இருப்பினும், அவர்களின் கதையின் மூலம் இன்னும் பெரிதானதொன்று வெளிப்பட்டது. நகோமியும் ரூத்தும் இந்த நிகழ்வுகள் அனைத்தும் இருண்ட, பயங்கரமான,மிகவும் வேதனையானதாக இருந்தாலும், கடவுள் இஸ்ரவேலுக்காக ஒரு ராஜாவை எழுப்பியதன் ஒரு பகுதி என்பதை அறிந்திருக்க மாட்டார்கள், அவன் ராட்சதர்களைக் கொன்று, தனது மக்களை பல பெரிய வெற்றிகளுக்கு இட்டுச் செல்வான்,எல்லாவற்றிற்கும் மேலாக,அவன் தன்னிருதயத்தின் வாழ்கின்ற ஒரு மனிதனாயிருப்பான் என்பதையும் அவர்கள் அப்போது அறிந்திருக்க மாட்டார்கள்.

*‘கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயர்ந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது’* (சங்கீதம் 103:17).

அன்புள்ள ஆண்டவரே, எனக்கு முன் வரும் தலைமுறைக்கும் என்னைப் பின்தொடரும் தலைமுறைக்கும் எனதன்பு ரூத் மற்றும் நகோமியைப் போல இருக்கட்டும், மேலும் நீர் எல்லாவற்றிலும் மகிமைப்படுவீராக.

**விவாதிக்க:**

• உங்களை விட மூத்தவர்கள் மற்றும் இளையவர்களுடன் நீங்கள் தற்போது என்ன உறவுகளை வைத்திருக்கிறீர்கள்?

• உங்களை விட வயதில் மூத்தவர்களிடமும் இளையவர்களிடமும் எப்படி இந்த ‘*Hesed*’ அன்பைக் காட்டலாம்?

• உங்களைப் பின்தொடரும் தலைமுறைக்கு உதவ உங்கள் தற்போதைய கஷ்டங்களை எவ்வாறு பயன்படுத்தலாம்?

**மேஜர் லியான் பிரெளஸ்கி**
**தென் ஆப்பிரிக்கா**

லியான் Mid Kwa Zulu Natal என்ற டிவிஷனின் தலைவராக தனது கணவருடன் சேவை செய்கிறார். இவர் 24 ஆண்டுகளுக்கு முன்பு பிரென்டண் என்பவரைத் திருமணம் செய்துக கொண்டார். 19 ஆண்டுகள் உத்தியோகஸ்தராக இருப்பதோடு மூன்று அருமையான இளைஞர்களின் தாயாக நன்றியுள்ளவராக இருந்துவருகின்றார். இயேசுவை நேசிப்பதோடு மற்றவர்களையும் நேசிப்பது இவருக்கு மிகவும் சந்தோசத்தைக் கொண்டுவருகின்றது. மேலும் இவர் சிறந்த படைப்பாற்றலும் ஆக்கத்திறனும் கொண்டவர்.

--------------------------------------------------------------------------------------------------------------------

**பாடம் -13**

**பாலின சமத்துவத்தில் மற்றவர்களை உள்ளடக்கி மரியாதை செய்தல்:**

**யோவான் 4: 4-26**

**மேஜர் மார்கிரெட் ஸ்டா.ஃ.போர்டு**

‘பிராதான கற்பனை எது?’ (மத்தேயு 22:36) என்று நியாய சாஸ்திரி ஒருவர் இயேசுவிடம் கேட்டபோது, இயேசு யோசிக்கவே இல்லை. அவன் அந்த மனிதனிடம் யுத மதத்தின் அஸ்திபாரமாகிய அவனது விசுவாசத்தை திரும்ப திரும்ப அறிக்கைச் செய்தான். யூத ஆண்களும் பெண்களும் குழந்தைப் பருவத்திலிருந்தே யூத மதத்தின் மைய உறுதிமொழியைக் கற்றுக்கொள்வார்கள் - உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் கர்த்தரிடத்தில் அன்பு கூறுவாயாக - முழு உள்ளத்தோடு. ஆனால், இரண்டாவதாக, இயேசு‘உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக’ (மத்தேயு 22:39) என்று கூடுதலாக கூறினார். யூத மதத்தின் மைய உறுதிமொழி இந்த பகுதி ஆரம்பத்தில் இருந்ததைப் போல வலியுறுத்தப்படவில்லை.
யூத அணிகலன்களுக்கான இணையதளத்தில் இதைக் கண்டேன்:

“எப்படியாயினும்,கடவுளின் அன்பு,யூதர்களின் வாழ்க்கைச்சுருக்கமாக கருதப்படவில்லை. இன்னும் முக்கியமாக,ரபி ஜோசப் தெலுஸ்கின் எழுதிய *யூத நெறிமுறைகளின் குறியீடு* தொகுதி 1ல் குறிப்பிடப்பட்டுள்ள படி, ஒருவர் தன் அயலகத்தாரோடு ஏன் அன்பு கொள்ளவேண்டும்? ஏனென்றால், ஒருவருடைய அயலகத்தார் அன்பு ஒருவரின் கடவுளின் அன்பின் அளவுகோலாகக் கருதப்படுகிறது. கடவுளுக்கு மிகவும் முக்கியமானது எது? ரபி அகிவா-வின் கூற்றுபடி,(எருசலேம் தால்முத், நெடாரிம் 9:4)“உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறு இது தோராவின் முக்கியக் கொள்கையாகும்.” யூதர்கள் மனதில், ஒரு சமமான அடையாளத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு சமன்பாடு உள்ளது. கர்த்தரிடத்தில் அன்பு = பிறனிடத்திலும் அன்பு”.

யூத நியாயசாஸ்திரிகள் இதை அறிந்திருப்பார்கள் என்பதை உணர்ந்தேன். பிறனிடத்தல் அன்பு கூறாவிட்டால் கர்த்தரிடத்தில் அன்பு கூறமுடியாது என்பதை அவர் உணர்ந்திருப்பார். இதற்கும் சமத்துவத்திற்கும், நீதிக்கும், இன்று வாழும் வாழ்க்கைக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேள்வி எழுப்பலாம். என் பதில்: அனைத்தும்!

என்னைப் பொறுத்தவரை, சமத்துவம் என்பது நம்மால் உண்மையில் புரிந்து கொள்ள முடியாத ஒன்று. நாம் ஒரு சமத்துவமற்ற சமூகத்தில் வாழ்கிறோம், அதனால்தான் சமூக நீதிக்கான இந்த போராட்டம் மற்றும் நாம் ஏன் ஒரு சர்வதேச தொண்டு அமைப்பாகவும் திருச்சபையாகவும் இருக்கிறோம். வாழ்க்கை சமமானது அல்ல. சிலர் அரண்மனைகளில் பிறக்கிறார்கள், மற்றவர்கள் தொழுவத்தில் பிறக்கிறார்கள். ஆனால் நாங்கள் சமத்துவத்தைப் பார்க்கவில்லை, சரிசமமாக பார்க்கிறோம்.

சங்கீதம் 99:4-ல் கேருபீன்களின் மத்தியில் வீற்றிருக்கும் கர்த்தரைப் பற்றி பேசுவதைப் பாருங்கள்: *'ராஜாவின் வல்லமை நீதியில் பிரியப்படுகிறது, தேவரீர் நியாயத்தை நிலைநிறுத்துகிறீர்: நீர் யாக்கோபில் நியாயமும் நீதியும் செய்கிறீர்.*

மற்றொரு உதாரணம், 2 சாமுவேல் 8:15-ல் தாவீதைப் பற்றி பேசுகையில்: *"இப்படியே தாவீது இஸ்ரவேல் அனைத்தின் மேலும் ராஜாவாயிருந்தான்: அவன் தன்னுடைய எல்லா ஜனத்திற்கும் நியாயமும், நீதியும் செய்துவந்தான்.''*

சரிசமத்திற்கான எபிரேய வார்த்தை (mê-šā-rîm) உத்தமம், நேர்மை, சமத்துவம், நிலைத்தன்மை,நியாயம்,உண்மை, ஒழுங்கு மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றைக் குறிக்கும். International Standard Bible Encyclopaedia,, சரிசமம் என்பது 'கடிதத்தின் பின்னால் உள்ள சட்டத்தின் ஆவி: நீதி என்பது சரிசமமான உணர்வின் பயன்பாடு'.

மனிதனை தேவன் மண்ணிலிருந்து படைத்தார், உயிரினங்களின் படைப்புக்கு அறிமுகப்படுத்தப்பட்டான்,மேலும் எலும்பிலிருந்து கடவுளால் படைக்கப்பட்டாள் பெண். மனிதனிடமிருந்து எடுக்கப்பட்டு, அவளை மனிதனுக்கு அறிமுகப்படுத்தி, தேவன் ஒரு பாதுகாப்பை அறிவிக்கிறார்: *"இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்''* (ஆதியாகமம் 2:24). இயேசு கூடுதலாக,'*ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்'* (மத்தேயு 19:6).

எங்களுக்கு உண்மையில் ஒருவருக்கொருவர் தேவை. ஆண் தனிமையில் இருப்பது நல்லதல்ல என்று கர்த்தர் சொன்னார், பெண் தனியாக இருப்பது நல்லதல்ல என்று நான் நம்புகிறேன்.

நம்முடைய படைப்பின் நோக்கத்தை நாம் இழந்துவிடுகிறோம் - தேவனுடைய படைப்பைக் கவனித்துக்கொள்வதற்காக, மேலும் ஏசாயாவின் கூற்றுப்படி நாம் "*இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்: இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்'* (ஏசாயா 43:21). நாம் ஒரு நோக்கத்திற்காகவே உருவாக்கப்பட்டுள்ளோம். ஒருவருக்கொருவர் சண்டையிடுவதற்காக அல்ல, ஆனால் ஒருவருக்கொருவர் நிறைவு செய்வதற்காக.

நாம் பிறரை நேசிப்பது பாலின சரிசமத்தில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது? இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் பார்ப்போம்: "பாலின சரிசமம் என்பது பாலினத்தைப் பொருட்படுத்தாமல் தனிநபர்களைப் பற்றிய வாய்ப்புகளை வழங்கும் மற்றும் எதிர்பார்ப்புகளை உருவாக்கும் செயல்கள், அணுகுமுறைகள் மற்றும் அனுமானங்களின் தொகுப்பாகும்.

மற்றொரு விளக்கம்: "சமத்துவம் என்பது அனைவருக்கும் ஒரே தொடக்கக் கோட்டை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது. சரிசமம் என்பது அனைவருக்கும் முழு அளவிலான வாய்ப்புகள் மற்றும் பலன்களை வழங்கும் இலக்கை கொண்டுள்ளது - அதே இறுதிக் கோட்டை'.

பாலின சமத்துவம் நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கு முக்கியம் என்பதை அங்கீகரிக்கிறது மற்றும் கடவுள் நம்மை அவருடைய படைப்பின் உச்சமாக பார்க்கிறார், அதற்கு மேல் எதுவும் இல்லை - ஆனால் நிச்சயமாக குறைவாக இல்லை. நாம் அனைவரும் ஆணும் பெண்ணும் என இரண்டையும் தேடுபவர்கள், நாம் தேவனுடைய இருதயத்தைத் தேடுகிறோம், நம் வாழ்விற்காக

அவருடைய விருப்பத்தைத் தேடுகிறோம், நாம் நேசிப்பவர்களுக்காக அவருடைய விருப்பத்தைத் தேடுகிறோம்.

பாலின சமத்துவத்தின் அழகிய எடுத்துக்காட்டு கிணற்றங்கரையில் இருக்கும் பெண்ணின் கதை. இந்த பெண்ணின் வாழ்க்கை நியாயமாக இல்லை. விரும்பி விட்டுப் போன வாழ்க்கை,ஊரில் உள்ள பெண்களால் புறக்கணிக்கப்படுவது என்னவென்று அவளுக்குத் தெரியும். தன் கலப்பு இனத்திற்காக யூத சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சமாரியன் - ஒரு "அரை இனமாக" - வளர்க்கப்படுவது எப்படி என்பதை அவள் அறிந்தாள்.

ஆனாலும் இயேசு அவளைத் தேடி வந்து தண்ணீர் கேட்டார். யோவான் 4:4-26ல் அவளது கதையைப் படியுங்கள். இந்த ஆணிடம் இந்தப் பெண்ணைத் தாக்கும் ஒரு விஷயம், அவனது நியாயமற்ற பகுத்தறிவு - அவளை அறிந்த அனைவரிடமிருந்தும் அவள் எதிர்பார்க்காத ஒன்று. அவர் தன்னைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திருப்பதை அவள் உணர்ந்தாள், இன்னும் அவர் அவளுக்கு ஜீவத் தண்ணீரை வழங்கினான்.

அவர் செய்வது போல் அவருடைய படைப்பை நேசிக்க தேவன் நமக்கு உதவட்டும். பிதாவே,என்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவதன் உண்மையான அர்த்தம் என்ன என்பதை எங்களுக்குக் கற்றுத்தாரும். அப்படி செய்வதன் மூலம் நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் இன்னும் உம்மை தெளிவாகப் பிரதிபலிப்போமாக!. ஆமென்.

**விவாதிக்க:**

• என்னைப் பிடிக்காத எவரிடமும் பேசும்போது என்ன செயல்கள், அணுகுமுறைகள் மற்றும் அனுமானங்களை என் இதயத்தில் சுமக்கிறேன்?

• இயேசுவை அறிவது என்பது,எப்படி எனது செயல்கள், அணுகுமுறைகள் மற்றும் அனுமானங்களை மாற்றுகிறது?

• பாலினத்தைப் பொருட்படுத்தாமல் நான் எப்படி வாய்ப்புகளை வழங்குவது மற்றும் தனிநபர்களைப் பற்றிய எதிர்பார்ப்புகளை உருவாக்குவது?

**மேஜர் மார்கிரெட் ஸ்ட.ஃ.போர்டு**

**மத்தியகிழக்கு**

நான் ஒரு உத்தியோகஸ்தரின் மகள், ஜெப்-ன் மனைவிமற்றும் நட்டாலி, நிக்கோல், மத்தேயு, மாற்கு, ஆகியோரின் தாயாவேன். மிக முக்கியமாக, கெய்லி, பெஞ்சமீன்,டேனியல், நிகோலி, கியானு, கானர் ஆகியோருக்கு பாட்டியாகவேன். தற்போது நான் மத்திய-கிழக்கின் தலமைத்துவத்துவத்தில் ஒருவராக குழுவில் சேவை செய்கிறேன். நான் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அபுதாபியில் வசிக்கிறேன். ஏராளம் பழக்கவழக்கங்களும் சட்டதிட்டங்களும் நிறைந்த இந்த சூடான நாட்டில் நான் பணி செய்கிறதை என் பாக்கியமாகக் கருதுகிறேன்.

---

**பாடம் 14**

**சொந்தமானது**

**கலாத்தியர் 3:28**

**மேஜர் மேரி டேவிஸ்**

*'யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை: நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்'* (கலாத்தியர் 3:28).

மெரியம்-வெப்ஸ்டர் அகராதியின்படி "சொந்தமானது" என்ற வார்த்தையின் அர்த்தம் 'ஏற்றதாக, பொருத்தமானதாக அல்லது சாதகமாக இருப்பது ஒரு நபருடைய அல்லது பொருளின் சொத்தாக இருக்க வேண்டும்'.

தனிமையாகவும், அன்பற்றவராகவும், தொடர்பில்லாதவராகவும் உணர யாரும் விரும்புவதில்லை. தேவன் நம்மை உறவுகளோடு படைத்தார், இது நம்மைப் பாராட்டவும்,ஏதோ பெரிதானதொன்றின் ஒரு பகுதியாகவும் உணர வைக்கிறது. குடும்பம் அல்லது நண்பர்கள் இல்லாமல் நாம் தனியாக இருக்க வேண்டும் என்பது கடவுளின் நோக்கம் அல்ல. இதை அவர் ஆதியாகமம் 2:18-ல் நிரூபித்தார்: *'கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்'*

தேவன் மனித இனத்தைப் படைத்து, மற்றவர்களுடன் பழகுவதற்கு நமக்கு ஏற்பாடுகளைச் செய்தார். தேவனின் பிள்ளைகளாக நாம் கருத வேண்டிய சில முக்கியமான குறிப்புகள் இங்கே உள்ளன.

நீங்கள் விலக்கப்படவில்லை - நீங்கள் சொந்தமானவர்: "*கர்த்தரே தேவனென்று அறியுங்கள்: நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்: நாம் அவர் ஜனங்களும், அவர் மேச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.*"(சங்கீதம் 100:3).

நாம் தேவனுடைய சொத்து என்பதை இது உறுதிப்படுத்துகிறது. நாம் அவருக்குச் சொந்தமானவர்கள், நாம் தேவனிடமிருந்து விலக்கப்படவில்லை, மாறாக,'அவர் நம்மைப் படைத்தார், நாம் அவருடையவர்கள்.

வாழ்க்கையின் சூழ்நிலைகள் நம்மை முடக்கிவிடலாம். வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வது தவிர்க்க முடியாதது. எவ்வாறாயினும், நமது சவால்கள் நாம் இருக்கும் இடத்தை மாற்ற முடியாது. நாம் '*தேவனுடைய ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.*

*'பூமியும்,அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது'* (சங்கீதம் 24:1).

சங்கீதக்காரன் நமக்கு திசை, நோக்கம் மற்றும் நிறைவேற்றத்தின் உணர்வைத் தருகிறார். எங்களில் எவரும் விலக்கப்படவில்லை, நீங்களும் நானும் 'அதில் வாழும் அனைவரின்' ஒரு பகுதியாக இருக்கிறோம், அதாவது நாங்கள் அனாதைகளோ அல்லது கைவிடப்பட்டவர்களோ அல்ல.

கடவுள் நமக்காக செய்த ஏற்பாடு உண்மையான சொந்தத்திற்கு வழிவகுக்கிறது. உண்மையான சொந்தம் என்பது முழுமையாக அறியப்படுவதும் முழுமையாக நேசிக்கப்படுவதும் ஆகும்.

நாம் யார், நாம் எங்கிருக்கிறோம் என்பதை மறுத்து வாழ்வது நம் வாழ்க்கையை எதிர்மறையாக பாதிக்கலாம் மற்றும் குறைந்த சுயமரியாதை, நம்பிக்கையின்மை, பயம் மற்றும் நிராகரிப்பு என வெளிப்படும். எவ்வாறாயினும், நமது மதிப்பு மற்றும் நாம் யாருக்கு சொந்தமானவர்கள் என்பதைப் புரிந்துகொள்வது, நம்மை எதிர்மறையாக வேலை செய்ய வழிவகுக்கிறது. இது நமது அன்றாட வாழ்க்கையில் மனரீதியாக நிலையானதாக இருக்கும். வேதாகமத்தில் இத்தகைய உறுதிமொழியை நாம் காணலாம்: *'நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன்'* (எரேமியா 29:11)*'நாம் தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்'* (எபேசியர் 2:10).

வேதாகமம் நாம் எங்கு, யாரைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது மற்றும் நாம் நமது பரலோகத் தந்தையால் படைக்கப்பட்டோம் என்பதை நினைவூட்டுகிறது. அவர் நம்மைக் கவனித்துக்கொள்வதை உறுதிசெய்கிறார், அவருடைய வார்த்தையின் மூலம் நாம் தனியாக இல்லை, மாறாக நாம் அவருடையவர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறார்.

சொந்தமானதின் நன்மைகள் என்ன?

*'நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே: தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே: கிறிஸ்துவுடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்'* (ரோமர் 8:17).

**(A) சுதந்திரவாளிகள் (வாரிசுகள்)**

மகன் என்ற உரிமையின் மூலம் தனக்கு ஒதுக்கப்பட்ட உடைமையைப் பெறுபவர் வாரிசு என வரையறுக்கலாம்.

மத்தேயு ஹென்றி வர்ணனையின்படி, "பூமிக்குரிய பரம்பரையில் இந்த விதி இல்லை, முதல் பிறந்தவர்கள் மட்டுமே வாரிசுகள் ஆனால் திருச்சபை முதன்முதலில் பிறந்தவர்களின் திருச்சபை, ஏனென்றால் அவர்கள் அனைவரும் வாரிசுகள். பரலோகம் சுதந்திரராயிருக்கிற புனிதர்களுக்கும் வாரிசுகளுக்கும்.

**'தேவன் மனித குலத்தை உருவாக்கி, மற்றவைகளோடு இணைந்து அனுபவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்'**

பரிசுத்த வேதாகமம் ஆதியாகமம் 25:29-34 -ல் ஏசாவைப் பற்றிய கணக்கு கொடுக்கிறது, அவர் முதன்முதலில் சேஷ்ட புத்திரபாகத்தை பெறுவதற்கு உரிமையுள்ளவராக இருந்தார். இருப்பினும், இந்தச் சலுகையை அவர் தனது இளைய சகோதரர் யாக்கோபு என்பவருக்கு விற்றதன் மூலம் முற்றிலும் புறக்கணித்தார், சட்டப்படி இந்தச் சொத்தில் பங்கு கொள்ளக் கூடாது.

கிறிஸ்துவுடன் உடன்சுதந்தரராய், முதல் அல்லது இறுதி மகன் என்று இல்லை, நாம் அனைவரும் சமமானவர்கள், அதே வாய்ப்பை மற்றும் நன்மைகளில் பங்கு கொள்கிறோம்.

**B.பாதுகாப்பு**

'கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார்' (நீதிமொழிகள் 3:26).

வெளியில் விடப்பட்ட செம்மறி ஆடுகள் ஓநாய்களால் பாதிக்கப்படலாம் ஆனால் ஒரு மேய்ப்பனுடன் அவை பாதுகாப்பாக இருக்கும். நாம் அனைவரும் பாதிக்கப்படக்கூடியவர்களாகவும், நம்மைச் சுற்றியுள்ள தீமையின் கூறுகளுக்கு வெளிப்படுவதையும் உணர்கிறோம் வாழ்க்கையின் நிச்சயமற்ற தன்மை பெரும்பாலும் நம்மை பயமுறுத்தும் நிலையில் வைக்கிறது. போதகரும் எழுத்தாளருமான ரிக் வாரன் கூறினார்: 'உங்களிடமிருந்து ஒருபோதும் பறிக்க முடியாதவற்றில் மட்டுமே உண்மையான பாதுகாப்பைக் காண முடியும் - கடவுளுடனான உங்கள் உறவு.' பாதுகாப்பு என்பது கடவுளின் குழந்தைகளாக நாம் பெறும் மிகப்பெரிய நன்மைகளில் ஒன்றாகும். இருப்பினும், தாக்குதல்களில் இருந்து நாங்கள் விலக்கு பெற்றுள்ளோம் என்று அர்த்தம் இல்லை. நம் பயத்தை விரட்டியடிக்கும் நம்பிக்கை நமக்கு இருக்கிறது என்றும், நம் எதிரிகளை நாம் தனியாக எதிர்கொள்ளவில்லை என்றும் அர்த்தம்.

எங்கள் பரலோகத் தந்தையே எங்களுடைய பிள்ளைகள் எங்களுக்கு சாதனையாளர்கள், ஆகையால் அவர் நம்மை உள்ளடக்கிய தன்மையைக் கொடுக்கிறார். அவர் பாரபட்சமற்றவர், தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லது பட்சபாதமற்றவர்,இன்னும்,அவர் நியாயமானவர், சமமானவர், பண்பானவர்.

கருத்தில் கொள்ள வேண்டிய பிற நன்மைகள்:

**•வெளிப்படையான தொடர்பு**: "*அப்பொழுது நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்: நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன்*"(எரேமியா 29:12).

**•ஆயத்தப்படுத்தியிருக்கும் இதர முன்னேற்பாடுகள்**: '*காக்கைக்குஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு,ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது, அவைகளுக்கு இரையைச் சவதரித்துக் கொடுக்கிறவர் யார்?* (யோபு 38:41).

**•கட்டுப்பாடு**: "**எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே"** (எபிரெயர் 12:8).

அன்புள்ள பிதாவே, உமது மூலம் எங்களுக்கு தந்த வாக்குத்தத்தங்களையும் உறுதியையும் ஏற்கும் ஞானத்தை உம்முடைய வார்த்தை மூலம் எங்களுக்குத் தாரும், நாங்கள் உமக்கு சொந்தமானவர்கள், நீர் எங்களை நித்தியமாக நேசிக்கிறீர். ஆமென்.

**விவாதிக்க**:

• தேவன் உங்களுக்கு வழங்கியதில் நீங்கள் அதன் ஒரு பகுதி என எதனை உணர்கிறீர்களா?

•நீங்கள் தேவனுக்கு எவ்வளவு மதிப்புமிக்கவர்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா?

• தேவன் உங்களுக்காகச் சேமித்து வைத்திருக்கும் நன்மைகளை நீங்கள் அனுபவிப்பதை உறுதிசெய்ய நீங்கள் என்ன செய்யத் தயாராக இருக்கிறீர்கள்?

**மேஜர் மேரிடேவிஸ்**
**கரீபியன்**
நான் ஜமைக்காவில் பிறந்தேன். மேஜர் டெஸ்மன் டேவிஸ் உடன் சேர்ந்து, 22 ஆண்டுகளாக நான் இரட்சணிய சேனையில் உத்தியோகஸ்தராக இருக்கிறேன். அபிகாயில் மற்றும் ஜேர்மி என்ற எங்கள் இரண்டு பிள்ளைகளுக்கு பெற்றோர்களாக நாங்கள் இருக்கிறோம். நாங்கள் படைஸ்தல உத்தியோகஸ்தர்களாக கிழக்கு ஜமைக்காவிலுள்ள ஹேவன்டேல் மற்றும் கின்டையர் படைஸ்தலத்தில் சேவைசெய்கிறோம். டிவிஷனல் பெண்கள் ஊழியங்களின் செயலராகவும் கூடுதல் பொறுப்பை வகிக்கிறேன். நான் புதிய நண்பர்களோடு பழகுவதிலும் டிராக் அண்ட் ஃபீல்டு என்ற சிறந்த விளையாட்டைப் பார்ப்பதிலலும் மகிழ்ச்சியடைகிறேன்.

---

**பாடம் 15**

**இரக்கத்தின் களம்: ரூத்திடமிருந்து பாடம்**

**ரூத் 1: 16**

**கேப்டன் மார்ட்டா கோவெர்னோ**

அதற்கு ரூத்: *''நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்: நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்: நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்: உம்முடைய ஜனம் என்னடைய ஜனம்: உம்முடைய தேவன் என்னுடைய தேவன்''* (ரூத் 1:16).

**அறிமுகம்**

பரிசுத்த வேதாகமத்தில் எனக்கு மிகவும் பிடித்த புத்தகம்ரூத். நான் அதைப் படித்து பலமுறை பிரசங்கித்திருக்கிறேன், ஒவ்வொரு முறையும் நான் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்கிறேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்! நான் இந்தப் புத்தகத்தை விரும்புகிறேன், ஏனென்றால் மற்றவர்களைக் கவனித்துக்கொள்வது குறித்து இயேசு (மற்றும் புதிய ஏற்பாடு) நமக்குக் கற்பித்த பலவற்றை இது பிரதிபலிக்கிறது என்று நினைக்கிறேன். எனவே, குறைபாடுகள் உள்ளவர்களைப் பற்றி யோசித்துப் பார்த்தால்,ரூத் மற்றும் பிற கதாபாத்திரங்களிலிருந்து நாம் என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்?

1) **மாற்றம் மற்றும் கற்றுக்கொள்ளுதல் மேல் உள்ள ஆர்வம் (அத்தியாயம் 1)**

நகோமி விதவையாக குழந்தையின்றி ஒரு அயல்நாட்டில் விடப்பட்டாள். அவள் "இயலாதவள்'' என்று அழைக்கப்படவில்லை என்றாலும், அவளுடைய காலத்தில், அவளுடைய நிலை அவளை மிகவும் பாதிப்படையச் செய்திருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, அவள் இப்போது தனது சொந்த ஊரான பெத்லகேமுக்குச் செல்ல முடிவு செய்தாள், அவள் அங்கேயிருக்கும் காலம் வரைக்கும் இன்னும் பாதிக்கப்படலாம். அவளது மருமகள்கள் இருவரும் தங்கள் குடும்பங்களுடன் எளிதாக தங்கியிருக்கலாம், ஆனால் ரூத் தனது மாமியாருடன் செல்வதை தெரிவு செய்கிறாள்.

**'அவர்களுடைய உலகத்தைப் பற்றி மேலும் அறியவும், அவர்களுக்குச் சிறப்பாக உதவுவதற்கு எங்கள் வழிகளை மாற்றவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பது முக்கியம்.'**

இந்தச் செயலில் நமது முதல் பாடம் அடங்கியிருக்கிறது. ரூத்தின் மாற்றத்திற்கான தன்னார்வம் மற்றும் அவளது விருப்பம். மக்களைப் பற்றி, குறிப்பாக மாற்றுத்திறனாளிகளைப் பற்றி சிந்திக்கும்போது, அவர்களின் உலகத்தைப் பற்றி மேலும் அறியவும், அவர்களுக்கு சிறப்பாக உதவுவதற்கான நமது வழிகளை மாற்றவும் நாம் தயாராக இருப்பது முக்கியம்! சக்கர நாற்காலியில் இருப்பவர், அணுகுதளம் இல்லாத கட்டிடத்திற்குள் நுழைவது எவ்வளவு கடினம் என்பதை நாம் உண்மையிலேயே புரிந்துகொள்கிறோமா? அல்லது முதியவர்கள் நடப்பதற்கு பயன்படுத்தும் உபகரணத்தைப் பயன்படுத்தி பேருந்தில் ஏற வேண்டுமா?

அவ்வாறே இயேசு நம் வழிகளில் வாழ நம் உலகிற்கு வந்தார். சில சமயங்களில்ரூத் செய்தது போல் நாம் நமது “குமிழ்கள்”லிருந்து வெளியே வர வேண்டும்.

**2) எல்லைக்கு அப்பால் அக்கறைகொள்ளுதல்: (அத்தியாயம் 2)**

இஸ்ரேலிய சட்டம் அதன் சமூகத்தில் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பற்றி அக்கறை கொண்டிருந்தது. பல சட்டங்கள் அவர்களைப் பாதுகாத்தன (அனாதைகள், விதவைகள்,ஏழைகள்...). இந்த “விளிம்பு” நிலை மக்களுக்கு உதவ வேண்டுமென்று அவர்கள் நடவடிக்கை எடுத்ததில் ஆச்சரியம் எதுவும் இல்லை. உதாரணமாக, அறுவடையின் போது, வேலைக்காரர்கள் எஞ்சிய தானியங்களை எடுக்க மாட்டார்கள், அதனால் ஏழைகள் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து அவற்றைப் பொறுக்கிக் கொள்ள முடியும்.

ரூத் தனக்கும் நகோமிக்கும் உணவளிக்க இதைத்தான் செய்கிறாள், இந்த நேரத்தில் அவள் நமக்கு பாடம் சொல்லும் அடுத்த கதாபாத்திரத்தை சந்திக்கிறாள்: போவாஸ். அவர் சொந்தமாக வயல் வைத்திருக்கிறார்,ஒரு நல்ல இஸ்ரவேலரைப் போல, எஞ்சிய தானியத்தைப் பொறுக்க மக்களை அனுமதிக்கிறார். ஆயினும்கூட, போவாஸ் தனது வழக்கமான கடமையை மீறிச் செல்கிறார், மேலும் ரூத்துக்கு கூடுதல் தானியங்களைக் கொடுக்கும்படி அவர் தனது கண்காணியிடம் கூறுகிறார்.

நமது சமூகத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு நாம் ‘போதும்’ என்று பல நேரங்களில் உணர்கிறோம். ஒருவேளை நாம் ஒரு தொண்டு நிறுவனத்திற்கு பணத்தை நன்கொடையாக வழங்கலாம் அல்லது சில நிகழ்வுகளுக்கு தன்னார்வத் தொண்டு செய்யலாம். ஆனால் இதைத் தாண்டிச் செல்ல நாம் தயாரா? மக்கள் தங்களுக்குத் தேவையானதைப் பெறுவதை உறுதிசெய்ய, போவாஸைப் போலவே நாமும் கூடுதல் எல்லைக்கு சென்றால் அது எப்படி இருக்கும்? ரூத்தும் நகோமியும் இன்று சமூகத்தில் உள்ள பல மாற்றுத்திறனாளிகள் போல,வாய்ப்புகள் இல்லாத ஒரு சமூகத்தில் இரண்டு விதவை பெண்கள் இருப்பது போன்று.

**3.விலைக்கிரயம் செலுத்துதல் (அத்தியாயம் 3 மற்றும் 4)**

மீண்டும் ஒரு முறை சட்டத்தைப் பயன்படுத்தி, போவாஸ் அவர்களின் சொத்தை மீட்டு ரூத்தை திருமணம் செய்துகொள்வதன் மூலம் அவர்களுக்கு இன்னும் அதிகமாக உதவ முடியும் என்பதை நகோமி உணர்ந்தாள். போவாஸ் இந்த வாய்ப்பைப் பற்றி அறிந்ததும், அனைத்து சரியான நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை உறுதிசெய்து,ரூத்திடம் இந்த வேலையை தான் கவனித்துக்கொள்வதாக உறுதியளித்தார். போவாஸைப் பொறுத்தவரை, வார்த்தைகள் உறுதிமொழிகள்: அதே நாளில் அவர் ரூத்திடம் சொன்னார், அவர் அதைச் செய்து முடித்தார். அவர் அவளை மணந்த பிறகு, அவர்கள் நகோமியை கவனித்துக் கொண்டனர் மற்றும் ஒரு குழந்தை அவர்களுக்கு பிறந்தது.

ரூத்துக்கும் நகோமிக்கும் உதவுவதற்குப் பணம் கொடுக்கத் தயாராக இருந்ததால் போவாஸ் ‘பேசுவது’ மட்டுமல்ல, அவர்களுக்குத் தேவையான ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகத் தன் சொந்த வாழ்க்கையை மாற்றிக் கொள்ளும் வண்ணம் தானியமும் கொடுத்தார். மக்களுக்கு உதவுவது என்பது அவர்களுக்கு ஏதாவது (பணம், உணவு

போன்றவை) கொடுப்பது மட்டுமல்ல, அவர்களின் நிலைமையை மாற்ற நாம் வேறு என்ன செய்ய முடியும் என்பதை உணர்ந்து கொள்வதுமாகும். குறைபாடுகள் உள்ளவர்கள் தங்கள் வரம்புகளை மாற்றாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் தங்கள் சூழ்நிலைகளை மாற்றலாம்! நமது வார்த்தைகளும் அர்ப்பணிப்பாக இருக்க வேண்டும். சில சமயங்களில் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் தேவைகளுக்கு இடமளிக்க நமது ஆறுதலின் பகுதியை விட்டுக்கொடுக்க வேண்டும்.

துணைநிற்கும் வேத வசனங்கள்: *பிலிப்பியர் 2:3-4 கலாத்தியர் 6:2*

அன்புள்ள ஆண்டவரே, எங்கள் சமூகங்களில் உள்ள ஊனமுற்றோரின் தேவைகளில் இருந்து விலகி எங்கள் வாழ்க்கையை வாழ்வதில் சில சமயங்களில் குற்றவாளிகளாக இருக்கிறோம். கற்றுக்கொள்ளவும், கடமைக்கு அப்பாற்பட்ட அக்கறையுடனும், விலை கொடுக்கவும் தயாராக இருக்கும் இதயத்தை எங்களுக்குத் தாரும். ஆமென்.

**விவாதிக்க:**

• உங்கள் சமூகத்தில் உள்ள குறைபாடுகள் உள்ளவர்களுக்கான சவால்கள் பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்? நீங்கள் எப்படி அவர்களை நன்றாக புரிந்து கொள்ள முடியும்?

•ரூத்தின் புத்தகத்தைப் பற்றியும் அதற்கு ஆதாரமான வசனங்களைப் பற்றியும் நாம் கற்றுக்கொண்டதை மனதில் வைத்துக்கொண்டு, மாற்றுத்திறனாளிகளைக் கவனித்துக்கொள்வதில் கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படி முன்மாதிரியாக இருக்க முடியும்?

• மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்ய நாம் எப்படி இடத்தை உருவாக்குவது?

**கேப்டன் மார்ட்டாகோவெர்னோ**
**ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல்**

கேப்டன் மார்ட்டா ஒரு போர்த்துக்கீசியர் ஆவார். ஒரு இரட்சணிய சேனை உத்தியோகஸ்தராக ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல் மாகாணத்தில் சேவை செய்கிறார். இதனை எழுதும் நேரத்தில் அவர் போர்டோவில் வயதானவர்களுக்கான தினசரி பராமரிப்பு இல்லத்தின் இயக்குனராக இருந்தார். இவருக்குதிருமணமாகி ஏழு வயதுள்ளமகள் இருக்கிறாள். ஊழியத்தில் போதிப்பது இவருக்கு மிக விருப்பம். ஆவிக்குரிய புதுபெலனை அடைய நினைக்கும் போதெல்லாம் இவர் கடலை அதிகமாக விரும்புகிறார். ஆகவே, இவரது விடுமுறை நாட்களை அதிகமாக கடற்கரையில் செலவு செய்வது இவரது தீவிர ஆசை.

---

**பாடம் : 16**

**தேவனின் மகிமை கனம் இவற்றின் வடிகால்: இனம் -கலாச்சாரம் - பன்முகத்தன்மை**

**ரோமர் 15:7**

**மெப்லிவிலிஹராபிரென்கோ**

*'கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்'*(ரோமர் 15:7)

கலாச்சாரத்தின் பன்முகத்தன்மை, இனம், வேறுபாடுகளில் உள்ள சவால்களை உணர ஒரு இரட்சணிய சேனை உத்தியோகஸ்தனின் குழந்தையாக இருப்பதைவிட வேறொரு சிறந்த பாக்கியம் இல்லை. ஒவ்வொரு மூன்றுவருடத்திற்குஒரு முறை எப்பொழுதெல்லாம் எனது பெற்றோர்கள் தங்களது புதிய இடத்துக்கான மாறுதல் உத்தரவை பெறுகிறார்களோஅப்பொழுதெல்லாம் எங்களது பொருட்களைக் கட்டுவதும் அவிழ்ப்பதும் வெகுவிரைவில் புதிய இடத்தின் சூழல்களுக்கேற்றார்போல் மாறிக்கொள்ளவும், பழகிக்கொள்ளவும் பலவந்தம் பண்ணப்பட்டதை நான் நினைவில் வைத்திருக்கிறேன், இருப்பினும், இப்படிச் செல்வது அதிக சவால்களின் ஒருபகுதியாக இருக்கவில்லை. அந்த சவாலானது, சமூக எதிர்பார்ப்புகளுடன் அறிமுகமில்லாதக் கலாச்சாரங்களில் என்னைக் கண்டறிவது மற்றும் அசாதாரணக் கலாச்சாரங்களில் வாழும் போது இளைமையாக இருப்பதற்கும், எனக்கு வழக்கமாக இருப்பதைச் செய்வதற்கான சுதந்திரத்திற்கான விருப்பத்திற்கும் இடையில் சரியான சமநிலையைக் கண்டறியப் போராடுவதாகும்.

**தேவஜனங்களாக நாம் தேவனின் லென்ஸ் மூலம் வாழ்க்கையைப் பார்க்க நமது ஆவிக்குரியக் கண்கள் திறக்கப்பட ஜெபிக்கவேண்டும்.**

வயது பக்குவம் நிறைந்தவளாக, நான் இந்த பன்முகத்தன்மையின் கோணத்தில் வெவ்வேறு சூழல்களை நான் அனுபவித்திருக்கிறேன். நான் பங்களாதேசத்தில் இந்திய எல்லையில் இரண்டுமாதங்கள் வாழ்ந்தேன், ஒரு இளைஞர் குழுவிற்குநான் வழிகாட்டியாக இருந்து சமூக நலத்திற்கான பொறுப்பான பணிகளை செய்துகொண்டிருந்தோம். ஒரு இளம் கறுப்பினப் பெண்ணாக, நீண்ட சுருள் ஜடை மற்றும் கென்யா நாட்டுச்சரிப்புடன், நான் சமூகத்தின் பார்வையில் தெளிவாகத் தெரிந்தேன். வீட்டிற்குச் சென்றதும், குழந்தைகள் என்னைப் பார்ப்பதற்காக மரங்களில் ஏறியதும் எனக்கு நினைவிருக்கிறது. அவர்களில் பெரும்பாலானோர் இதற்குமுன்பு ஒரு ஆப்ரிக்கரைப் பார்த்ததில்லை, மேலும் நான் சென்ற இடமெல்லாம் கூட்டம் பின்தொடர்ந்தது. இது நாம் புத்தகங்களில் படிக்கும் கதையாகத் தோன்றலாம், ஆனால் மற்றவர்கள் நலம், இனம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை உள்ளடக்கிய அத்தருணத்தின் யதார்த்தமும், சக்தியும் மிகவும் குறிப்பிடத்தக்கவை.

கிறிஸ்தவர்களாக, நாம் வித்தியாசமாகப் பார்க்கும் தம்முடைய மக்களுக்கான தேவனுடைய நோக்கத்தைநாம் பகுத்தறிய வேண்டும். தேவன் கட்டளையிடுவது போன்று பன்முகத்தன்மையின் மதிப்புகளை அங்கீகரிப்பது நமது தேவை. ரோமர் 15:7 –ன் கருப்பொருள் யாதெனில், தேவனுடைய மகிமைக்காக ஒருவரையொருவர் அவர்கள் இருக்கிற வண்ணமாகவே அவர்களை ஏற்றுக்கொள்ளுதல் ஆகும். நீங்கள் எப்போதாவது மற்றவர்களைப் பற்றி இப்படி யோசித்திருக்கிறீர்களா?

உலகக் கண்ணோட்டத்திலுள்ள பன்முகத்தன்மை, வெவ்வேறு இனங்கள், நம்முடைய ‘மாறுபட்ட’கருத்துக்கள், நம்முடைய சொந்த நம்பிக்கைகள் மற்றும் ஆவிக்குரிய விளக்கங்கள் ஆகியவை தேவனின் மகிமைக்காக உள்ளனவா? நான் இந்தவசனத்தை பலமுறை படித்து, மற்றவர்களைப் பற்றிய நமது சொந்த நம்பிக்கைகளைக் குறிக்கும் கோணத்தில் கண்டேன்.

மற்றவர்களைக் குறித்த நமதுகருத்து, நாம் யார் என்பதை நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து பிரதிபலிக்கின்றது என்பதை நாம் கண்டிப்பாக உணரவேண்டும். நீங்கள் ஒரு கல்லை தண்ணீரில் வீசும் போது சிற்றலையின் விளைவு என்ன நினைவூட்டுகிறது. ஒவ்வொரு சிற்றலையும் ஆதாரத்துடன் இணைக்கப்படுகிறது. ரோமர் 15:7 ஐ பற்றி நீங்கள் நினைக்கும் போது விசுவாசிகளாகிய நமது செயல்களுக்கு இடையே ஒரு தொடர்பு உள்ளது. இந்த தலைமுறை இளைஞர்கள் தங்கள் சொந்த கலாச்சாரங்களுக்கும், உலகளாவிய கலாச்சாரத்திற்கான இனம், சுதந்திரம் மற்றும் தொழில்நுட்பம் இதற்கு இடைப்பட்ட வித்தியாசமான புரிதலுடன் வளர்ந்து வருகிறார்கள். எவ்வளவோ இனக்கலவரம் இருக்கும் அளவுக்கு, அவர்களுடைய இனம், கலாச்சாரம் மற்றும் ‘வேறுபாடு’ ஆகியவை அவர்களின் கொண்டாட்டம் மற்றும் தகவல் தொடர்புக்கான வாய்ப்பாக பார்க்கப்படுகின்றது.

உன்னைப் பற்றி என்ன? கிறிஸ்து உங்களை எதற்காக ஏற்றுக் கொண்டார் என்பதைக் குறித்து நீங்கள் என்ன நம்புகிறீர்கள்? நீங்கள் மற்றவர்களைப் பார்க்கும் விதத்தை மாற்றுகிறதா? உங்களிடமிருந்து வேறுபட்டவர்களை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதை இது பாதிக்கிறதா? எந்தெந்த வழிகளில் நீங்கள் மற்றவர்களை ஏற்றுக்கொள்வது ஆண்டவருக்கு மகிமைகொடுத்தது? ஆண்டவரின் மகிமைக்காக, தேவனின்மக்களின் மாற்றத்தை ஏற்படுத்தும் சிற்றலை விளைவுகளின் ஆதாரமாக நீங்கள் இருக்கிறீர்களா? அல்லது தேவனுடைய மக்கள் வேறுபட்டிருப்பதால் அவர்கள் மேலும் துண்டிக்கப்பட்டு பிரிந்து செல்வதற்குநீங்கள் பங்களிக்கிறீர்களா?

தேவ ஜனங்களாக நாம் தேவனின் லென்ஸ் மூலம் வாழ்க்கையைப் பார்க்க நமது ஆவிக்குரியகண்கள் திறக்கப்பட ஜெபிக்கவேண்டும்: அதன் மூலம் வேறுபட்ட இனங்களின் அழகு,கலாச்சாரங்களைகாணவும் இத்தகையதனித்துவத்தின் மூலம் துதிமற்றும் ஆராதனைக்காக ஒரு தளத்தை உருவாக்க வேண்டும் என்றுநான் நம்புகிறேன்.நமது கூட்டங்களின் மகுடமாக விளங்கும் பல்வேறு உணவு வகைகள், நடனங்கள், உடை வகைகள் மூலமாக இத்தகையத் தனிச் சிறந்த கலாச்சார வேறுபாட்டின் அழகை நான் அனுபவித்திருக்கிறேன். ரோமர் 15:7 இந்த பன்முகத் தன்மையை அதிகமாகப் பாரட்ட நமக்கு நினைவூட்டுகிறது, மற்றவர்களைக் கருத்தில் கொண்டு ஆண்டவருடைய துதிக்கான பாதையாகக் கருதி அவருடைய பரிசுத்த நாமம் பெரிதாகிறது. இவை அனைத்தும் அவரைப் பற்றியது.

பன்முகத்தன்மையின் மூலம் ஆண்டவரைஆராதிப்பதற்கான இந்தவழிகளை நாம் ஆதரித்து வழி நடத்தவேண்டும், உலகின் கலாச்சாரத்தைப் பற்றி நம்பிக்கையுடன் பேசவேண்டும், மேலும் நாம் விரும்பாதகலாச்சாரம் மற்றும் இனத்துடன் இணைக்கப் பட்டுள்ள தற்போதைய அநீதிகளை மாற்றுவதில் விடாமுயற்சியுடன் இருங்கள். ஏனென்றால் நான் ஒரு கருப்பின பெண்ணாக என் தோலின் நிறத்தால் சில களங்கத்தை அனுபவித்திருக்கிறேன். பங்களாதேஷில் எனது அனுபவத்தில் இன வெறியுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் எனது

வித்தியாசத்தினால் ஆண்டவரின் துதியும் அவரது பெயரையும் எடுத்துக் காட்டுவதில் அனைத்தையும் கொண்டிருந்தேன். நான் என்னை ஒரு கருப்பினப் பெண்ணாக ஒருபோதும் நினைத்ததில்லை, ஆனால் தேவன் என்னை பங்களாதேஷ்- க்கு அனுப்பினார் என்று எனக்கு தெரியும். ஏனென்றால் நான் வித்தியாசமாயிருந்தேன், மேலும் அந்த வித்தியாசம் அவருடைய விசுவாசிகள் அங்கு ஆண்டவரைப் பார்க்கவும் சாட்சிகரிக்கவும் அந்த இடம் தேவையானதாக இருந்தது.

நான் சமீபத்தில் கிறிஸ்துமஸ் நாளன்று அமெரிக்கா சென்றிருந்த போது முதல் முறையாக பனியைப் பார்த்தேன். மரங்கள், வயல்வெளிகள் மற்றும் ஓட்டுச் சாலைகளில் அதன் அழகு பிரமிக்க வைத்தது. பனியால் மூடப்பட்டிருந்த புல்வெளிகளை நான் ரசித்தேன், மேலம் சில குடும்பங்கள் பனியால் மூடப்பட்டப் பச்சை நிற மரங்கள் வழியாக கிறிஸ்துமஸ் விளக்குகளை வைத்திருந்தார்கள். குளிர்கால உடைகள் என்னை ஒரு கம்பளிப் போர்வை போன்று காண்பித்தது. நான் பார்த்த அழகு எதோடும் ஒப்பிட முடியாதது. நான் ஜெபிப்பதை நிறுத்திவிட்டு ஆண்டவருக்கு நன்றி சொன்னேன். ஒரு புதிய உலகத்தை நான் பார்க்கிற இந்த வாய்ப்பிற்க்காகவும் என் அமெரிக்க நண்பர்களைப் பார்க்கிற அனுபவத்திற்காகவும். அவர்களுக்கு இது சாதாரணமானது, ஆனால் இது தேவன் எனக்கு தந்த ஒரு வாய்ப்பும் அனுபவமுமாயிருந்தது. தேவனிடமிருந்த மாயாஜாலம் அந்த இடத்தில் என் ஆவி அவரைத் துதித்தது மேலும் எனது கென்யா நண்பர்களுக்கு இதை சொல்ல சாட்சியானேன். நான் கென்யாவில் நண்பர்களுக்கு விருந்தளித்து ஒட்டகச்சிவிங்கி மையத்திற்கு அழைத்துச் சென்றபோது இது போன்ற வெளிப்பாட்டைப் பார்த்திருக்கிறேன். அவர்களின் முகங்களில் உள்ள பிரமிப்பும் பிரகாசமும் விலை மதிப்பற்றது மற்றும் கடவுளின் படைப்பு எவ்வளவு அற்புதமானது என்று. எனக்கு இயல்பானதை இடை நிறுத்திப் பாராட்ட நினைவூட்டுகிறது.

ரோமர் 15:7 ல் உள்ள இந்தபாடம் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றாகும். இது இனவேறுபாடு, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களைநாம் ஏற்றுக் கொள்ள நினைவுபடுத்துகிறது. நம்முடைய வித்தியாசத்தில், கிறிஸ்து இன்னும் நம்மை ஏற்றுக்கொள்கிறார். இதை அறிந்துக் கொள், நாம் யாரையும் நியாயந்தீர்க்கவேண்டுமா?

உங்களது வாழ்வைக் குறிந்து சிந்தியுங்கள், உங்களது வேலை மற்றும் பன்முகத்தன்மை கொண்ட மக்கள், தேவன் உங்களுக்கு கொடுத்தது. நீங்கள் இருக்கும் இடத்தில் தேவன் உங்களை வேண்டுமென்றே வைத்திருக்கிறார். அவர் தனது மகிமைக்காவும், அவருடைய மேலாதிக்கத்தின் வெளிப்பாட்டிற்காகவும் உங்களைச் சுற்றி வேறுபாடுகளை வைத்துள்ளார்.

பிதாவே, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால், உம்முடைய வார்த்தையை வெளிப்படுத்தியதால் நான் உமக்கு நன்றி சொல்கிறேன், உம்முடைய எல்லாபடைப்புகளும், பன்முகத்தன்மையின் அழகும், வேறுபாடுகளும் உமக்கு மகிமையையும், கனத்தையும் துதியையும் செலுத்துகின்றது, உம்முடைய ஆசீர்வாதத்தின் வழியாய் ஞானத்திற்காகவும், உம்முடைய வழிகாட்டுதலோடு வெளிப்பாட்டிற்காக உம்மை நோக்கிப் பார்க்கிறவர்களுக்காக நான் ஜெபிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் நான் ஜெபிக்கிறேன். ஆமென்.

**விவாதிக்க:**

- நான் பணிபுரியும் மக்களிடமிருந்து/ஊழியம் செய்யும் மக்களிடமிருந்துநான் எவ்வளவுவித்தியாசம்? என்னுடைய தனித்தன்மையால் அவர்கள் ஆண்டவரைத் துதிப்பார்களா?
- என்னைச் சுற்றி இருக்கின்ற பல்வேறு வேறுபாடு கொண்டவர்களில் நான் எந்தவழிகளில் தேவனை துதிக்கிறேன்?
- ரோமர் 15:7 ஆண்டவரைப் பற்றியும் இந்த ஊழியத்தில் அவருடைய விருப்பத்திற்காகஅவர் என்னை அழைத்தார் என்பதைப் பற்றியும் என்ன கற்பிக்கிறது?

---

**பாடம் 17**

**மற்றவர்கள் மற்றும் அணுகுமுறை**

**லூக்கா 14: 13-14**

**மேஜர் ஞான்சிஹெல்ம்ஸ்**

*'நீவிருந்துபண்ணும் போதுஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீபாக்கியவானாயிருப்பாய், அவர்கள் உனக்குபதில் செய்யமாட்டார்கள், நீதிமான்களின் உயிர்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்' (லூக் 14:13-14)*

**'தேவனுடைய இராஜ்ஜியத்தில் அநேகர் மேஜையிலிருந்து காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள், ஏனென்றால் திருச்சபை அவர்களுக்கான அணுகுமுறையினை வழங்கவில்லை'**

உலகத்திலும் திருச்சபையிலும் மாற்றுத்திறனாளிகள் மிகப்பெரிய விளிம்பு நிலை மக்கள் தொகையை உருவாக்குகின்றார்கள் என்பதை அறிந்துக் கொள்வது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்காது. இயேசு இந்த பூமியில் நடப்பதற்கு முன்பே ஒரு அசாதாரண சமூகநீதி பிரச்சினை இருந்து கொண்டிருந்தது, அதைதான் அவர் மீண்டும் மீண்டும் சுவிசேஷங்களில் தீவிரத்துடனும் உள் நோக்கத்துடனும் அவர் எடுத்துரைத்தார். இந்தஉலகில் உள்ள மற்றவர்களுக்காக—விலக்கப்பட்டவர்கள், அமைதியாயிருப்பவர்கள், தனிமைப்படுத்தப்பட்டவர்கள மற்றும் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு தங்கள் வாழ்வில் இடம் கொடுக்க வேண்டும் என்று அவர் தன்னுடைய உபதேசத்தை அடிக்கடி கேட்பவர்களுக்கு நினைவு படுத்தினார்.

நமதுசமூகத்தில் அங்கக் குறைபாடுகளால் அவதியுறும் தனிப்பட்டநபர்கள், தனிமையில் வாடுவோர், பேச மறுக்கப்பட்டோர், மற்றும் தங்களுக்கென சொந்தமாக ஒரு இடத்திற்காக ஏங்குகின்றவர்கள் யார் என்பது பெரும்பாலும் நமக்கு தெரியும். இரக்கமும் நேரமும் இல்லாத மனிதர்களால் ஒதுக்கப்பட்ட ஒரு மனிதன் உதவிக்காக வேண்டி அழைக்கின்றதை நாம் மாற்கு 10:46-ஐ வாசிக்கின்றோம். எரிகோவிலிருந்த பார்வையற்ற பர்திமேயு, அவனது இயலாமை அவனை ஒதுக்கப்பட்ட மனிதனாக்கியது. அவன் எங்கும் எதையும் சார்ந்திருக்கவில்லை. அந்தநாளில் இருந்த அனேக இயலாதவர்களோடு, பிச்சை எடுத்து உயிர்வாழத் தனக்கென்று வழக்கமான ஒரு இடத்தை வைத்திருந்தான். அது ஒரு அற்புதமான நாள், அந்தச் சாலையின் ஓரமான அவனுடைய இடம் அவனது வாழ்வை மாற்றி உயிரைக் கொடுத்தது.

மாற்கு 10:47 சொல்கிறது, 'அவன் நசரேயனாகிய இயேசு வருகிறாரென்று கேள்விப்பட்டு: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். ஆவரை 'தாவீதின் குமாரன் 'என்று அழைக்கிறான். அந்த பார்வையற்ற மனிதன் இயேசுவை மேசியா என்று விசுவாசித்தான். அவனுடைய வேண்டுகோள் சுற்றி நின்றவர்களை எரிச்சலடையச் செய்தது, அவர்களோ அவர் அவ்விடம் விட்டு போய்விட்டார் என்று எண்ணினார்கள். அவர்கள் அவனை அடக்கதங்களால் முடிந்த அனைத்தையும் செய்தார்கள். ஆனால் அவன் முன்னிலும் அதிகமாகச் சத்தமிட்டான், "*தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்!*" என்று, இயேசு நின்றார்! ஆவனை அழையுங்கள் என்றார் (மாற்கு 10:49). சீஷர்கள் அவனை இயேசுவின் பாதத்தினருகே அழைத்துக் கொண்டுவந்தார்கள். இயேசு அவனை நோக்கி'நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்று எளிய கேள்விகேட்டார் (50 வதுவசனம்). விசுவாசத்தோடு பர்திமேயு ஒரு எளிய பதிலைக் கொடுத்தான்,'*ரபி,நான் பார்வையடைய வேண்டும்'* (51வதுவசனம்) அவன் இயேசுவிடம் எதையும் கேட்டிருக்கலாம், ஆனால் அவன் தன்னைச் சார்ந்த தனக்கு வேண்டியதைக் கேட்டான். இயேசு அவனைக் குணமாக்கினார், வழியிலே இயேசுவுக்குபின் சென்றான். அதிகமானோர் இந்தசந்திப்பில் நடந்தமிகமுக்கியமானநிகழ்வாகஅவன் சரீரரீதியாக குணம் பெற்று பார்வையடைந்தான்

என்பார்கள். பர்திமேயுவின் வாழ்க்கையில் மிகச் சிறந்தது எதுவென்றால் பெருந்திரள் மக்கள் கூட்டத்தோடு இணைந்து இயேசுவைபின் பற்றிசென்றதுதான் எனலாம். இது அவனது நீண்ட வாழ்வில் முதல் முறையாக அவன் புறக்கணிக்கப்பட்டவனாக அல்லாமல் மிகஅருகில் அணுக இயன்றது. இதற்கு முன்னா் இதேசமூகத்தில் யாரெல்லாம் அவனை இதற்கு முன்பு நிராகரித்தார்களோ அவர்களையெல்லாம் அவனால் இப்போது அணுக முடிகிறது. பார்வையைத் திரும்பப் பெற்றதென்பது, அவனும் சொந்தமானவன் என்பதே அர்த்தமாகும். அவனுடைய உணர்வுகளை கற்பனை செய்யம் போது ஆவிக்குரிய குணமாக்குதல் அவனுக்குஅதுஒருஅனுபவமிக்கதருணம். இன்றுமாற்றுத்திறனாளிகள் எத்தனைபேர் மற்றவர்களுடன் சேர்ந்து இயேசுவைப் பின்பற்ற விரும்புகின்றார்கள் என்பதும் திருச்சபையில் உள்ளவர்கள் அப்படி அவர்களும் அணுகுவதற்கான வாய்ப்புகளை வழங்கவில்லை என்பதும் ஆச்சரியமாக இருக்கிறது.

லூக்கா 14: 12-14, இயேசுபரிசேயர்களிடம் உரையாற்றுகிறார். அவர்கள் சிறப்புமிக்க இருக்கைகளைப் பெற விரும்பினர் மற்றும் முக்கிய விருந்தினர்களை தங்கள் விருந்துக்கு அழைக்கின்றனர். இயேசு மேஜையைச் சுற்றிப் பார்த்தார் மேலும் விருந்தினர்கள் எப்படி மரியாதைக்குரிய இடங்களை தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை கவனித்தார். அவர் விருந்துக்கு அழைத்தவர்களிடம் *''நீபகல்விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும் போது, உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம், அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும். நீ விருந்துபண்ணும் போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய், அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்''.*'கடவுளின் ராஜ்யத்தில் அநேகர் மேஜையிலிருந்துக் காணப்படாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள், ஏனென்றால் திருச்சபை அவர்களுக்கான அணுகுமுறையினை வழங்கவில்லை.'

டெபிதாமஸ்,''மேஜை நாகரிகம்'' என்றகட்டுரையில் சொன்னது,'நாம் எப்போது இயேசுவின் மேஜையில் ஒன்றிணைகிறோமோ, நம்மைச் சுற்றியுள்ள உயர்தர மற்றும் போட்டியிடும் கலாச்சாரத்தை நாம் தீவிரமாக எதிர்க்கிறோம். இது அவ்வளவு எளிதாகவோ அல்லது நேரடியாகவோ இருப்பதில்லை. இதற்கு நீண்டகால கடின உழைப்புத் தேவைப்படுகிறது. தேவனுடைய இராஜ்யத்தில் புசிப்பதும் குடிப்பதும் என்பது,நாம் தொடர்ந்து வகித்துவரும் பதவி வரிசைகளில் அமர்ந்து கொண்டு, நிர்வாக கூட்டம், பல்வேறு கமிட்டிகள், திருச்சபை அரசியல் இவைகளையெல்லாம் சுமந்து திரியும் ஒருமன அழுத்தம் நிறைந்த வாழ்வாகும். அது சோர்வாகதான் இருக்கும். ஆனால் தாழ்மையோடு, முற்றிலும் வேறுபட்ட அந்த மறுமையின் இராஜ்யத்தில் நம்பிக்கை வைப்பதற்குதான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நாம் அமர்ந்திருந்து பல விஷயங்களைப் பேசுகிறோம், நாம் யாரை வரவேற்பு அளிக்க தெரிந்தெடுக்கிறோமோ அது நமது ஆத்துமாவின் தரத்தை வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது, எப்படி உங்களால் 'மற்றவர்களுக்கு' அவர்களும் சார்ந்திருக்கிற இடத்தில் உணர்வையும் ஆவிக்குரியக் குணமாக்குதலையும் கொடுக்கமுடியும் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

பிதா,குமாரன் மற்றும் பரிசுத்தஆவியனவரே, எங்கள் இருதயத்தை உமக்கு நேராகத் திருப்பி, எங்களுடைய மேஜையை மற்றவர்களுக்கு நேராகத் திருப்ப எங்களுக்கு உதவி செய்யும்.

விவாதிக்க:

1. உங்கள் சபையில் அந்தஸ்தான இடத்தில் அமர வைக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் சில தனி நபர்கள் பெயர்களைக் குறிப்பிட இயலுமா? காணாமல்போய்க் கொண்டிருக்கிறவர்களின் பெயர்களைக் குறிப்பிட இயலுமா?

2. குறைபாடுகள் உள்ளவர்களை நாம் எந்த வழிகளில் கவனக் குறைவாக பேச மறுத்திருக்கிறோம்? அவர்களுக்காக நாம் எப்படி குரல் கொடுக்க முடியும்?
3. நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று மாற்றுத் திறனாளிகளை அறிந்து இந்தக் கேள்வியைக் கேட்கமுடியுமா?

---

**பாடம் 18**

கனிதரும்சீஷர்கள்

1கொரிந்தியர் 13:5

மேஜர் ரேச்சல் கந்தமா

*''அன்பு... அயோக்கியமானதைச்*

*செய்யாது,தற்பொழிவைநாடாது,சினமடையாது,தீங்குநினையாது.''* (1கொரிந்தியர் 13:5)

தன்னலமற்ற அன்பு எப்பொழுதும் மற்றவர்கள் மேல் கரிசனையுள்ளது. நாம் நம் குடும்பத்திற்குள் தன்னலமற்ற அன்பைச் செய்தால், நம் வீடு சண்டையில்லா வீடாயிருப்பதோடு, ஊழியங் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்த இயேசு கிறிஸ்துவை கனப்படுத்துவதாகவும் இருக்கும்.

மற்றவர்களுக்கு சேவை செய்வதிலிருந்து விலக்கப்பட்ட வாழ்க்கை இறுதியில் அதன் அர்த்தத்தை இழக்கும். கடவுள் நம்மைச் சேவை செய்வதற்காகப் படைத்தார், நமக்காக வாழ்வதைவிடப் பெரியநோக்கம் கொண்டவராகவும் பயனுள்ளதாகவும் இருக்க விரும்புவதை நம் இதயங்களில் பதித்திருக்கிறார்.

*''ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள். அப்பொழுதுதன் தாயின் வயிற்றிலிருந்துச் சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்து கொண்டு வந்தார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சைகேட்கும்படி, நாடோறும் அவனை அலங்காரவாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கப் போகிற பேதுருவையும் யோவானையும் அவன் கண்டு பிச்சைகேட்டான்.*

*பேதுருவும் யோவானும் அவனை உற்றுப்பார்த்து எங்களை நோக்கிப்பார் என்றார்கள். அவன் அவர்களிடத்தில் ஏதாகிலும் கிடைக்குமென்று எண்ணி அவர்களை நோக்கிப் பார்த்தான். அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலிலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி, வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கி விட்டான். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான். நடந்து குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு அவர்களுடனே கூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான்.''* (அப் 3:1-8)

ஒவ்வொருநாளும் எத்தனைபேரைநீங்கள் சந்திக்கிறீர்கள்,அவர்கள் சவாலான காலங்களைக் கடந்து செல்கிறார்கள் மற்றும் யாராவது கவனித்து உதவுவார்கள் என்று நம்புகிறார்கள்?

பேதுரு செய்த முதல் காரியம், நின்று அந்த மனிதனையும் யோவானையும் பார்க்க வைத்தது. இந்தசெயல் மனிதனை அவர்களுடன் சமமான நிலையில் வைத்தது. நண்பர்களே, நீங்கள் ஒரு கனி தரும் சீஷனாக இருக்க விரும்பினால், நீங்கள் மற்றவர்களை தனிப்பட்ட முறையில் அணுக

வேண்டும் மற்றும் ஒருவரின் அந்தஸ்து அல்லது இனத்தைப் பொருட்படுத்தா மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும்.

அடுத்ததாக பேதுரு செய்தகாரியம், தன்னிடம் பணம் இல்லாவிட்டாலும், தன்னிடம் உள்ளதைக் கொடுப்பதாக அந்த மனிதனிடம் கூறினான். அவரிடம் என்ன இருந்தது? அவனிடத்தில் இயேசு கிறிஸ்து இருந்தார். நாம் மற்றவர்களுக்கு வழங்கக்கூடியது என்ன? பேதுருவுக்கும் யோவானுக்கும் தங்கமோ வெள்ளியோ இல்லாத நிலையில் நாமும் இருக்கக்கூடும். ஆனால் நமக்குள் வசிக்கும் இயேசுவை இதுவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளாதவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

**தனிப்பட்டஊழியம் மற்றவர்களுக்கு:**

நம் வாழ்வின் நிகழ்வுகள், நமது அன்றாட விவகாரங்கள் கூட முக்கியத்துவம் இல்லாமல் பார்க்கப்படக் கூடாது. தேவன் நம்மைப் பயன்படுத்த விரும்பும் விதத்தில் அவை பங்களிக்கின்றன.

சில சமயங்களில் நம்மிடம் கொடுக்க போதுமானதாக இல்லை என்று உணர்கிறோம்,ஆனால் மற்றவர்களைக் கருத்தில் கொள்வதற்குத் தேவைப்படுவது விருப்பமும் கீழ்ப்படிதலும் மட்டுமே, இதனால் மற்றவர்களின் தேவைகளை நம்முடையதைவிட அதிகமாக மதிப்பிட முடியும்.

வாழ்க்கையின் நிகழ்வுகள் எல்லாம் வல்ல இறைவனின் கருவிகள் மற்றும் முகவர்கள் என்பதைநாம் கண்டிப்பாக நினைவுகூர்ந்து அதற்கேற்றார் போல் நாம் செயல்பட வேண்டும். தேவனுடைய வழிகாட்டுதலில் நம் மனதை முன்னெடுக்கவும், அவரைமுழுமையாகச் சார்ந்திருக்கவும் இது தேவைப்படுகிறது.

1இராஜாக்கள் 17: 8-16-ல், அந்த விதவைத் தன்னிடத்தில் கொஞ்சம் இருந்த நிலையிலும் தேவனை அவளுடைய செயலின் மூலம் நம்பினாள்: அவள் போய், எலியாவின் சொற்படிச் செய்தாள், அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்து போகவும் இல்லை, கலசத்தின் எண்ணெய் குறைந்து போகவும் இல்லை. (15-16 வசனங்கள்)

நமது கவனத்தை ஈர்ப்பதற்கும், நமது மதிப்புகளை மாற்றுவதற்கும், குணாதிசயங்கள், முன்னுரிமைகள், நாட்டம் மற்றும் சந்தோஷத்திற்கான நம்பிக்கையின் ஆதாரங்களை மாற்றுவதற்கும் தேவன் இந்த தினசரி சந்திப்புகளைப் பயன்படுத்துகிறார். நம்மைச் சோதிக்கும் அதே நிகழ்வுகள் பெரும்பாலும் தேவன் நம்மை மற்றவர்களுக்கு ஊழியத்தில் பயன்படுத்துவதற்கான வழிமுறையாக மாறும் என்ற உண்மையை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். எலியாவின் தேவை, விதவை மற்றும் அவளுடைய மகனின் வாழ்க்கையின் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்கான அர்த்தம் நிறைந்த சந்திப்பாக மாறியது.

**‘நீகனிகொடுக்கிறசீஷனாக இருக்கவிரும்பினால்**

**நீகண்டிப்பாகதனிப்பட்டமுறையில் மற்றவர்களை**

**அணுகவேண்டும் மேலும் ஒருவரின் நிலைஅல்லது**

**இனத்தைபுறக்கணித்துசேர்த்துக்கொள்ளும்**

**மனப்பான்மை இருக்கவேண்டும்'**

நாம் இங்குநமக்காக இல்லை,மற்றவர்களுக்காகவும் இருக்கிறோம் என்பதை நினைவூட்டுவதற்கு இது உதவுகிறது.

கிறிஸ்துவைப் போல இருப்பது என்பது நம் வேதனையில் கூட நாம் மற்றவர்களைப் பற்றியும், தேவன் நம்மை எப்படிப் பயன்படுத்த விரும்பலாம் என்றும் நினைக்க வேண்டும். மற்றவர்களைப் பொருட்படுத்தாமல், எனக்கு எது சிறந்தது என்பதில் கவனம் செலுத்தும் ஒரு சமூகத்தில் நாம் நம்மைக் காணலாம். இது எனது தொழில், எனது மகிழ்ச்சி, எனது பாதுகாப்பு, எனது முக்கியத்துவத்திற்கு எது சிறந்தது என்பதைப் பற்றியது. மற்றவர்களைக் கருத்தில் கொள்வது நமது சொந்த தேவைகளை மட்டும் பார்க்காமல் மற்றவர்களின் தேவைகளையும் பார்க்கவேண்டும்.

தம்மைப் பின்பற்றி மற்றவர்களுக்கு சேவை செய்யும் வாழ்க்கைக்கு இயேசு நம்மை அழைக்கிறார்.

அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவே, பாரபட்சமின்றி மக்களைச் சென்றடைவதில் சரியான ஆவியை உமது சீடர்களாகப் பெற எங்களுக்குஉதவும். மற்றவர்களின் தேவையை நாம் கவனிக்காத நேரங்கள் பல என்பதால், முதலில் மற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் இதயத்தைப் பெற எங்களுக்கு உதவும். ஆண்டவரே, நாங்கள் மற்றவர்களுக்கு சேவை செய்ய முயலும் போது உமது அன்பின் தரத்தின்படி வாழ எங்களுக்கு உதவும். ஆமென்.

**விவாதிக்க:**

எத்தனை இழந்து போன ஆத்துமாக்களுடன் இணைந்து நீங்கள் வேலை செய்திருக்கிறீர்கள் மேலும் இயேசுவைப் பற்றி அவர்களிடம் சொல்ல எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டீர்கள்?

தேவன் உங்கள் தேவையைச் சந்திக்கும் முன் அல்லது உங்கள் தேவையை பூர்த்திசெய்யும் போது மற்றவர்களின் தேவையை சந்திக்க உங்களை பயன்படுத்த விரும்புகிறார் என்பதைச் கருத்தில் கொண்டீர்களா?

---

**பாடம்: 19**

**நெருக்கடியான நேரத்தில் நம்பிக்கை**

யோபு 1:1-3: 13-22: யோபு 2:1-13

மேஜர் ரோபின் பிளாக்

யோபுவுக்கு நல்ல வாழ்க்கையிருந்தது,

10 பிள்ளைகளுடன், நல்ல நண்பர்கள், திரளான வேலைக்காரர்கள், நல்ல ஆரோக்கியம் மற்றும் பெரும் செல்வம். ஒருநாள் அவன் எல்லாவற்றையும் இழந்தான். உண்மையில், அவன் எல்லாவற்றையும் இழக்கவில்லை, அவன் பக்கத்தில் அவனுடைய அன்புக்குரிய மனைவி இருந்தாள். அவள் அவனுக்குஆறுதலாக இருந்தாள் என்றுநீங்கள் நம்புவீர்கள். ஆனால் யோபுவின் மனைவி *'நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும்'* என்று சொன்னாள்.

அவள் மிகவும் ஊக்கமளிக்கும் நபர் அல்ல! ஒருவேளை யோபின் மனைவிக்கு நாம் இரக்கம் காட்டவேண்டும், எல்லாவற்றிற்கும் மேலாக, அவளும் தன் குழந்தைகளையும், வீட்டையும், செல்வத்தையும் இழந்திருந்தாள். அவளுடைய சொந்த வலியின் காரணமாக அவள் தேவனுக்கு எதிராக நடந்து கொண்டிருக்கலாம்.

யோபுக்கு ஆதரவாக மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்கள் செய்த முதல் காரியம் அவருடன் அமைதியாக அமர்ந்ததுதான். அவன் துக்கம் மகாச் கொடியதுக்கம் என்று கண்டு, ஒருவரும் அனனோடு ஒரு வார்த்தையும் பேசாமல் இரவுபகல் ஏழுநாள், அவனோடுகூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள். (யோபு 2:13).

நமக்கு தெரிந்த ஒருவர் துக்கத்தை அனுபவிக்கும்போது, குறிப்பாக எதிர்பாராத, மிகவும் சோகமான இழப்பைச் சந்தித்தால், நாம் என்ன ஆறுதல் வார்த்தைகளைக் கூறலாம் என்று யோசிக்கலாம். ஆனால் யோபுவின் நண்பர்களைப் போலவே நாம் எதுவும் சொல்ல வேண்டியதில்லை. இப்போது இருக்கும் ஊழியம் மிகவும் சக்திவாய்ந்தது. ஒருநபரின் வலி மற்றும் வேதனையின் கதையைக் கேட்பதற்கு நீங்கள் அக்கறைகாட்டுகிறீர்கள் என்பதைக் காட்டுகிறது. மௌனத்துடன் சுகமாக இருப்பது பரிசுத்த ஆவியின் இரகசியத்தைக் கேட்க இடமளிக்கிறது.

அடுத்தகாரியம்,யோபுவின் நண்பர்கள் அவரைஉற்சாகப்படுத்துவதாகும்: *'விழுகிறவனை உம்முடைய வார்த்தைகளால் நிற்கப் பண்ணி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தினீர்'* (யோபு 4:4)

அவர்கள் சொன்னார்கள் 'இப்போதுதுயரமானகாரியம் என்று எனக்கு தெரியும்,ஆனால் கடந்த காலங்களில் நீர் எவ்வளவு உதவியாயிருந்தீர் என்று நினைக்கிறோம். மிகவும் மனமுடைந்து இருக்கும் ஒருவருக்குஊழியம் செய்யும்போது, கடந்த காலங்களில் அவை நிறைவேறிய காலங்களையும், மற்றவர்களுக்கு உதவ தேவன் அவர்கள் மூலம் செயல்பட்டக் காலத்தையும் நினைவு படுத்துவது உதவியாக இருக்கும். சிலசமயங்களில் கடந்தகாலங்களை நினைவு

கூர்வது ஆறுதலையும் ஊக்கத்தையும் தரும். வாழ்க்கை எப்பொழுதும் கடினமாக இல்லை என்பதையும், எதிர்காலத்திற்கான நம்பிக்கை இருக்கிறது என்பதையும் இது நமக்கு நினைவூட்டுகிறது.

யோபுவின் நண்பர்கள் சிலஅறிவுரைகளை கூறுகிறார்கள்: *'ஆனாலும் நான் தேவனை நாடி,என் நியாயத்தை தேவனிடத்தில் ஒப்புவிப்பேன்'* (யோபு 5:8)

யோபுவின் நண்பர்கள் அவரிடம் முறையிடுங்கள் அல்லது தேவனை நோக்கி ஜெபியுங்கள் என்று கூறுகிறார்கள். மனச் சோர்வடைந்த அல்லது மனவலிமையிழந்த மக்களுடன் நாம் ஊழியம் செய்யும்போது, நாம் பரலோகத்தின் அற்புதமான செல்வங்களுக்கு அழைக்கப்பட்டவர்கள். 'அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்' (1 பேதுரு 5:7) என்பதைநம் நண்பருக்கு மெதுவாக நினைவூட்டலாம். கவலை,பதட்டம் மற்றும் ஊக்கமின்மையை அனுபவிக்கும் ஒருவருக்கு பல நேரங்களில் ஜெபம் ஆறுதலையும் அமைதியையும் அளித்துள்ளது.

இதற்கிடையில், யோபுவின் உண்மை இதுதான்: *'நான் படுத்துக் கொள்ளுகிறபோது, எப்பொழுது எழுந்திருப்பேன்? இராக்காலம் எப்பொழுது முடியும் என்று சொல்லி, கிழக்கு வெளுக்குமட்டும் அரண்டு புரளுகிறதினால் எனக்குப் போதுமென்று போகிறது....இப்படியிருக்கிறதை ஆரோசிக்கிறேன். என் நாளும் உயிரோடிருக்கவிரும்பேன், என்னை விட்டுவிடும். என் நாட்கள் மாயைதானே'* (யோபு 7:4,16)

யோபுவின் அனுபவம் அவனை நித்திரைச் செய்யவிடவில்லை, திருப்பங்கள் மற்றும் தூக்கி எறியப்பட்டநிலை, கடுமையான துக்கம், தூக்கமின்மை, இரவு முழுவதும் இதை நினைத்துக் கவலைப்படுதல், தனிமை, எதற்காக வாழ்கிறோம் என்ற அர்த்தமற்ற நோக்கமின்மை. இவைகள் துக்கம், இழப்பு, மனச்சோர்வு, அல்லது பதட்டம் ஆகியவற்றின் சில அறிகுறிகளாக இருக்கலாம். அனேகர் தங்கள் வாழ்க்கையில் இந்த அடையாளங்களை அனுபவிக்கிறார்கள். இந்த நெருக்கத்தை யோபு எப்படி சம்மாளித்தான் என்று காட்டுகின்றது.

அவனுடைய விரக்தியிலும் கூட, யோபு தேவனைக் கைவிடவில்லை. அந்த நேரத்தில் தனது வாழ்க்கைக்கு எந்த நோக்கமும் இல்லை என்று அவர் உணர்ந்தாலும், யோபு தேவனைப்பற்றிக் கொண்டான், ஏனெனில் அவனது வாழ்க்கை அதைச் சார்ந்திருந்தது. தேவனைப்பற்றி அவன் கூறுகையில், "*அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்*''என்றான் (யோபு 13:15).

நம்பிக்கை எங்கிருந்து வருகிறது என்பது யோபுக்குத் தெரியும். பலர் வாழ்க்கையில் வேதனையையையும் ஏமாற்றத்தையும் அனுபவிக்கிறார்கள், சிலசமயங்களில் அவர்கள் தேவன் மேலுள்ள நம்பிக்கையை இழக்கிறார்கள். தேவன் நம்மைப் பற்றியும் நம்முடையச் சூழ்நிலைகளைப் பற்றியும் கவலைப்படுவதில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் நாம் சுவிசேஷத்தில் படிக்கும்போது, இயேசு பெரும்பாலும் மக்கள் மீது இரக்கத்தோடு சென்றதை அடிக்கடி பார்க்கிறோம். லாசருவின் கல்லறையில் இயேசு அழுவதைப் பார்க்கும்போது, நமது வேதனையை உணரும் தேவனின் பிரதிபலிப்பைக் காண்கிறோம். நாம் விரக்தியையும் வேதனையையும் அனுபவித்தாலும் தேவன் கவலைப்படுவதில்லை என்பது அர்த்தமல்ல. நமது

என்பது நாம் பாவம் நிறைந்த மற்றும் உடைந்த உலகில் வாழ்கிறோம், மேலும் தேவனும் அதைக் கண்டு மனம் உடைந்துள்ளார்.

யோபுதனதுபேரழிவின் சூழ்நிலையின் நடுவில் இருந்தபோது,*"என் மீட்பர்உயிரோடிருக்கிறார் என்றும்,அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்ததோல் முதலானவைகள் அழுகிப்போனபின்பு,நான் என் மாம்சத்தில் இருந்துதேவனைப் பார்ப்பேன் என்றுசொன்னார்.* (யோபு 19:25-26).

இது அப்படிப்பட்டவிசுவாசத்தின் அறிக்கை - என் வாழ்க்கையில் என்னநடந்தாலும்,என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்பதை நான் அறிவேன்! மேலும் இந்த மரண சரீரம் அழிந்தாலும் நான் அவருடன் வாழ்வேன். தேவன் இருளின் காலங்களில் செல்லும் மக்களுக்கு ஊழியம் செய்ய யோபின் வாழ்க்கையை பயன்படுத்தினார். நாம் இயேசுவின் மீது நம்பிக்கை வைத்திருந்தால், நம்முடைய இருளின் காலங்களில் அவர் நம் வாழ்வில் ஊழியம் செய்வார்.

'மனச்சோர்வு அல்லது

முன வலிமை இழந்த மக்களுடன்

நாம் ஊழியம் செய்யும் போது,

நமக்கு வைத்திருக்கிற அற்புதமான

செல்வங்களுக்கு பரலோகம்

நம்மை அழைக்கிறது'

பரலோக பிதாவே,நீர் எங்களை அறிந்திருக்கிறதாலும் மேலும் நீர் எங்களை கவனிக்கிறதாலும் நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நீர் எங்களது நம்பிக்கை, ஏனென்றால் எங்களை விடுவிக்கிறவர் இன்னும் வாழ்கிறார் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம்.

**விவாதிக்க:**

யோபுவின் மனைவி மற்றும் நண்பர்களின் பதில்கள் பற்றி விவாதிக்கவும்? இவைகளில் எது உதவியாக இருந்தது? எது உதவியற்றதாயிருந்தது? குடினமான சூழ்நிலைகளில் செல்லும் ஒருவருக்கு, அவர்கள் மிகவும் மனமுடைந்து இருக்கும் போது நீங்கள் எப்படி உதவமுடியும்?

தற்போதுமிகவம் கடினமானசூழ்நிலையில் இருக்கும் ஒருநண்பர் உங்களுக்கு இருக்கிறாரா? நீங்கள் அவர்களுக்காக ஜெபித்துஅவர்கள் சார்பாகஆண்டவரிடம் முறையிடமுடியுமா?

ஒருவேளை நீங்கள் கவலை அல்லது மனச்சோர்வை அனுபவித்திருக்கிறீர்களா, மேலும் வாழ்க்கைக்கு அர்த்தமில்லை என்று உணர்ந்திருக்கிறீர்களா? உங்களுடன் பேசுவதற்கும் ஜெபிப்பதற்கும், யோபுவைப் போன்ற நம்பகமான நண்பர் யாராவது இருக்கின்றார்களா? அவர் நம்மீது அக்கறைகாட்டுவதால், நம்முடைய எல்லாச் சுமைகளையும் அவர் மீது போடவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

---

**பாடம் - 20**

**ஒரு பெண்ணின் தோரணை**

*'Inside out'* *(உள்ளே வெளியே)* என்ற திரைப்படம் 11 வயது ரிலே–யின் மகிழ்ச்சி, சோர்வு, கோபம் போன்ற பல்வேறு உணர்ச்சிகளை சித்தரிக்கிறது. அவளுடைய மனச்சோர்வை வெளிப்படுத்தும் போது, அவள் பொதுவாக குனிந்தே இருப்பாள். அவளுடைய வெளிப்புற தோரணை அவளுடைய உள்ளான மனநிலையை பிரதிபலிக்கிறது.

பயம், ஊக்கமின்மை, மனச்சோர்வு , இவைகளை நாம் எதிர்கொள்ளும் போதும் மற்றும் சுமக்கும் போது அவை பெரும்பாலும் நம்முடைய தன்னிலையை சாய்த்து விடுகின்கின்றன. லூக்கா 13:10-17-ல் காணப்படும் பெண்ணிடம் இதைப் பார்க்கிறோம்.

**வளைந்த பெண் (லூக்கா 13:11)**

18 ஆண்டுகளாக, இந்தபெண் ஒருவித ஆவியால் முடக்கப்ட்டாள். அவளது உடல் தோரணையில் மனச்சோர்வு, தனிமை, கூச்சம் மற்றும் சுயமரியாதையின்மை போன்ற உணர்வுகள் இருந்திருக்கலாம். கஷ்டங்கள் நம்மை மூழ்கடிக்கும் போது, மற்றவர்களுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது எத்தனை முறை அப்படி உணர்ந்திருப்போம்? ஆனால் 18 ஆண்டுகளுக்குப் பிறகு, இயேசுவை சந்திப்பதற்கான மகிமையான நேரம் வந்தது.

**"தெய்வீக குணமாகுதலின் விளைவு உடல் சுகத்திற்கு அப்பாற்பட்டது**
**அது ஒரு ஆவிக்குரிய மற்றும் உணர்வுபூர் சுகம்.**

**இயேசு மற்றவர்களிடம் அக்கறை காட்டுகிறார் (லூக்கா 13:12-13)**

**அ.** '***இயேசு அவளைப் பார்த்தார்***'. இயேசுவைச் சுற்றி எத்தனையோ பேர் இருந்தபோதிலும், இந்தப் பெண்ணின் தேவையை அவர் கண்டார். கடவுள் நம்மீது அக்கறை காட்டுகிறார், நம் தேவைகளைப் பார்க்கிறார், நம் துன்பத்தைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுகிறார் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

**ஆ.** '***இயேசு அவளை அழைத்தார்***'. வேதாகமம் அவள் பெயரைக் குறிப்பிடவில்லை என்றாலும், அவர் அவளை அழைத்தார் அது முக்கியமானது. கர்த்தர் நம்மை அழைக்கும்போது, அவர் நம்மை அறிந்திருக்கிறார், நம்முடைய அன்றாட கவலைகளில் நமக்காக நேரம் ஒதுக்குகிறார். எனவே அவருடைய சர்வ அறிவில் ஓய்வெடுப்போம்: கடவுள் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்.

**இ. '*இயேசு அவளிடம் சொன்னார்*'**. அவளிடம் பேசுகையில், அந்தக் காலத்தில் முக்கியத்துவம் இல்லாத ஒரு பெண்ணை அவர் கவனிக்கிறார். கடவுள் இந்தநாட்களில் பைபிள் மூலம் நம்மிடம் பேசுகிறார், சோதனையான காலங்களில் நமக்கு ஆறுதலையும் ஊக்கத்தையும் தருகிறார். அவருடைய பலத்தால் நிரப்பப்படும்படி அவருடைய வார்த்தையைப் கவனிப்போம்.

**ஈ**. ‘***இயேசு அவளை தொட்டார்***’. பார்த்து, கூப்பிட்டு, சொல்வதைத் தாண்டி ஒருபடி செல்கிறார் அவர் அவள் மீது கை வைக்கிறார். இந்த பெண்ணின் வாழ்க்கையை முற்றிலும் மாற்றிய ஒரு தொடுதல். நம்மில் எத்தனை பேர் நம் இறைவனின் அந்த சிறப்பு ஸ்பரிசத்தை உணர்ந்திருக்கிறோம்?

இயேசுவை அணுகினால் மட்டுமே அந்த ஸ்பரிசத்தை நம்மால் உணரமுடியும். எனவே, நாமும், ஆசீர்வாதத்திற்காக மற்றவர்களின் வாழ்க்கையைத் தொடலாம்.

**உ**. ‘***இயேசு*’*அவளைக் குணப்படுத்தினார்*’. அவள் இனி குனிந்து நடக்கமாட்டாள். அவள் தோரணை மாறியது, அவள் நிமிர்ந்தாள், அவள் முகத்தில் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் பிரதிபலித்தது, அவள் கடவுளை மகிமைப்படுத்தவும் துதிக்கவும் தொடங்கினாள். அந்த கூச்சமே மகிழ்ச்சியான, பாடலாகமாறியது. தெய்வீக குணப்படுத்துதலின் விளைவு உடல் நலனுக்கு அப்பாற்பட்டது. அது ஆத்துமீக மற்றும் உணர்வு சம்பத்தப்பட்ட சிகிட்ச்சை.

**விவாதிக்க:**

- ❖ **உங்கள் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள் மற்றும் அதிசயங்கள் மற்றும் ஜெபத்திற்கு கிடைத்த பதில் பற்றி சிந்தியுங்கள். கர்த்தர் செய்த அனைத்திற்கும் நீங்கள் கடைசியாக எப்போது நன்றி சொன்னீர்கள்?**
- ❖ **உங்கள் தோரணை. இது உங்கள் உள்ளான செயல்பாடுகளின் உண்மையான பிரதிபலிப்பா?**

**சுயநலமும் கோபமும் கொண்ட மதவாதி (லூக்கா 13:14-17)**

**அ**. இயேசு ஓய்வுநாளில் குணமாக்கியதால் ஜெப ஆலயத் தலைவர் கோபமடைந்தார். அவர் சுயநல நிலைப்பாடு கொண்டிருந்தார். சிலர் எப்போதும் தங்கள் ஆத்மீகக் கண்களைத் திறக்க மறுப்பார்கள் மற்றும் கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் எதிராக இருப்பார்கள்.

**ஆ**. அவர்கள் தவறான மதிப்புகளை நடைமுறைப்படுத்தினர். ஓய்வுநாளைக் கடைப்பிடிப்பதைவிட மற்றவர்களையும் அவர்களின் தேவைகளையும் கவனிப்பது முக்கியம். ஓய்வுநாளில் எருதையோ கழுதையையோ தண்ணீருக்கு அழைத்துச் செல்லலாம் என்றால், அந்தப் பெண்ணை ஏன் அவளது கட்டுகளிலிருந்து விடுவிக்கக் கூடாது என்று இயேசு சொன்னார்

**இ**. அவர்கள் வெட்கப்பட்டார்கள். இயேசு தம்முடைய எதிரிகளுக்கு எதிராக கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினார்: “மாயக்காரரே!“ இயேசு இந்தப் பெண்ணின் நிலையைப் பாதுகாக்கிறார், அதிகாரத்தால் எதிரிகளை அவமானப்படுத்துகிறார், மக்கள் முன்னிலையில் எதிரிகளை அவமானப்படுத்துகிறார், “ஆனால் அவர் செய்த அனைத்து அற்புதமான செயல்களிலும் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.”

நம் வாழ்வில் அவர் செய்த ஆச்சரியங்கள் மற்றும் அற்புதங்களைப் பற்றி மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம். கடவுள் உங்கள் வாழ்க்கையில் எத்தனை அற்புதங்களைச்

செய்திருக்கிறார் என்று சிந்தித்துப் பாருங்கள்: குணமடைய உங்கள் பிரார்த்தனைக்கு அவர் பதிலளித்தபோது, பற்றாக்குறைகாலங்களில் அவர் உங்களுக்கு செய்து வைத்திருந்த முன்னேற்பாடுகள், உங்களுக்கு வேலை கொடுத்தபோது, துன்பங்களுக்கு மத்தியில் ஆறுதல் அளித்து, புயலின் நடுவே அமைதியைக் கொடுத்தபோது அந்த விபத்தில் உங்களைப் பாதுகாத்தார். நீங்கள் அவரை அடையாளம் கண்டுகொண்டீர்களா? நீங்கள் அவருக்கு நன்றி சொன்னீர்களா? நீங்கள் அவரைப் பாராட்டினீர்களா? நீங்கள் இன்னும் குனிந்து, உங்கள் கவலைகளிலும் தேவைகளிலும் மூழ்கியிருப்பதைக் கண்டால், இயேசுவைப் பார்த்து, அவருடைய குரலைக் கேட்டு,அவருடைய அன்பின் ஸ்பரிசத்தை உணர உங்களை அழைக்கிறேன்.

பிதாவே, நான் என்மேல் கொண்ட உமது அன்பையும் வல்லமையையும் உணருகிறேன். நீர் என்னை அறிந்திருக்கிறபடியால் என்னை பேர் சொல்லி அழைத்திருக்கிறீர். எனது தேவைகளை நீர் அறிந்திருக்கிறீர். எனது பெலவீனங்களையும் நீர் அறிந்திருக்கிறபடியால் என்னை நேசித்து மன்னிக்கிறீர். உமது வல்லமையினால் மாத்திரம் நீர் என்னை நடத்தும். நான் தனிமையை உணரும்போது எனக்கு சமாதானமும் ஞானமும் தந்து எனக்கு உற்ற தோழனாயிருந்து, நீர் என்னை எதிர்காலத்துக்குள் நடத்துகிறீர். நான் எழுந்திருக்கும்போதே உம்மை துதித்து உமது நாமத்தை கனம் பண்ணி, உம்மை நோக்கவும் உமது தொடுதலை விரும்பும் மற்றவர்களுக்கு சேவை செய்ய எனக்கு உதவியருளும். ஆமென்!

**மேஜர் சாரா ஓர்டிஸ்**

**மெக்ஸிகோ**

நான் என் கணவரோடு 25 ஆண்டுகளாக ஒரு உத்தியோஸ்தராக பணி செய்து வருகின்றேன். நாங்கள் “தேவனுடைய அன்பின் தூதுவர்கள்” என்ற அணியில் பயின்றவர்கள். நான் தற்போது வடக்கு மெக்ஸிகோ பகுதியில் உள்ள டிஜூவானா என்ற இடத்தில் உள்ள ஒரு முகாமில் நாடுவிட்டு குடிபெயர்ந்து வந்தோருக்காக பணி செய்து வருகின்றேன். இயேசுவை தங்கள் இரட்சகராக அறிந்த 4 குழந்தைகளுக்கு நான் தாயாகவும், 2 பெண் பேரக்குழந்தைகளுக்கு பாட்டியாகவும் இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். 39 ஆண்டுகளாக இரட்சணிய சேனையில் பணிசெய்து ஓய்வு பெற்ற எனது பெற்றோரின் வாழ்க்கையினால் நான் உற்சாகப்படுத்தப்பட்டவள்.

---

பாடம் - 21

**அனைவருக்கும் தாராளமானபுத்துணர்வு!**

நீதிமொழிகள் 11:25Major TRACY BRIGGS

"மற்றவர்கள்"- இது இயேசுவின் வாழ்க்கையைப் பற்றியஒருவிளக்கம்,நாம் பின்பற்றுவதற்கான ஒரு எடுத்துக்காட்டு.

'எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ,அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் (நீதிமொழிகள் 11:25)

கலிலேயா கடல் வடக்கு இஸ்ரவேலில் காணப்படுகிறது. இந்த கடல், விலங்குகள் மற்றும் தாவரங்களின் வாழ்விடமாக உள்ளது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் இந்த நீர்நிலையிலிருந்து மீன்பிடித்து வருகின்றனர். இது ஒருவாழ்க்கை கடல். இருப்பினும், சுமார் 105 கிலோமீட்டர் தெற்கே சவக்கடல் உள்ளது. இந்த சவக்கடல் சாதாரணக் கடலைவிடஒன்பது மடங்கு உப்பானது. இந்த உப்புத் தன்மைச் சுற்றுச் சூழல் மிகவும் கடுமையாய் இருப்பதனால் விலங்குகள் மற்றும் தாவரங்கள் அங்கே இருக்க முடியாது.

ஒன்று எப்படி உயிருடன் நிரம்பி வழிகிறது, மற்றொன்று சவக்கடல் என்று அழைக்கப்படுகிறது? கலிலேயா கடல் வடக்கிலிருந்து தோன்றி,தெற்கே யோர்தான் நதியில் ஓடுகிறது. தண்ணீர் வருகிறது,தண்ணீர் வெளியேறுகிறது. இருப்பினும், சவக்கடலில் தண்ணீர் மட்டுமே பாய்கிறது, வெளியேறவில்லை.

ஒரு கடல் பெறுகிறது மற்றும் கொடுக்கிறது. மற்றொன்று எடுக்க மட்டுமே செய்கிறது.

இந்த உண்மையை நாம் நம் உடலிலும் உணர்ந்து கொண்டிருக்கிறோம். நான் உட்கொள்வது நான் பயன்படுத்தும் ஆற்றலைவிட அதிகமாக இருந்தால், எனக்கு ஒரு பிரச்சனை இருப்பதாக எனக்குத் தெரியும். நான் எடையை அதிகரிக்கப் போகிறேன், அது உயர் இரத்தசர்க்கரை, ஆரோக்கியமற்ற இதயம், அதிகக் கொழுப்பு போன்றவற்றுக்கு வழி வகுக்கும். நான் வெளியேக் கொடுக்க வேண்டும், உடற்பயிற்சி செய்யவேண்டும் மற்றும் என் தசைகளை பயன்படுத்த வேண்டும். அப்போது நான் ஆரோக்கியமாகவும் வலுவாகவும் இருப்பேன். நான் மட்டும் எடுத்துக் கொண்டால், நான் நோய்வாய்ப்படுகிறேன், ஆனால் கொடுப்பதில் நான் ஆரோக்கியமாக இருக்கிறேன்.

இயற்கையான உலகில், உள்நோக்கிய கவனம் மரணம், இருள் மற்றும் நோய் ஆகியவற்றைக் கொண்டுவருகிறது, ஆனால் வாழ்க்கை, ஒளிமற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றைக் கொடுக்கிறது. இது இயற்கையான கொள்கை மட்டுமல்ல, கடவுளிடமிருந்து நமக்குக் கொடுக்கப்பட்ட ஆன்மீகக் கோட்பாடு.

பிலிப்பியர் 2:6-11-ல் இயேசுவின் தீவிரத்தன்மையை நாம் இங்கே ̇ காண்கிறோம்: இயல்பில் கடவுளாக இருந்தவர்,கடவுளுடன் சமமாக இருப்பதைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்தக் கருதவில்லை. மாறாக,அவர் ஒருவேலைக்காரனின் இயல்பை எடுத்துக் கொண்டு, மனித சாயலில் உருவாக்கப்பட்ட தன் மூலம் தன்னை ஒன்றும் செய்யவில்லை. ஒரு மனிதனாக தோற்றத்தில் காணப்பட்ட அவர், மரணத்திற்குக் கீழ்ப்படிந்துதன்னைத் தாழ்த்தினார் - சிலுவையின் மரணம் கூட! ஆகையால்,தேவன் அவரை உயர்ந்த இடத்திற்கு உயர்த்தி, எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குக் கொடுத்தார், வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழும் ஒவ்வொரு முழங்காலும் இயேசுவின் நாமத்தில் முடங்கவேண்டும், மேலும் பிதாவாகிய தேவனுடைய மகிமைக்காக இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்பதை ஒவ்வொருநாவும் அறிக்கையிட வேண்டும்.

“மற்றவர்கள்“ - இது இயேசுவின் வாழ்க்கையைப் பற்றியஒரு விளக்கமும்,நாம் பின்பற்றுவதற்கான ஒரு எடுத்துக்காட்டும் ஆகும். எல்லா தலைமுறையினரிடமும் அக்கறைகாட்டுவதில் இயேசுவின் முன் மாதிரியைப் பின்பற்றுபவர்களுக்கு, ஆரம்பகால திருச்சபைக்கு கடவுளின் அறிவுறுத்தலில் அதை மீண்டும் மீண்டும் வாசிக்கிறோம். இளைஞரும், முதியவர்களும், இடைப்பட்டவர்களும், இயேசு செய்ததைப் போல அவர்கள் அனைவருக்கும் சேவை செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இந்த வசனங்களைப் பாருங்கள்: பிலிப்பியர் 2:4 1கொரிந்தியர் 10:24 எபேசியர் 5:21 மத்தேயு 20:28. ‘மற்றவர்கள் தீவிரமான வாழ்க்கை வாழ்கிறார்கள். இது எளிதானது அல்ல. இது கலாச்சாரத்திற்கு எதிரானது, ஏனென்றால் நாம் தன்னை உள்வாங்கி கொள்ளும் ̇ உலகத்தில் வாழ்கிறோம். எவ்வளவு சுயநலம், என் உரிமைகள், என் உரிமை, என் வசதி.

“மற்றவர்களை மையமாக வைத்து“ இருப்பது நமக்கு எப்படிப்பட்ட ஒருசவால். இன்னும் நான் மற்றவர்களுக்கு புத்துணர்ச்சி அளிக்கும் போது, நான் என்னைப் புதுப்பித்துக் கொள்கிறேன். கடவுளுடைய ஒருபெயர் பண்டைய நாட்களில் *எல்ரோயி*– நீர் என்னை காண்கிற தேவன் என்று அறியப்பட்டது. நம் தேவன் நம்மைப் பார்க்கிறார். மற்றவர்களுக்காக வாழ்பவர்களுக்கு வெகுமதியை அளிப்பதாக அவர் உறுதியளிக்கிறார் (சங்கீதம் 149).

விவாதிக்க:

- வேறொருவருக்கு உதவி செய்வதால் நீங்கள் எந்தவிதத்தில் பயனடைந்தீர்கள்?
- என்னவிதமான தெய்வீக சிலாக்கியங்களில் இயேசு உங்களை கைவிட்டார்? இயேசு உங்களுக்காக எதைக் கொடுத்தார்?
- கடவுளின் பிரதியுத்தரம் ̇ என்ன?
- என்ன வழிகளில் சுயநல நடத்தைகளை வெளிப்படுத்துகிறீர்கள்? இவற்றை எப்படி சமாளிப்பது?

- இந்த வாரத்தில் உங்கள் திறமைகள், அறிவு, உடைமைகள், அன்பு அல்லது நேரத்தை எல்லா தலைமுறையினருக்காகவும் பயன்படுத்துவதற்கான ஒரு வழி என்ன?

மத்தேயு10:42:'*சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற் போகான்'என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.*

லூக்கா6:35:உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்,அவர்களுக்குநன்மைசெய்யுங்கள், கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள். அப்பொழுதுஉங்கள் பலன் மிகுதியாக இருக்கும், உன்னதமானவருக்குநீங்கள் பிள்ளைகளாக இருப்பீர்கள், அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே.

இயேசுவை நம் சொந்தவாழ்வில் அறிந்து அனுபவிக்கும்போது, மற்றவர்களுக்காக நாம் அக்கறை கொள்ளும்போது, அதை நாம் பற்றாக்குறையான இடத்திலிருந்து செய்யாமல், பாதுகாப்பு, செழுமை, முழுமை மற்றும் அன்பு நிறைந்த இடமாகச் செய்கிறோம். கலிலேயா கடல் அதன் மிகுதியிலிருந்து நிரம்பி வழிகிறது, மேலும் நாம் கடவுளுக்கு சொந்தமானவர்கள் என்று தெரிந்தும், நம்பிக்கையுடன், நேசிக்கப்படும் இடத்திலிருந்து மற்றவர்களை நேசிக்கமுடியும். ஏனென்றால், நம்மைப் பார்க்கும் ஆண்டவர் நமக்கு இருக்கிறார், மற்றவர்களுக்குப் புத்துணர்ச்சிக் கொடுப்பது போல நாமும் புத்துணர்ச்சி பெறுவோம்.

ஆண்டவராகிய இயேசுவே, இன்று நான் புத்துணர்ச்சி பெறக்கூடியவர்களை எனக்குக் காண்பியும் அதைத் தைரியமாக செயல்படுத்த எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில். ஆமென்.

மேஜர் ட்ரேசிபிரிக்ஸ்

ஆஸ்திரேலியா

நான் ஒரு தெய்வீக, வேடிக்கையான, அற்புதமான மனிதரை திருமணம் செய்து 30 வருடங்கள் ஆகிறது. எங்களுக்கு மூன்று அழகான குழந்தைகள், இரண்டு மகள்கள் மற்றும் ஒருமகன், ஒரு அழகான மருமகள் மற்றும் மருமகன் உள்ளனர். எங்களுக்கு மிக அழகான18 மாத பேரன் இருக்கிறார்,அவர் எங்களின் உண்மையான ஆசீர்வாதம்! நானும் என் கணவரும் 27 ஆண்டுகளாக உத்தியோஸ்தர்களாக இருக்கிறோம், நாங்கள் ஒன்றாக ஊழியத்தில் கடவுளைச் சேவிக்க விரும்புகிறோம். நான் வடக்கு நியூசவுத்வேல்ஸில் ஒரு பகுதி உத்தியோஸ்தராக உள்ளேன்.

---

பாடம் - 22

## தலைமுறைகளுக்கிடையில் பன்முகத்தன்மை

1கொரிந்தியர் 12:27

கேப்டன் வில்லேக் வான் டெர் வுட்-வெனிஸ்

"'நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியே நீங்கள் அவயவங்களுமாயிருக்கிறீர்கள்' (1கொரிந்தியர் 12:27).

சபையில்,நாம் ஏன் ஒருவருக்கொருவர் ஆவியானவரால் கொடுக்கப்பட்ட கிருபைகளை கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதை இந்த வேதவசனம் ஒரு மாதிரியாகவும் சரியாகவும் விளக்க பயன்படுகிறது. ஒவ்வொருவரும் மதிக்கப்படுகிறார்கள் மற்றும் கவனிக்கப்படுகிறார்கள், ஏனெனில் அவர்களின் தாலந்துகளால் சபையானது அதன் முழு வளர்ச்சியினை அடைய அதற்கு உதவிசெய்யவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே வழங்கப்படுகின்றன.

நமது ஆவிக்குரியவரங்களைப் பற்றி அறிய விரிவான கேள்வித்தாள்களுடன் கூடியதிட்டங்கள் உள்ளன. சிலருக்கு, இந்தத் திட்டங்கள் தங்கள் சபையின் ஊழியத்தை மறுவடிவமைக்க உதவுகின்றன,ஆனால் வேறுசிலரோ இதனை எந்த ஒரு பின்தொடர்தலும் இல்லாத ஒரு கடினமான சோதனையாக உணரலாம். ஒரு இரட்சணியசேனை வீரியாக மற்றும் ஒரு படைஸ்தல உத்தியோஸ்தியாக நான் அத்தகைய நிகழ்ச்சிநிரலின் ஒரு அங்கமாக இருந்த காலங்களில், இது போன்ற பரிசோதனையை எடுக்க ஆர்வமாக உள்ளவர்கள் பெரும்பாலும் குறைந்தது 30 வயதுடையவர்களாக இருப்பதை நான் கவனித்தேன். இளம் வயதுள்ளளோர்களிடம் இக்கேள்வித்தாள்களைக் நிரப்புவதைக் குறித்துக் கேட்கப்பட்டது, ஆனால் அவர்கள் மறந்துவிட்டதினால் அவர்களைத் தொடர்ந்து ஊக்கப்படுத்தாமையாலோ, அல்லது அவர்களை பொருட்படுத்தாமல் விட்டுவிட்டதினாலோ அவர்கள் அதனைநிரப்ப இயலவில்லை. எனவே, அடுத்து தொடர்ந்துவரும் ஆண்டுகளுக்கான எங்கள் "தரிசனம்"பெரும்பாலும் நமது முழு சபையையும் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தாத நபர்களின் பங்களிப்பை அடிப்படையாகக் கொண்டது.

வெட்கத்தைவிட்டு கூறுவதானால், ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு இதைப் பற்றி சிந்தித்துப் பார்த்தால், இந்த வேதவசனத்தை 'தலைமுறைகளுக்கிடையில் பன்முகத்தன்மை' என்ற தலைப்பில் நாம் பயன்படுத்தலாம் என்றுநான் நம்புகிறேன். கிறிஸ்துவின் உடல் அதன் வரங்களின் கூட்டுத்தொகை மட்டுமல்ல, மாறாக, பல்வேறு தாலந்துகளைக் கொண்டிருக்கும் பலதர மக்களின் கூட்டுத் தொகையாகும்.

இதை இன்னும் கொஞ்சம் தெளிவுபடுத்த, "பன்முகத்தன்மைக் கொண்டஊழியங்கள் மற்றும் "தலைமுறைகளுக்கு இடையிலான ஊழியங்கள்'' என்ற சொற்களைப் பயன்படுத்த விரும்புகிறேன். இத்தகைய ஊழியங்கள் எல்லா தலைமுறையினரும் உண்மையில் ஒரே அறையில் ஒன்றாக

இருக்கும்போது, ஆனால் தொடர்பு கொள்ளவோ அல்லது அவர்களை ஒன்றிணைக்கவோ கூடாதநிலையில் நடக்கிறது என்று Adcock1எனும் விளக்கக் கையேடு கூறுகிறது. படைஸ்தல ஆராதனையின் போது போது குழந்தைகள் தங்களுக்குரிய சிறார் கூட்டத்திற்குச் செல்கிறார்கள், மறுபடியும் ஆராதனை முடிந்து காபி, டீ பரிமாறப்படும் போது, மக்கள் அனைவரும் நன்றாகப் பழகுவதுபோல் தோன்றினாலும், தூரத்தில் இருந்து பார்க்கும் போது, வயதானவர்கள் ஒருவரோடுஒருவர்,பெற்றோர்கள் குழந்தைகளுடன் மட்டுமேபேசுவதைக் காணலாம். இசைக்கலைஞர்கள் மற்றும் பதின்வயதினர் எங்கோஒரு மூலையில் அமர்ந்துதங்கள் சொந்த வேலையைச் செய்கிறார்கள், தலைமுறைகளுக்கிடையே ஊழியங்கள் எனும் போது அது அனைவரையும் கலந்துரையாட ஊக்கப்படுத்துகிறது. ஒருவருக்கொருவர் தங்களுக்குள் சவுரியமாக கருதும் ஜனங்களிடமும், தலைமுறையினரிடமும் மட்டும் கலந்திருக்காமல் எல்லைக் கடந்து தாண்டிவரவும் சம்பாஷிக்கவும் ஊக்கப்படுத்துகிறது.

**ஒவ்வொருவரின் ஆவிக்குரியதாலந்துகளைப் பற்றிநாம் சிந்திக்கவேண்டும்.**

வேதத்தில் பன்முகத் தன்மை கொண்ட உறவுகளின் பல உதாரணங்களை நாம் காணலாம்:

- பவுல் திமோத்தேயுவின் இளமைக் காலத்தில் அவரையாரும் இகழக் கூடாது என்று அறிவுறுத்தினார், ஆனால் அவரை சமூகத்தை வழி நடத்த ஊக்கப்படுத்தினார் (1தீமோத்தேயு4)

சாமுவேலுக்கு வழிகாட்டிய ஏலிக்கு, நள்ளிரவில் சாவேலை அழைத்ததுயார் என்பது குறித்து விளக்கம் தேவைப்பட்டது. பின்னர், சாமுவேல் தாவீதின் வழிகாட்டியாக ஆனார் - அவர் - இளையமகன் - அவரது சொந்தத் தந்தையால் தகுதியானவராகக் கருதப்படவில்லை.

இஸ்ரவேல் ஜனங்களின் வழிகளில் ரூத்துக்கு அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்கிய நகோமி. மோவாபின் அந்நியரான ரூத், தாவீதின் கொள்ளுப் பாட்டியாகமாறினார்.

வெவ்வேறுதலைமுறைகள் வழங்கக்கூடிய சாத்தியக் கூறுகளைப் பார்ப்பதற்குப் பதிலாக, நம் சொந்த தலைமுறையினருக்குப் பிரியமானதை அச்சுறுத்தும் விஷயங்களில் கவனம் செலுத்த முனைகிறோம். உதாரணமாக: பழையதலைமுறையினர் “நிலையை“ கட்டியெழுப்ப பல ஆண்டுகள் செலவழித்தனர் மற்றும் “அடுத்துவருபவர்களால்“ அச்சுறுத்தப்படுவதாக உணர்கிறார்கள். இளைய தலைமுறையினர் இந்த அணுகுமுறையை முன்னேற்றத்திற்கும் புதுமைக்கும் தடையாகப் பார்க்க முடியும்.

**விவாதிக்க:**

**பன்முகத் தன்மை கொண்ட ஊழியங்கள் மற்றும் “தலைமுறைகளுக்கு இடையிலான ஊழியங்கள்'' இடையே உள்ள அலைகற்றைளில் உங்கள் படைஸ்தலத்தை எங்கே அடையாளம் காண்கிறீர்கள்?**

**குறிப்பிடப்பட்ட தொடக்க இடங்களைப் பார்க்கும்போது: முதலில் எதைக் குறிப்பிடும்படி கடவுள் உங்களிடம் கூறுகிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?**

**இந்தச் செயல்முறையைத் தொடங்க நீங்கள் யாருடன் உரையாடவேண்டும்?**

கடவுள் தனக்கான ஒவ்வொரு தலைமுறைகளையும் அழைப்பதை வேதம் முழுவதும் காண்கிறோம். ஒருவரையொருவர் கவனித்துக் கொள்வதன் மூலமும், ஒவ்வொரு நபரும் சபையின் சமூகத்திற்கு என்ன வழங்க முடியும் என்பதை மதிப்பிடுவதன் மூலமாக. நாம் அந்த முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டாமா? உங்கள் சொந்த தலைமுறையைத் தவிர வேறு ஒருவரை நீங்கள் கடைசியாக எப்பொழுது யாதொரு முன் தயாரும் திட்டமும் இன்றி அவர்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவே மட்டும் அவர்களை அணுகியிருக்கின்றீர்கள்?

உங்களிடமிருந்துகற்றுக்கொள்ளஅல்லதுஉங்களுக்குகற்பிக்கநீங்கள் கடைசியாகஒருவரைஎப்போதுஅழைத்தீர்கள்?

எங்குதொடங்குவது? '"நீங்களேகிறிஸ்துவின் சரீரமாயும் தனித்தனியேநீங்கள் அவயவங்களுமாயிருக்கிறீர்கள்'(1கொரிந்தியர் 12:27) உண்மையிலேயே பிரதிபலிக்கும் உங்கள் விருப்பத்தில் கருத்தில் கொள்ள சில ஆரம்ப இடங்களை Adcock1 வழங்குகிறது.

தொடங்கும் இடங்கள்:

1. சேகரிப்பு: ஒரேஅறையில் வெவ்வேறுதலைமுறையினர் எப்போது,எங்கே இருக்கிறார்கள்? இதைப் புரிந்துகொள்வதற்கான நேரமாக மாற்ற முயற்சிக்கவும், அடையவும் - ஒரே உடல் என்ற உணர்வை உருவாக்கவும். விருந்தின் பழைய ஏற்பாட்டின் படத்தைக் கவனியுங்கள்: அனைவரும் வரவேற்கப்படும் ஒரு பகிரப்பட்ட உணவு, அது தெய்வீக பழங்குடியினரைப் பிரதிபலிக்கிறது.

2. உறவுகளை உருவாக்குதல்: இணைக்கவும்! ஒருவருக்கொருவர் பேசுவதன் மூலம், இந்தநாள் மற்றும் வயதில் முதியவராகவோ அல்லது இளமையாகவோ) இருப்பது எப்படி என்பதைப் பற்றி நீங்கள் மேலும் புரிந்து கொள்வீர்கள். கிறிஸ்துவின் சீடராக இருப்பதென்பதன் உங்கள் பொருள் என்ன?

3.வழிபாட்டை மேம்படுத்துதல்: இது வேறொரு அல்லது வேற்று வழிபாட்டு கூட்டத்தை சேர்ப்பது பற்றியது அல்ல. இது ஒட்டு மொத்த படைஸ்தலத்தின் வாழ்க்கை மற்றும் அதன் செயல்பாடுகளுக்கு ஒரு

மனநிலையை உருவாக்குவது பற்றியது: “எல்லோரும், வயதைப் பொருட்படுத்தாமல், அணுகலாம் மற்றும் உணரலாம்

"பழங்குடி” அல்லது சமூகத்தின் ஒருபகுதி, தேவைப்படும் போது ஆதரவைப் பெறவும் மற்றவர்களின் நலனுக்காக சேவை செய்யவும் முடியும். சிறியவர் முதல் பெரியவர் வரை ஒவ்வொரு உறுப்பினரும், மற்றவர்களுடன் சமூகத்தின் ஒருபகுதியாக இருப்பதை அங்கீகரித்து, தீவிரமாக பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுவது.

4. தலைமைத்துவம்: தலைமைத்துவத்தில் அனைத்து தலைமுறையினரும் நமக்குத் தேவை. அதிகாரம் என்பது பகிரப்பட்டப் பொறுப்பாக இருக்கலாம்


- எல்லாவயதினரும் ஒருவருக்கொருவர் பெறுவதற்கும் வழங்குவதற்கும் நிறைய இருக்கிறது. மேசையைச் சுற்றி இளைஞர்களை அழைத்துச் செல்லுங்கள். எப்போதாவது தங்கள் கருத்தைப் பகிர்ந்து கொள்ள அவர்களை அழைக்கவேண்டாம், ஆனால் அவர்கள் முடிவுகளை எடுக்கச் செய்யுங்கள்.

‘கடவுள் தன்னுடன் துணையாக இருக்கும்படி நம்மை அழைக்கிறார், ஏனெனில் அவர் நம்மால் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அதிகமாகச் செய்கிறார். நீங்களும் நானும் எங்கள் தனிப்பட்ட நம்பிக்கைகள் மற்றும் கனவுகளுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை, அவை உற்சாகமாக இருக்கலாம். - மார்கஸ் ஓவர்ஸ்ட்ரீட்

ஆண்டவரே, தலைமுறைதலைமுறையாக நீர் மகிமைப்படுவீராக. உம்முடைய அன்பான கண்களால் ஒருவரையொருவர் பார்க்க எங்களுக்கு உதவிசெய்யும். ஆமென்.

**கேப்டன் வில்லேக் வான் டெர் வூட்-வான் டி வெனிஸ்**
**நெதர்லாந்து,செக் குடியரசுமற்றும் ஸ்லோவாக்கியா**
கேப்டன் வில்லேக் ஒரு படைஸ்தலத்தின் உத்தியோகஸ்தராகவும் சிற்றாலய குருவாகவும் பணியாற்றியுள்ளார். அவர் இப்போது ஆம்ஸ்டர்டாம்-கிழக்கில் உள்ள படைஸ்தலத்தின் சமூகமையத்தில் வாராந்திர நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார். இவர்களது வயதுமுதிர்ந்த மூன்று பிள்ளைகள் வீட்டில் வசித்துக் கொண்டே கல்லூரிபடிப்பில் உள்ளனர்,. Willeke மக்கள் மீது ஒருபேரார்வம் கொண்டவர் ஆவார்.

---



Produced 2023
The Salvation Army International Headquarters
101 QUEEN VICTORIA STREET, LONDON EC4V 4EH